

எம்.எம்.எம். நூறுல்ஹக்

# ஈமானியப் பேரொளிகள்



எம்.எம்.எம். நூறுல்ஹக் (மிஹ்லார்)
Diploma in mass Media



# ஈமானியப் பேரொளிகள்

மருதம் கலை இலக்கிய வட்டம்
சாய்ந்தமருது

ஈமானியப் பேரொளிகள்

TITLE OF THE BOOK : EEMANIYAP PEROLIGAL / SUBJECT: ISLAM / FIRST EDITION : 18.01.2009 / AUTHOR : M.M.M. NOORUL HAGU J.P. (DIPLOMA IN MASSMEDIA) / ADDRESS : 129B, OSMAN ROAD, SAINTHAMARUTHU-05 / TEL : 0772612094 / COPY RIGHT : AUTHOR / PUBLISHED B Y : MARUTHAM KALAI ILAK KIYA VATTAM (REGD. NO. NEP/EM/CA/AM/SM/05/2004/ TYPESETTING : JESA GRAFIX, 79/1, AL-MANAR ROAD, MARUTHAMUNAI-02. 0672225032 & MISS. RISLA / COVER : M. NAWAS SAWFI / BOOK LAYOUT : S.A. JEZEEM / PRINTED BY : AN - NOOR PRINTERS, KALMUNAI, TEL : 0776167535 / BOOK SIZE : 1/8 / PAPER : BANK PAPER 75 GSM / PAGES : xvi + 88 / PRIZE RS: 200/= / ISBN : 978- 955 - 8105 - 02 -03

# ஈமானியப் பேரொளிகளின் நகர்வுகள்


| | |
|---|---|
| முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பேரொளி | |
| ஈமானியத்தின் ஊடாக அறியப்பட வேண்டியது | v - vi |
| நவீன சிந்தனைகளில் ஷிர்க் ஒரு குறியீடு | vii - viii |
| முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சிறப்புக்களில் எழுத்துக்களினால் ஓர் அமல் | ix - x |
| பேரொளி சிதறும் முன்வாசல் | xi - xiii |
| பேரொளியின் தடம் | xiv |

**முஹம்மது நபி (ஸல்) அவர்கள்** ***01 - 30***

01. ஆதியும் இறுதியுமான நபி
02. ஈமானின் பேரொளி
03. அல்லாஹ்வின் அருட்கொடை
04. மனிதத்துவத்தின் அகமியங்கள்
05. நபி(ஸல்) அவர்களது நினைவுச் சின்னங்கள் அல்லாஹ்வின் அருள்மிக்கவை
06. நேசிப்பது நம்பிக்கையாகும்
07. அல்லாஹ்விற்கு வழிப்படும் பாதை
08. மதீனா நகர் புனிதம் நிறைந்தது
09. புனித ரௌழா ஷரீபை தரிசித்தல்
10. ஸலவாத் ஓர் இபாதத்

**அல்லாஹ்வின் தரிசனம்** ***31 - 38***

01. மறுமையில் அல்லாஹ்வைக் காணலாம்
02. கஷ்பினால் தரிசிக்க முடியும்

**அவுலியாக்கள்** ***39 - 84***

01. இஸ்லாத்தில் விலாயத்துண்டா?
02. அவுலியாக்கள் என்போர் யார்?
03. அவுலியாக்கள் முக்தியின் சொத்துக்கள்
04. அவுலியாக்களின் இன்னொரு வதனம்
05. ஈருலகிலும் மோட்சமுடையவர்கள்
06. அற்புதங்கள் அவுலியாக்களின் அடையாளமா?
07. அவுலியாக்கள் மறுப்பு இஸ்லாத்தில் வெறுப்பு

08. இறை நெருக்கத்தில் உறைந்தவர்கள்
09. அவுலியாக்கள் நம் போன்றவர்களல்ல!
10. இறை நேசர்கள் இறப்பதில்லை
11. நப்ஸுப் போராட்டம் ஜிஹாத் ஆகுமா?
12. ஆறு மாதங்களாகியும் அழியாத உடல்
13. நாற்பத்தியாறு வருடங்களாகியும் அழியாத உடல்
14. மரணத்தின் பின்னரும் சிலரின் உடல் அழியாது
15. ஹலால் தெளிவாகக் கூறப்படல் வேண்டுமா?
16. சுயமாக இயங்குபவன் அல்லாஹ் மாத்திரமே!
17. முஸ்லிம்கள் மீது தவறிய எண்ணம் கொள்ளலாமா?
18. அல்லாஹ்வின் உதவிகள் நேரிடையாக உதயமாவதில்லை!
19. ஷிர்க் என்றால் என்ன?
20. சுலைமான் நபி (அலை)யும் துல்கர்னைனும் தவறியவர்களா?
21. அற்புதங்கள் நிகழும் இடங்களில் துஆக் கேட்கலாமா?
22. நபிமார்கள் பாவித்த உடைகளிலும் அருளுண்டு!
23. நபியுல்லாஹ் (ஸல்) அவர்களும் ஸியாரத் செய்தலும்
24. அமல்களைக் கொண்டு வஸீலாத் தேடுதல்
25. ஆளைக் கொண்டு உதவி தேடுதல்
26. மரணித்த பின்னரும் உதவி தேடல்
27. வஸீலாவின் மூன்று வழிமுறைமைகள்
28. நிஸ்பத்து மஜாஸி, நிஸ்பத்து ஹக்கீக் என்றால் என்ன?
29. இரவல் சேர்மானத்திற்கு குர் ஆனே ஆதாரம்
30. வஸீலாத் தேடலை வலியுறுத்தும் மேலும் சில ஆதாரங்கள்
31. சில சந்தேகங்களும் விளக்கங்களும்
32. அவுலியாக்களிடம் நேர்ச்சைவைக்கலாமா?
33 நேர்ச்சைகள் இருவகைப்படும்
34. அனுமதிக்கப்பட்ட நேர்ச்சையும்,
அதன் வழிமுறைமைகளும்

**தகவல் மூலம்** 85 - 87

# முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பேரொளி ஈமானியத்தின் ஊடாக அறியப்படவேண்டியது!

அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.
பிஸ்மில்லாஹீர் ரஹ்மானு ரஹீம்.

''**அல்லாஹ்** முதன் முதலில் எதைப்படைத்தான் என்று நபிமணித் தோழர் ஜாபீர் (ரழி) கேட்டதற்கு, உமது நபியின் ஒளியையே அல்லாஹ் முதலில் படைத்து அதிலிருந்தே வையகத்தை வியாபித்ததாக'' நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

முதன் முதலில் படைக்கப்பட்ட இந்த ஒளியைத்தான் சூ∴பிகள் நூரேமுஹம்மதி என்றும் ஹகீகத்தே முஹம்மதியா என்றும் கூறுகின்றனர். படைப்புக்களின் மூலம் அல்லாஹ் றப்பில் ஆலமீனாக இருப்பது போன்று ரஸுல் (ஸல்) அவர்கள் ரஹ்மத்துல் ஆலமீன் ஆனார்கள்.

படைப்பின் இருப்பிற்கும், நிலைப்பிற்கும் றப்புல் ஆலமீன், ரஹ்மத்துல் ஆலமீன் ஆகிய இருவரின் உதவி இன்றியமையாததாகும். இவ்விரண்டில் ஒன்றில்லையேல் உலகில் படைப்பின் இருப்புக் கேள்விக்குறியாகி விடும்.

படைப்புக்கு நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒளிமூலமாக இருப்பதனால், படைப்பிற்கு நபி(ஸல்) அவர்கள் மூலமாகவும், தாயாகவும் உள்ளார்கள். ஆதலால் அனைத்துப் படைப்பிலும் அன்னார் கருணை கொண்டிருப்பதுடன் அனைத்துப் படைப்பும் அன்னாரை விசுவாசிப்பது கடமையாகவும் இருக்கின்றது.

ரஸுல் (ஸல்) அவர்கள் அனைத்து ஒளியையும் மிகைத்து நின்றதனால் ஒளியால் படைக்கப்பட்ட வானவத்திருத்தூதர், மலக்குகளின் தலைவர் ஜீப்ரில் (அலை) அவர்கள் கடக்கத்தயங்கிய பகுதியை மி∴ராஜ் இரவில் கடந்து அல்லாஹ்வை நேர்முகமாகப் பார்த்து உரையாடிவிட்டு வந்தார்கள்.

உலகில் மக்கள் மீதுள்ள அன்பின் மிகைப்பால்தான் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் பேரொளி மறைக்கப்பட்டது. ஆனாலும் சில நேரங்கள் அவை மனிதசக்திக்குட்பட்டவகைக்குள் வெளியாகாமலும் இல்லை. ஓர் இருட்டுவேளை நபி (ஸல்) அவர்களின் ஒளியின் மூலம் தவறிப் போன தையல் ஊசியை அன்னை ஆயிஷா (ரழி) கண்டெடுத்தது வரலாற்றில் பதியப்பட்ட உண்மையாகும்.

ஒளி இருவகையில் உள்ளன. 01. புலச்சார்புள்ளது - இது சட ஒளி. 02. மானசீக ஒளி - புலச் சார்பற்றது. சூரியன், சந்திரன் ஒளிகள் புலச்சார்புள்ள சட ஒளிகளாகும். மலக்குகள், ஆன்மாக்கள், திருக்குர்ஆன் அறிவு உள்ளிட்டவைகள் மானசீக - சூக்கும ஒளியாகும். சட ஒளியை புறக்கண்ணும், சூக்கும ஒளியை இதயக்கண்களாலும் தரிசிக்க முடியும். நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் பேரொளியினை இதயக்கண் உள்ள எவரும் மறுத்ததில்லை.

மரியாதைக்கும், வணக்கத்திற்கும் வித்தியாசம் காணத் தெரியாதவர்கள்தான் இன்று மக்களைக் குழப்பிக் கொண்டிருக் கின்றனர். வணக்கம் என்பது அல்லாஹ்வின் தெய்வீகத்தன்மைக்குச் செய்யும் உச்சப் பணிவாகும். ஒருவரின் நற்சிறப்புக்கு செய்யும் பணிவு மரியாதையாகும். இவையிரண்டும் ஒன்றாகாது. இரண்டையும் கலந்து குழப்புவது நயவஞ்சகர்களின் செயலாகும். இதுதான் இன்று நடக்கின்றது.

பன்னூலாசிரியர் ''ஹாதிபுல் ஹுதா'' எம்.எம்.எம். நூறுல்ஹக் ( ஜே.பி) நாடறிந்த ஓர் எழுத்தாளரும், ஊடகவியலாளருமாவார். இவரது ''ஈமானியப்பேரொளிகள்'' என்ற நூலை ஆரம்பம் முதல் இறுதிவரை வாசித்துப் பார்த்தேன். மிகச் சிக்கலான விடயங்களை மிக எளிதாக எல்லோரும் படித்துப் புரியும் வண்ணம் சிறப்பாக எழுதியுள்ளார்.

அரசியல், சமூகவியல், வரலாறு துறைகளில் சிறப்பான பல நூல்களை இவர் நமக்குத்தந்துள்ளார். அவைகள் மக்களிடம் நல்ல வரவேற்பைப்பெற்றவைகள். விசாலமான வாசிப்புத்திறனும் ஆய்வுத்திறனும் மிக்க இவர் எழுதி இருக்கும் ''ஈமானியப் பேரொளிகள்'' என்ற இந்த நூல் பெயருக்கேற்ற வகையில் சிறப்பாக அமைந்துள்ளது என்பது என் கருத்து.

சகோதரர் நூறுல்ஹக்கின் ஏனைய நூற்களுக்கு கிடைத்த வரவேற்பை விட இந்நூல் இவருக்கு அதிக புகழ் சேர்க்கும் என்று நம்புகின்றேன். இத்துறையில் இது போன்று இன்னும் பல நூற்களை இவர் எழுத வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

அல்-ஹாஜ் மௌலவி, பாஸில், ஏ.எல். பதுறுத்தீன்
(ஷர்க்கி, பரேலவி)
பிரதம ஆசிரியர் அல்- புஷ்றா.

138, சரீப் ஹாஜியார் வீதி,
அட்டாளைச்சேனை. 02
18.01.2009

# நவீன சிந்தனைகளில்
# ஷிர்க் ஒரு குறியீடு

அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானுரஹீம்.

**யா அல்லாஹ்!** உனது நேசத்தையும், உன்னை யாரெல்லாம் நேசித்தார்களோ அவர்களது நேசத்தினையும் உன்னிடம் (பிரார்த்தித்துக் ) கேட்கிறேன் (ஆதாரம்: திர்மதி ) இது மாநபி (ஸல்) அவர்கள் மிஃராஜ்சென்றிருந்த போது அல்லாற்வின் சமூகத்தில் கேட்ட துஆவின் ஒரு பகுதியாகும்.

அல்லாஹ்வுக்கும், நபி (ஸல்) அவர்களுக்குமிடையே உள்ள ஆழமான பாசமும் வலுவான நம்பிக்கையும் எவ்வாறிருந்தது என்பது எல்லாருக்கும் தெரிந்த ஒன்றே. இருப்பினும் நட்புக்குள்ள மரபினைப்பின் துயர்ந்தே நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு துஆசெய்திருக்கிறார்கள். அது நம்மையும் இவ்வாறு துஆ செய்யும் படி தூண்டவும் செய்கிறது.

ஒருவரை மட்டுமே நேசிப்பேன். அவரது நண்பர்களை விரும்ப மாட்டேன் என்றால் அது உண்மையான நேசத்தினை ஏற்படுத்தாது. இந்த பொதுவான மரபினை இறை நேசர்களிலும் பின்பற்றப்பட வேண்டும். ஆகவே, அல்லாஹ் கூறுகிறான்- “விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கு பயந்து (சொல்லிலும், செயலிலும்) உண்மையாளர் களுடன் இருங்கள்”(அல்குர்ஆன் 9:119).

தக்வாவின் இறுதிப்படித்தரத்தினை உடையவர்களுக்கும் உரிய கட்டளையாகும். இவர்கள் எண்ணம்,ஏற்றம், இறக்கம் ஆகிய அனைத்து நிலைகளிலும் அல்லாஹ்வை மட்டுமே நினைத்து வாழ்பவர்கள். இவர்களும் நல்லோர்களுடன் இணைந்திருக்கும் படி ஏவப்பட்டுள்ளனர்.

ஆனால், இன்றைய நவீன சிந்தனையாளர்களாக “தங்களை மட்டுமே எண்ணிக் கொள்பவர்கள் அவுலியாக்களுடன் இணைக்கப்படும் எல்லா செயல்முறைகளுக்கும “ஷிர்க்” என்று முத்திரைப் பதிக்கின்றனர். இதனை செவியுறுகின்ற படிப்பாளிகளும் பரிதவித்து போகின்றனர். யதார்த்த இணைப்புகளுக்கும், இரவல் இணைப்புகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை புரியாமல் குழம்பி நிற்கின்றனர். இந்த நவீன கருத்துக்கள் ஜொலித்தாலும் நிலைக்காது. ஏனெனில் முதுமொழிகள் பொய்த்துப் போவதில்லை- “பழையன நிலைக்கும் புதியன ஜொலிக்கும்”.

அவ்வண்ணம் நிலைத்து நிற்கின்ற-நிற்கப்போகின்ற அஹ்லுஸ் ஸுன்னத் இமாம்களின் கூற்றுக்களையெல்லாம் தொகுத்து நிற்கின்ற ஆழமான இந் நூலை ஹாதிபுல் ஹுதா எம்.எம்.எம். நூறுல்ஹக் ஜே.பி அவர்கள் திரட்டி கோர்த்திருக்கிறார்கள்.

இந்நூலாசிரியர் திரட்டியிருக்கும் ஆதாரக் கோர்வைகளை படித்து பார்த்த போது இது கடினப்பணியாகவே தெரிந்தது.

சிரமமான இப்பணியினை மூத்த ஆலிம் பெருமக்களால் செய்யப்பட்டிருக்க வேண்டுமென எண்ணத் தூண்டியது. இந் நூலாசிரியர் ஆலிமாக இல்லாவிட்டாலும் மூத்த ஆலிம் பெருமகனாரின் அன்புப் புதல்வராக அவர் இருப்பதால் அவருக்கு அது இலகுவாக அமைந்திருக்கிறது.

சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கைப்பிடிப்பும் பாசமும் உள்ள வளமிக்கவர்கள். இந்நூலினை அதிகமாகப் பெற்று மற்றவர்களையும் படிப்பதற்கு ஊக்குவித்தால் எழுதியவருக்கு மட்டுமல்ல அடுத்தவர்களிடமும் இதன் பயன் வியாபிக்கும்.

இதன் பயன் நூலாசிரியர், மற்றும் வாசகப் பெருமக்கள் யாவருக்கும் ஈருலகிலும் கிடைத்திட எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் துஆ செய்கிறேன்.

நன்றி வஸ்ஸலாம்.

அப்ளலுல் உலமா
மௌலவி, அல்-ஹாஜ் ஆ.மு.இ.ஆதம் முஹ்யித்தீன்
(பாஜில், பாகவீ)
ஷாபிஈ பிக்ஹின் சட்டக்களஞ்சியம் நூலாசிரியர்

1/129 பீ.கே. கோவில் தெரு,
செய்துங்க நல்லூர் 628809,
தூத்துக்குடி (மாவட்டம்)
இந்தியா.

அதிபர்,
அல் வாஹிதிய்யாஹ் அரபு கலாபீடம்,
சாய்ந்தமருது.
18.01.2009

# முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சிறப்புக்களில் எழுத்துக்களினால் ஓர் அமல்

மறைவழங்கிய மாமன்னனுக்கே மாண்புகள்,
புகழ்கள் அனைத்தும் உரித்தாகட்டும்.

மறை ஞானம் நிறையப் பெற்ற
இன்ஸான் காமில் ஏந்தல் (ஸல்) அவர்களுக்கு
ஸலவாத்தும் ஸலாமும் உரித்தாகட்டும்.

**பன்னூலாசிரியர்**, ஆய்வாளர் எம்.எம்.எம். நூறுல்ஹக் ஜே.பி அவர்களின் "ஈமானியப் பேரொளிகள்" என்ற நூலைப் பார்வை யிட்டேன். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முக்கியத்துவம், முதன்மைத் தன்மைகள் என்பன நல்ல முறையில் விளக்கப்பட்டுள்ளன. உலகங்களுக்கோர் அருட் கொடையாகவும், வழிகாட்டும் ஒளிவிளக்காகவும் அவர்களை அல்லாஹ் இவ்வவ னிக்குத்தந்தான் என்பதையும் நபி(ஸல்) அவர்கள், வழிகாட்டும் ஒளிவிளக் காகவும் அந்தகாரங்களை நீக்கித் தெளிவைக் காட்டும் ஜோதிப் பிரகாசமாகவும் விளங்குகிறார்கள் என்பதை அல்-குர்ஆன், அல்ஹதீஸ் மூலம் பல தப்ஸீர்களின் விளக்க உரைகள் மூலம் தெளிவுபடுத்துகிறார். எடுத்துக் கொள்ளப்பட்ட விடயத்தின் கருப் பொருளை சுருக்கமாகவும் ஆழமாகவும், தெளிவாகவும் எமக்குத்தந்துள்ளார்.வாசகர்கள் கருத்துத் தெளிவில் பூரண விளக்கம் பெறக்கூடியவாறு, எல்லா சர்ச்சைகளையும் தெளிவுபடுத்தித் திட்டப்படித்துள்ளார்.

(நபியே) நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே! எனக் கூறுங்கள் (18:110) என்ற திருமறைவசனத்தையும், நான் உங்களில் யாரைப் போலுமில்லை என்ற ஹதீஸ் வசனத்தையும் எடுத்து, முட்டிமோதாமல், கருத்துச் சிதைவுறாமல் விளக்கியுள்ளார். பாராட்டக் கூடியவாறு அமைந்துள்ளது. நபி (ஸல்) அவர்கள் விட்டுச் சென்ற நினைவுச் சின்னங்கள், அல்லாஹ்வின் நினைவுச் சின்னங்கள் என்பனவற்றை எடுத்துக்காட்டியுள்ளதைப் போற்ற வேண்டும். ஏனெனில் இருக்கும் நினைவுச் சின்னங்களை அழித்தொழிக்கும் காலம் இது. மற்றையச் சமயங்களின் சமயச் சின்னங்கள் பல்லாண்டுகாலமாகப் பாதுகாத்துப் பெருமைப்படக்கூடிய சின்னங்களாக போற்றிப் புகழப்படுகின்றது. இஸ்லாமியர் என்று கூறிக் கொண்டு இஸ்லாத்தின் சின்னங்களை சிதைக்கும் நாசகாரர்களின் செயல்கள், எவ்வளவு ஈனத்தனமானது என்பதை மறை பொருளாக நமக்கு விளக்கும் லாவகம் சிறப்பானதே. கீர்த்தி,

சிறப்பு, விஷேட குணநலன்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போதித்த படி நடக்கும் தன்மைகள் ஏற்கனவே பல லட்சக்கணக்கான எழுத்தாளர்களால் வியாக்கியானம் செய்து தெளிவாக்கப் பட்டிருக்கின்றது. எப்படி இருந்தபோதிலும் தன்பங்கிற்கும் நூறுல்ஹக் அவர்கள் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிறப்புக்களைச் சிலாகித்துள்ளார்.

மதீனா நகர், நபியுல்லாஹ்(ஸல்) ரௌழா ஷரீப், நபிமூஸா (அலை) அவர்களுக்கு கிடைக்காத இறை தரிசனம், ஞானத்தில் முக்தி பெற்ற இறை அன்பர்கள், அவர்கள் தம் குண நலன்கள், அவர்களது இறையண்மை, இறைவனை நேசித்தவர்கள் இறைவனால் நேசிக்கப்படுவதன் மேன்மை என்பன பரந்த, ஆழ்ந்த, ஆன்மீக முக்திபெற்ற விடயங்கள். இவற்றைக் கையாளும் விதம் நாசூக்கானது. பாத்திரமறிந்து பிச்சை இடப்பட்டுள்ளது. அது சிறந்த உத்தி. ஷிர்க் பற்றிய விளக்கம் சிறப்பானது. வஸீலா தேடலின் விளக்கத்தில், நூறுல்ஹக் அவர்களின் எழுத்தின் முதிர்ச்சி விளங்குகிறது. மொத்தத்தில் இக்காலத் தேவைக்கு உகந்த ஒரு சிறந்த ஆராய்ந்த நூல். காலத்தின் தேவை கருதி வெளிவருவது போற்றப்படக்கூடியதே.

பன்னூலாசிரியர், மௌலானா
ஏ.ஆர்.ஏ. பிஷ்ர்-அல்-ஹாபி
முன்னாள் உதவிப் பணிப்பாளர்,
முஸ்லிம் சமய கலாசார திணைக்களம்.

167, பெரியபள்ளி வீதி,
அக்கரைப்பற்று - 04.
18.01.2009

# பேரொளி சிதறும் முன் வாசல்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானு ரஹீம்
அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்
வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா அஷ்ரபில் முர்ஸலின்
ஸைய்யிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன்

நெஞ்சுக்கு நெருக்கமான
ஈமானிய இதயங்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்...)

**இஸ்லாத்தின்** அடிப்படையான தௌஹீத் பகுதி என்றும் மாற்றத்திற்குட்படுவதில்லை. அது ஆதிபிதா ஆதம் (அலை) அவர்கள் காலந்தொட்டு, முஹம்மது நபி(ஸல்) அவர்கள்வரை ஏகத்துவப் பகுதி ஒன்றேயாகும். மார்க்கத்தின் உப பிரிவுகளில், வாழ்க்கை முறைமையின் நடைமுறைமையில் காலத்திற்கேற்றமாற்றங்கள் நிகழ்ந்து வந்திருக்கின்றன.

நாம் வாழும் இக்காலத்தில் இஸ்லாத்தின் தௌஹீத் பகுதியை மாற்றியமைத்து விட்டனர் என்கின்ற ஒரு மாயைத் தோற்றத்தை நவீனவாதிகள் பித்அத், ஷிர்க் என்கின்ற சில சொற்பிரயோகங்களை தமக்குச்சாதகமாக்கி பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.

நவீனவாதிகளின் ஊடுருவல் பல கோணங்களில் நமது மக்களிடையே நுழைவிக்கப்பட்டு, அது நவீன பிரசாரயுக்திகளான ஊடகங்கள் வழியாகவும், இலவச வெளியீடுகள் மூலமும், பணத்தின் அடிப்படையிலும் கொள்கைப்புரட்டலும், இயக்க மாற்றங்களும் இடம் பெற்றுவருகின்றன.

மார்க்கத்தின் அடிப்படைகளை சரிவரவிளங்காதவர்களுக்கு இந்த நவீன குழப்பவாதிகள் ஷிர்க், பித்அத் கோஷம் உன்னத உண்மைகளாகப் பிரமிப்பை ஏற்படுத்தி இருப்பதை அவதானிக்கலாம். இவ்வாறு பிரமிப்பை ஏற்படுத்திய சில பகுதிகளின் உண்மைத்தன்மைகளையும். அது தொடர்பான அஹ்லுஸ் சுன்னத் வல்ஜமாஅத் கொள்கைகளையும் வெளிக்கொணரும் ஒரு முயற்சியாகவே "ஈமானியப் பேரொளிகள்" எனும் இந்நூலை முன்வைக்கின்றேன்.

இந்நூல் மூன்று பிரதான தலைப்புக்களில் உங்களுடன் உரையாடுகின்றது. இவை மூன்று பகுதிகளும் நமது ஈமானுடன்

தொடர்புபட்டு இருப்பதினால், இது விடயத்தில் எழுந்துள்ள சந்தேகங்களுக்கும் பிழையான புரிதல்களுக்கும் அல்லாஹ்வின் உதவி கொண்டு என்னால் இயன்றவரை இஸ்லாமிய மூலாதாரங்களின் வழி நின்று விளக்கங்களை முன்வைத்துள்ளேன்.

மீலாத்தினங்களை மையமாகக் கொண்டு நமது நாட்டின் தேசிய பத்திரிகைகளான தினகரன், தினக்குரல், வீரகேசரி, நவமணி ஆகியபத்திரிகைகளுக்கு எழுதிய ஒன்பது கட்டுரைகளையும், இந்நூலுக்காகவே எழுதிய "ஆதியும் இறுதியுமான நபி" என்ற தலைப்பிலான அங்கத்தையும் சேர்த்து. (01) "முஹம்மது நபி (ஸல்) அவர்கள்" என்ற தலைப்பிலும் ,தினகரன் பத்திரிகையில் இருதினங்கள் பிரசுரமான (02) "அல்லாஹ்வின் தரிசனம்" என்ற கட்டுரையையும் இந்நூலில் இணைத்துள்ளேன்.

மூன்றாவதாக இடம் பெறும் (03) "அவுலியாக்கள்" என்ற தலைப்பில் இடம்பெறும் அனைத்து அம்சங்களும் இந்நூலுக்கென்று எழுதப்பட்டதாகும். இப்பகுதியில் அவுலியாக்கள் பற்றி நவீன குழப்பவாதிகள் முன்வைக்கும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களுக்கும் தெளிவான பதில்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவுலியாக்களைப் பற்றி எழுப்பப்படும் அனைத்துக் கேள்விகளுக்கும் விளக்கம் பெறும் வகையிலும், எழுப்பப்படும் ஐயங்களுக்கு விடையிறுக்கும் மாதிரியிலும் ஆழமான ஆதாரங்களை இந் நூலில் முன்வைத் துள்ளேன். ஆதலால், இந்நூலை வைத்திருக்கும் ஒருவரினால் அவுலியாக்கள் குறித்து எந்தத் தடுமாற்றமுமின்றி உண்மைகளை உணர்ந்து உரையாடமுடியும். இந்நூல் நவீன வாதிகளுக்கு சரியான பரிதலுக்கு அறிவூட்டி வழிகாட்டுவதுடன், அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமாஅத்தினர்களைப் பொறுத்தவரை தமது இருப்பியலை உரமிட்டு, உறுதிப்படுத்தவும் உதவுமென்று துணிந்துகூறுவேன். அல்ஹம்துலில்லாஹ்!

பன்னூலாசிரியரும் புஷ்றா மாதாந்த சஞ்சிகை ஆசிரியருமான அல்-ஹாஜ், மௌலவி, பாஸில், ஏ.எல். பதுறுத்தீன் (ஷர்க்கி, பரேலவி) அவர்கள் " முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பேரொளி ஈமானியத்தின் ஊடாக அறியப்பட வேண்டியது" என்ற தலைப்பிலும், பன்னூலாசியரும், சாய்ந்தமருது அல் - வாஹிதிய்யாஹ் அரபுக்கலாசாலையின் அதிபருமான அப்ளலுல் உலமா, மௌலவி அல்-ஹாஜ், பாஸில் ஆ.மு.இ. ஆதம் முஹ்யித்தீன் (பாகவி)அவர்கள்" நவீன சிந்தனைகளில் ஷிர்க் ஒரு குறியீடு " என்ற தலைப்பிலும், முன்னாள் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரும், பன்னூலாசிரியருமான மௌலானா ஏ.ஆர்.ஏ. பிஷ்ர்-அல் - ஹாபி (எம். ஏ) அவர்கள் "முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சிறப்புக்களில் எழுத்துக்களினால் ஓர் அமல்" என்ற தலைப்பிலும் இந்நூலுக்கான அவர்களின் பார்வைகளை வழங்கிய அம் மூவருக்கும்,

இந்நூலினை வெளிக்கொணரும் மருதம்கலை இலக்கிய

வட்டத்திற்கும் "பேரொளியின் தடம்" எனக் கருத்துரைத்தும், இந்நூலின் அட்டைப்படத்தை உருவாக்கியும் தந்த கவிஞர் எம். நவாஸ் சௌபி (BBA) அவர்களுக்கும்,
இந்நூலின் தளக்கோலத்தை அமைத்து உதவிய எஸ்.ஏ. ஜெசீம் அவர்களுக்கும்,
இந்நூல் வெளிவருவதில் என்னையும் விட மிகுந்த ஆர்வத்தை காட்டியும், என்னைப்பற்றிய அறிமுகத்தை எழுதிவழங்கிய "இரண்டாவது பக்கம்" கவிதை இதழ் ஆசிரியரும், அபாபீல்கள் கவிதாவட்டச் செயலாளர் கவிஞர் ஏ.எம்.எம். ஜாபீர் (BA) அவர்களுக்கும்,
இந்நூலை கணனிப்படுத்தி உதவிய எஸ்.ஏ. ஜெசீம், செல்வி. றிஸ்லா ஆகியோருக்கும்,
இந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளை சேகரித்தும், நெறிப் படுத்தியும் உதவிய என் இனிய இல்லாள் எஸ்.யூ. கமர்ஜான் பீபி (ஜே.பி) அவர்களுக்கும்,
இந்நூலை அச்சிட்டு உதவிய கல்முனை அந் நூர்-ஒப்செட் நிறுவனத்திற்கும், அதன் உரிமையாளர் அல்-ஹாஜ். கலீலுல் ரஹ்மான் (ஆதம்பாவா) அவர்களுக்கும்,
இந்நூலினை வாங்கி உற்சாகப்படுத்தும் அனைத்து உள்ளங் களுக்கும்,
எனது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மிகுந்த உவகை அடைகின்றேன்.
மீண்டுமொரு சந்திப்பில் சந்திப்போம்.
இன்ஷா அல்லாஹ்!

வஸ்ஸலாம்.

எம்.எம்.எம்.நூறுல்ஹக் (மிஹ்லார்)
சமாதான நீதவான்
DIPLOMA IN MASS MEDIA

129B, ஓஸ்மன் வீதி,
சாய்ந்தமருது-05
0772612094
18-01-2009.

# பேரொளியின் தடம்

நண்பர் நூறுல்ஹக் அவர்களின் தேடலும், எழுத்துக்காக அவர் கொண்டுள்ள நாட்டமும் அவரை நெருங்கியவர்களுக்கு ஆச்சரியத் தையே அளிக்கக் கூடியது.

முஸ்லிம் சமூகத்திற்கான பல்வகைத் தன்மையான அடையாளங் களையும் அரசியல், சமயம் என்ற இரு பெரும் துறைகளினாலும் மிக அற்புதமாக தனது எழுத்துக்களால் பதிவு செய்கின்றார்.

இப்பதிவுகள் யாவும் வரலாற்றுத் தேவையாகவும், ஆய்வுகளுக்குமான ஆதாரங்களையும் பல அவதானப் புள்ளிகளில் முக்கியத்துவம் பெற்றிப்பதை இவரது எழுத்து ஆளுமை எமக்கு புலப்படுத்துகின்றது.

இத்தகைய சமூக ஆவண பதிவுகளை தன்னெழுத்துக்களில் பிரதிபலிக்கும் முஸ்லிம் தேச எழுத்தாளர் சகோதரர் எம்.எம்.எம். நூறுல்ஹக் அவர்களின் நான்காவது நூற்பிரதியாக வெளிவருகின்ற "ஈமானியப் பேரொளிகள்" எனும் இஸ்லாமியச் சமய கருத்துக்கள் சார்ந்து வெளிவரும் நூலை பதிப்பிப்பதில் மருதம் கலை இலக்கிய வட்டம் புருவங்களை உயர்த்திய படி பெருமை கொள்கின்றது.


இவரது ஏனையை நூல்களான தீவும் தீர்வுகளும், சிறுபான்மையினர் சில அவதானங்கள், முஸ்லிம் பூர்வீகம் ஆகிய மூன்றினையும் மருதம் கலை இலக்கிய வட்டமே வெளியீட்டிருப்பதும் எமது அமைப்பிற்கு ஆக்கபூர்வமான திருப்தியை அளிக்கின்றது.

இந்தவகையில் சகோதரர் நூறுல்ஹக் அவர்களின் எழுத்தும் தேடலும் எமது சமூகத்திற்கும், வரலாற்றுக்குமாக தொடர வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

கவிஞர். எம். நவாஸ் சௌபி
தவிசாளர்.

மருதம் கலை இலக்கிய வட்டம்.
சாய்ந்தமருது.
18.01.2009

# சமர்ப்பணம்



மெய்ஞ்ஞானத்தின் உள்ளமையை
சுவாசித்த
செய்குல் காமில், மௌலானா, மௌலவி
செய்கு அப்துல் காதிர் ஸூபி ஹலரத்
காதிரி, ஸித்தீகி, (பாஸில் நூரி)
கத்ஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்

எனக்கும்
என் மார்க்க
அறிவுக்கும் வித்தாய்
விழுந்த
மர்ஹூம் அல்-ஹாஜ், மௌலவி,
ஐ.எல். முஹம்மது முத்து (பஹ்ஜி)



வஹ்ஹாபிஸ கொள்கைக்கு எதிராக
தனது பேனாவின் மூலமும், பிரசாரத்தின்மூலமும்
போராடும்
அல்-ஹாஜ்,
மௌலவி, பாஸில்
ஏ.எல். பதுறுத்தீன் (ஷர்க்கி, பரேலவி)

# முஹம்மது நபி [ஸல்] அவர்கள்

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
யாறப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம்.

## 1. ஆதியும் இறுதியுமான நபி

**முஹம்மது** நபி (ஸல்) அவர்கள் இவ்வுலகில் அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் இறுதித் தூதர் என்பது துலம்பரமானது. இதனைப் போன்றே அவர்கள் அல்லாஹ்விடம் முதல் நபியாகவும், முதல் படைப்பாகவும் இருக்கின்றார்கள் என்பதில் நமக்கு எவ்விதமான ஐயங்களும் தோன்றக் கூடாது.

நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறுதித் தூதராகவிருந்தும் எல்லா நபிமார்களுக்கு முன்னர் எனக் கூறுவது ஆலமுல் அர்வாஹ் உலகில் நுபுவ்வத்தில் முதன்மையாக இருந்ததாலும், படைப்புக்களில் அவர்களின் ஒளிதான் முதலில் சிருஷ்டிக்கப்பட்டது என்பதினாலுமாகும். இது பற்றிய பல்வேறு ஆணித்தரமான ஆதாரங்கள் இஸ்லாமிய மூலாதாரங்கள் முன்வைக்கின்றன. அவற்றினை இவ்விடத்தில் எடுத்து நோக்குவோம்.

நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் ''நான் மனிதப் படைப்பில் முதன்மை யானவன். இன்னும் நபிமார்களில் இறுதியானவன்'' என்று கூறினார்கள். (அறிவிப்பவர் : கதாதா (ரழி) ஆதாரம் : தபகாத் இப்னு ஸஃத், பாகம் 01, கன்சுல் உம்மா, பாகம் 02)

நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள் ''படைப்புக்களில் நான் நபிமார்களுக்கெல்லாம் முதன்மையானவன். இன்னும் அனுப்பப்படுவதில் நான் இறுதியானவன்.'' (அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) ஆதாரம் : சுனன் தைலமி, பாகம் 03)

''நபியுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஸஹாபாக்கள் உங்களுக்கு நுபுவ்வத் (நபித்துவம்) எப்போது கடமையானது எனக் கேட்ட போது, அதற்கவர்கள் ''நான் ஆதம் (அலை) அவர்கள் ரூஹு(ஆன்மாவு)க்கும் ஜஸது (சரீரத்திற்)க்கும் இடையில் இருந்த போது என்மீது நுபுவ்வத் கடமை யாக்கப்பட்டது'' என்பதாகக் கூறினார்கள். (அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) ஆதாரம் : திர்மதி)

மேற்படிய இந்த ஹதீஸை திர்மதி இமாம் அவர்கள் ஸஹீஹானது எனக் குறிப்பிடுகின்றார். அதுமட்டுமன்றி ஸிஹாவுல்ஸித்தா எனப்படும் ஆறு கிரந்தங்களில் திர்மதியும் ஒன்று என்பது நமது கவனத்திற்குரியது. மேற்படிய

கருத்தை பிரதிபலிக்கும் இன்னுமொரு ஹதீஸ் மஸீரத்துல் பஜ்ர் (ரழி) அவர்களின் அறிவிப்பைக் கொண்டு காணப்படுவதாக இமாம் பைஹகீ பாகம் 01, முஸ்னத் அஹ்மத், சுனன்தைலமி போன்ற ஹதீஸ் கிரந்தங்கள் தகவல் தருகின்றமையும் இவ்விடயத்தில் குறிப்பிடத்தக்கது.

''திடனாக நான் அல்லாஹ்வின் அடிமை. இன்னும் நபி ஆதம் (அலை) அவர்களின் (உருவம்) களியாக இருக்கும் போதே நான் நபிமார்களில் இறுதியானவனாக இருந்தேன்'' என நபி (ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள். (அறிவிப்பவர்: இர்பாழ் பின்ஸாரியா (ரழி) ஆதாரம் : முஸ்னத் அஹ்மத்)

மேற்படிய ஹதீஸ்கள் தெரிவிக்கும் செய்திகள் யாவும் உண்மையானவை என்பதை சுன்னத்துவல் ஜமாஅத் கொள்கைக்குப் புறம்பான அல்பானி என்பவர் கூட தமது ''ஸில்ஸிலாத்து அஹாதீஸ்ஸஹீஹா'' என்ற நூலில் தெரிவித்துள்ளார்.

''நான் நபிமார்கள் யாவருக்கும் நபியாக இருக்கின்றேன்.'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் : ஷரஹ் அகீதத்துத்தஹாவி)

''அல்லாஹ்வின் ரஸுலே அனைத்து வஸ்த்துக்களையும் படைக்கும் முன் அல்லாஹ் முதன் முதல் எதைப் படைத்தான் என்பதை எனக்குச் சொல்லுங்கள் என்று கேட்க, அதற்கு நபியவர்கள்; அல்லாஹ் முதல் முதல் உமது நபியின் நூரை அல்லாஹ்வுடைய நூரிலிருந்து படைத்தான். பின்னர் படைக்கப்பட்ட அந்த நூர் அல்லாஹ்வுடைய விருப்பப்படி உலாவிக் கொண்டிருந்தது. அப்போது லௌஹு, கலம், பூமி, சூரியன், சந்திரன், மனிதன், ஜின் போன்ற எதுவுமே இருக்கவில்லை ஜாபிரே'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர் : ஜாபிர் (ரழி) ஆதாரம் : முஸ்னத் அஹ்மத்)

''ஈஸா நபி அவர்களே! முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது விசுவாசங் கொள்ளும். இன்னும் உமது சமுதாயத்தினரில் அவரது காலத்தைப் பெற்றுக் கொள்வோரையும் விசுவாசங்கொள்ளச் சொல்லும். ஏனெனில் முஹம்மத் (ஸல்) அவர்கள் இல்லையேல் நான் ஆதமைப் படைத்திருக்க மாட்டேன். சுவர்க்கம் நரகத்தையும் படைத்திருக்க மாட்டேன்'' என்று அல்லாஹ் ஈஸா (அலை) அவர்களுக்கு வஹீ அறிவித்ததாக அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி) கூறுகின்றார்கள். (ஆதாரம் : முஸ்தத்ரக்)

இவ்விரு ஹதீஸ்களும் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள்தான் முதன்முதலில் படைக்கப்பட்டவர்கள் என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன. இந்த ஹதீஸ்கள் பலவீனமானது என்றொரு குற்றச்சாட்டை முன்வைத்து உடைத் தெறிவதற்கு ஸுன்னத்துவல் ஜமாஅத் கொள்கைக்கு முரணானவர்கள் முன்வந்திருப்பதை அவதானிக்கலாம். இந்த ஹதீஸ்கள் கூறும் கருத்துக்களை அதாவது நபி (ஸல்) அவர்கள் ஒளியாக இருந்தார்கள் என்பதும் அவர்களின் ஒளிதான் அல்லாஹ்வின் முதற்படைப்பு என்னும் கருத்துக்கள் உண்மையிலும் உண்மையாகும் என்பதை பின்வரும் ஹதீஸ் இன்னும் உறுதிப்படுத்துவதாக அமைகின்றது.

"அல்லாஹ் முதன் முதலில் எனது ஜோதியைத்தான் படைத்தான்" என நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். (ஆதாரம்: புகாரீ)

# 2. ஈமானின் பேரொளி

**அல்லாஹ்வின்** கட்டளைகளை மனித வர்க்கத்துக்கு எடுத்துரைக்கும் கடமையைச் செய்வோர்களே நபிமார்கள் என்பது தெளிவானது. இதனை வேறு வார்த்தையில் கூறுவதாயின், மனித குலம் நெறிபிறழாது வாழும் அறநெறிகளை அல்லாஹ் வஹீ மூலம் தான் தேர்ந்தெடுப்போருக்கு வழங்கி, மக்களுக்கு இறைபோதனைகளை இனங்காட்டும் வழி காட்டிகளே அல்லாஹ்வின் தூதர்களாகும்.

இவ்வுலகில் அனுப்பப்பட்ட தூதுவர்களின் எண்ணிக்கை ''ஏறத்தாள ஒரு இலட்சத்து இருபத்திநான்காயிரம்'' என்று கூறப்படுகின்றது. இவற்றில் இருபத்தைந்து நபிமார்களின் நாமங்களைக் குர்ஆன் குறிப்பிடுகிறது. வேறு சில நபிமார்களின் பெயர்களை நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் அறிவித்துள்ளார்கள். இது தவிர பெயர்கள் அறிவிக்கப்படாத, நாம் அறியாத நபிமார்களே அநேகமாகும்.

எது எப்படி இருப்பினும், அல்லாஹ்வின் திருத்தூதர்களை ஏற்றுக் கொள்வது நமது விசுவாசப் பிரமாணங்களுடன் தொடர்புடையது. ஆகையால் நபிமார்கள் எனும்போது அதிக கவனம் பெறக்கூடியதென்றே அர்த்தமாகும்.

இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட அனைத்து இறை தூதர்களும் ஒரே அந்தஸ்தில் அனுப்பப்படவில்லை. மாறாகச் சிலரைச் சிலரை விட சில காரணங்களைக் கொண்டு, அல்லாஹ் சிறப்பித்துள்ளான். இதுபற்றி இறைமறை இப்படி எடுத்துரைக்கின்றது.

''அத்தூதர்கள் - அவர்களிற் சிலரைச் சிலரைவிட நாம் மேன்மையாக்கி இருக்கின்றோம். அவர்களில் சிலருடன் அல்லாஹ் பேசியிருக்கின்றான். அவர்களில் சிலரைப் பதவிகளில் உயர்த்தியும் இருக்கின்றான்''

(குர்ஆன் 2:253)

இவ்வசனம் பற்றி குர்ஆன் விரிவுரையாளர்களிடம் பல்வேறு விளக்கங்கள் காணப்படுகின்றன. ஆயினும் அவைகளிலிருந்து ஒரு சிலவற்றை இவ்விடத்தில் நோக்குவோம்.

''நபித்துவம் என்பது தனிப்பெரும் அந்தஸ்தாகும். இது பல விதமாக இல்லை. ஆதலின் நபித்துவம் என்ற விஷயத்தில் எல்லா நபிமார்களும் சம அந்தஸ்துள்ளவர்கள்தான். அவர்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வில்லை. ஆனால் அந்த நபிமார்களுக்கிருக்கிற இதர அந்தஸ்துகளைக் கவனித்துத்தான் அவர்களுக்குள் வித்தியாசமேற்படுவதுண்டு. அவர்களில் சிலரைப் பதவிகளில் உயர்த்தினான் என்ற இவ்வசனமானது நமது நபி (ஸல்) அவர்களைக் குறித்துச் சொல்லப்பட்டதாகும்.''

(ஆதாரம் : தப்ஸீறுல்ஹமீத் பீதப்ஸீரில் குர்ஆனில் மஜீத் பாகம் 1)

தனது தூதர்களிற் சிலரை விட சிலரை மேன்மையாக்க அல்லாஹ்விற்கு அதிகாரமுண்டு. எந்தெந்தக் காலத்தில் எந்தெந்த நபியை எதனைக் கொண்டு சிறப்பாக்க வேண்டுமென்பதை அவன் அறிந்தவன். மூஸா (அலை) அவர்களுடன் இறைவன் வசனித்து அந்த நபியை மேன்மையாக்கினான். அவர்களிற் சிலரைப் பதவிகளில் உயர்த்தினான் (என்பது) இறுதி முஹம்மது

(ஸல்) அவர்களைக் குறித்தே இக்குறிப்பு கூறப்படுவதாக குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகின்றனர். இதர நபிமார்கள், ரஸூல்மார்களை விட நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் கீர்த்தியையும், அந்தஸ்தையும் பலவகையிலும் அல்லாஹ் உயர்த்தியுள்ளான்.

இதர நபிமார்களுக்கு பல சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட அற்புதங்கள், தெளிவான ஆதாரங்கள் அனைத்தும் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஏக காலத்தில் ஒருங்கே வழங்கப்பட்டிருந்தன. (ஆதாரம் - தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன், ஸூரத்துல் பகரா)

''அவர்களது கைஜாடையின் மூலம் சந்திரன் பிளந்தது. அவர்கள் ஏறி நின்றுகொண்டு உபதேசம் புரிந்த பேரீத்த மரத்தின் அடிக்கட்டையானது மாற்றப்பட்ட பொழுது நபியுல்லாஹ் (ஸல்) அவர்களது திருப்பாதம் தன்மீது படாதது குறித்து அழுது முனங்கிற்று. அப்பால் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதனைத் தடவிக் கொடுத்தபோது அதன் அழுகை அடங்கிற்று''. (ஆதாரம் - புகாரி முஸ்லிம் சுருக்கம்)

''கருங்கல்லும் மரமும் அவர்களுக்குச் ஸலாம் கூறின. அவர்களது தீர்க்க தரிசனத்தை ஆதரித்துச் சில பிராணிகள் சாட்சிகூறியிருக்கின்றன.'' (ஆதாரம் - ஸீரத்துன்னபவியின் சுருக்கம்)

''நான் ஆதமுடைய மக்களின் தலைவனாக இருக்கிறேன்.'' (அறிவிப்பவர் - அபூஸஈது அல்குத்திரி (ரழி) ஆதாரம் - திர்மிதி)

''என்னை மற்றைய நபிமார்களைப் பார்க்கினும் அல்லாஹ் தெரிந்தெடுத்துக் கொண்டான்.'' என்ற நபிமொழியும் ''நபிமார்களிற் சிலரை வேறு சிலரை விட திட்டமாக நாம் மேன்மையாக்கியிருக்கிறோம்'' என்ற குர்ஆன் (17:55) வசனமும் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் நபிமார்களுள் மேன்மையானவர்கள் என்று கட்டியம் கூறப் போதுமானதே.

''நன்னம்பிக்கை கொண்டவர்களே நபியின் சப்தத்துக்கு மேல் உங்களது சப்தத்தை உயர்த்தாதீர்கள். உங்களில் சிலர் சிலருடன் இரை (ந்து பேசு)வது போல் வார்த்தைகளில் அவரிடம் இரைந்து பேசாதீர்கள். (ஏனெனில் இவைகளால்) நீங்கள் அறிந்து கொள்ள முடியாத நிலையில் உங்களது (நல்ல) செய்கைகள் அழிந்து வி(டக்கூ)டும்.'' (குர்ஆன் 49:2)

ஒரு முஸ்லிம் பாவம் அல்லது தவறு செய்தால் மன்னிப்புக் கேட்பதன் மூலம் மன்னிக்கப்படலாம். அல்லது மன்னிப்புக் கோராத நிலையில் சிலவேளை அல்லாஹ்விடமிருந்து தன்டணை கிடைக்கலாம். இதுதான் நமது கொள்கை. மாறாக நாம் செய்த தவறுக்காக நாம் முன்னர் புரிந்த அமல்கள் அழிந்து விடுவது என்ற நிலையில்லை. ஆனால் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் விடயத்தில் இப்படி அமல்களை அழித்துவிடும் அளவிற்கு அல்லாஹ் அவர்களை உயர்த்தி வைத்துள்ளான். அத்தகைய நபியை இலகுவாக எடைபோடுவது எமது சிந்தனைத் தடுமாற்றத்தையே காட்டும்.

மேற்காணும் அல்லாஹ்வின் வசனம் மூலம் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களை சிறப்பாகவும் அல்லாஹ் ஆக்கி வைத்துள்ளான் என்றுதான் பொருள் கொள்ள வேண்மெனப் பல முபஸ்ரீன்கள் பறைசாற்றியுள்ளனர். படைப்புக்களுள் மனிதன்

சிறந்தவன். மனிதர்களுள் நபிமார்கள் சிறந்தவர்கள். நபிமார்களுள் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் சிறந்தவர்கள் எனும் நம்பிக்கையே முதற்தரமானது. அதுவே பலமான நம்பிக்கைக்கு ஆதாரமுமாகும்.

மேன்மைமிகு நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒளி - பிரகாசம் அல்ல எனும் கருத்துடையோர்களும் எம்மில் சிலர் இருக்கின்றனர். இவர்களின் கூற்றுக்கு ஆதாரமாகக் கூறுவது,''நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் மனித வர்க்கத்திலிருந்து வந்தவர்கள். ஆதலால் மண் சார்ந்தவர்களாகவே இருக்க முடியும்'' என்பதாகும்.

இவர்களின் வாதம் பொருளற்றது என்பதை அல்குர்ஆன் மிகத் தெளிவான சுட்டிக்காட்டுகின்றது. நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு நூராக - பிரகாசமுடையவர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு நிறையச் சான்றுகள் குவிந்து கிடக்கின்றன. அவற்றிலிருந்து ஒரு சிலவற்றை இங்கு நினைவுகூருவோம்.

''திட்டமாக அல்லாஹ்விடமிருந்து உங்களுக்கு ஒரு பிரகாசமும், தெளிவாக்கும் வேதமும் வந்திருக்கிறது.'' (குர்ஆன் 5:15)

மேற்படி வசனம் பற்றி பல்வேறு விதமான விளக்கங்களைக் குர்ஆன் விரிவுரையாளர்கள் வழங்கியிருக்கின்றனர். ஆயினும் நமது நோக்குக்கு சான்றுப்படுத்தும் ஆதாரங்களை மட்டும் முதலில் பார்ப்போம்.

''அல்லாஹ்வின் தூதர் நபியுல்லாஹ் (ஸல்) ஒரு பிரகாசமாக இருக்கிறார்கள். பிரகாசத்தின் மூலமாக இருளின் வழிகளைத் தெரிந்து கொள்வது போல் உங்களுடைய தவறான பாதைகள் என்னும் இருளில் இருந்து இஸ்லாம் எனும் நேர்வழிக்கு அவர்கள் தொண்டு வருகிறார்கள். (ஆதாரம் - தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன், ஸூரத்துல் மாயிதா)

''பிரகாசம் என்பது நபியுல்லாஹ் (ஸல்) அவர்களையும், வேதமென்பது குர்ஆனையும் குறிப்பிடுவதாகவும் சிலர் கூறியுள்ளனர்.''
(ஆதாரம் : தப்ஸீறுல்ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத் பாகம் 2)

''நூர்'' என்ற சொல்லுக்கு பொருள் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களே ஆவார்கள்.... மேலும், அவர்கள் அல்லாஹ்வின் பேரொளியாக இருக்கிறார்கள். (ஆதாரம் : நூர்)

''நூர்'' என்பது நபியுல்லாஹ் (ஸல்) அவர்களேயாகும். (ஆதாரம் : தப்ஸீர் ஜலாலைன்)

''அல்லாஹ் இவ்வாக்கியத்தில் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் நூர் எனக் குறிப்பிடக் காரணம் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் பார்வைகளை ஒளிபெறச் செய்கிறார்கள். மேலும் வெற்றியின் பக்கம் அவற்றிற்கு வழிகாட்டுகிறார்கள். மேலும் கண்களால் காணப்படும் ''நூரேஹிஸ்ஸீ'' அறிவால் உணரப்படும் ''நூரேஅஹலீ'' என்ற இரு நூர்களின் அசலாக இருக்கிறார்கள்.'' (ஆதாரம்: தஃப்ஸீர்ஸாதி)

தப்ஸீர்களான பைலாவி, மதாரிக்கில், ரூஹுல்பயான், இப்னு அப்பாஸின் தன்வீறுல் மிக்யாஸ் போன்றவைகளும் மேற்படி வசனத்திற்கு நபியுல்லாஹ்

(ஸல்) அவர்கள் நூராக இருக்கிறார்கள் என்றே கருத்துக் கூறுகின்றன.

''....பிரகாசிக்கும் தீபமாகவும், (நாம் உம்மை அனுப்பி வைத்துள்ளோம்).'' (குர்ஆன் 33:46)

மேற்படி வசனத்தில் நபி (ஸல்) அவர்கள் ஓர் ஒளியாக உள்ளார்கள் என்பதை வலியுறுத்துகின்றது. இதனை இன்னும் உறுதியாகவும் தெளிவாகவும் பின்வரும் ஹதீஸ் வெளிப்படுத்தி வைக்கின்றது. ''அல்லாஹ் முதன் முதலில் எனது ஜோதியைத்தான் படைத்தான்'' என நபி (ஸல்) அவர்கள் தெரிவித்தார்கள். (ஆதாரம் : புகாரீ)

ஆகவே நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒளியாக இருக்கிறார்கள் என்பது இறைமறையின் கூற்று. இதனை மறுப்பதென்பது அ(வ்விறை)வனோடு போர் தொடுப்பதற்கு ஒப்பானது எனலாம். இப்படி இகபர இறஸூல் (ஸல்) அவர்களின் சிறப்புக்கள், உயர்ச்சிகள் என்பவைகள் நீண்டு கிடக்கின்றன.

## 3. அல்லாஹ்வின் அருட்கொடை

''**(நபியே!)** நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ரஹ்மத்தாக - ஓர் அருட்கொடையாகவேயன்றி அனுப்பவில்லை''. (குர்ஆன் 21: 107)

இந்த வசனத்தில் ''ஆலமீன்'' - உலகங்கள் என்ற அர்த்தமுடைய சொல்லினை உபயோகித்துக் குறித்துரைக்கின்றான். ''ஆலம்'' - உலகம் என்ற சொல்லின் பன்மைச் சொல்லே ''ஆலமீன்'' ஆகும். எனின், இவ்வுலகிற்கு மாத்திரம் என வரையறுத்துக் கூறுவது அல்லாஹ்வின் கூற்றை மறுப்பதாகும்.

உண்மையில் அல்லாஹ்விடம் உலகங்கள் பலவகைப்படும். இத்தகைய அனைத்து உலகங்களையும் உள்ளடக்கக்கூடிய பதமான ''ஆலமீன்'' என்பதைப் பிரயோகித்து இருப்பதனால் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் அனைத்து உலகங்களுக்கும் அருளாகவே இருக்கின்றார்கள் என்றே அர்த்தம் கொள்ளல் வேண்டும். இப்படிச் சிறப்புக்களுக்குரிய சர்தாரே ஆலம் (ஸல்) அவர்கள் எல்லா உலகத்திற்கும் அருட்கொடையாக அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

நபியுல்லாஹ் (ஸல்) அவர்களைக் குறித்து மேற்படி வசனத்தில் ''அருள்'' எனக் கூறப்படுகிறது. அருள் என்றால் சாத்வீகக் குணத்தில் ஒன்றான கிருபையாகும். இத்தகைய தன்மையைக் கொண்டவர் என்று கூறாமல் அவர்களே ஓர் அருள் பிம்பமாக இருக்கிறார்கள் எனும் கருத்தில் அருள் என்றே அழைக்கப்படுகிறார்கள்.

''அவர்கள் உள்ளும், புறமும் அருளாகவே இருந்தார்கள். சில சமயம் அவர்களிடம் அக்கிருபை இருந்துவிட்டுச் சிலசமயம் மாறிவிட்டது என்று கூறுவதற்கு இடமில்லை. முழுக்க முழுக்க அவர்கள் அருளாக இருந்ததால் அவர்களுடைய அனைத்துக் காரியங்களும் அருளெனும் அன்பின் அடிப்படையிலே நடைபெற்றிருக்கின்றன''. (ஆதாரம் : தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன், ஸூரத்துல் அன்பியா)

இத்தகைய அருளாக வந்திருக்கும் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களை நாம்

தினந்தோறும் நினைவூட்ட வேண்டுமென்பதை குர்ஆன் ''உங்கள் மீது அல்லாஹ் அருளியுள்ள அருட்கொடையை நினைவுகூருங்கள்'' (2:231) என ஞாபகப்படுத்துகின்றது.

உண்மையில் இறையருளை நாம் பல வகைகளில் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். அ(வ்விறை)வனது அருட்களில் மிகவும் சிறந்தது அஹ்மது நபி (ஸல்) அவர்களை நமக்கு அருளாகத் தந்திருப்பதுதான். ஆகவே அன்னாரை நாம் நினைவில் கொண்டதாக இருப்பதாயின் அவர்கள் காட்டியருளிய வாழ்வு முறையில் தஞ்சமடைந்திருப்பதாகும். இதுவே ஈடேற்ற வாழ்விற்கான வழியாகும்.

''நீர் அவர்களிடையே இருக்கும் வரையில் அல்லாஹ் அவர்களை வேதனை செய்யமாட்டான்'' (குர்ஆன் 8:33) இந்த வசனத்தின் கருத்தாவது ''உமது விரோதிகள் கூறியபடி கல் மழையையோ, வேதனையையோ இறக்குவது அல்லாஹ்வுக்குப் பெரிய காரியமல்ல. ஆனால் நீர் அவர்களிடையே ஒரு நபியாக இருக்கையில் அவர்களை அல்லாஹ் வேதனை செய்கிறவனல்லன். உமக்காகவே அ(வ்விறை)வன் அவர்களை வேதனை செய்வதை நிறுத்தி வைக்கிறான்'' என்பதாகும்.

நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஸ்லிம்கள், மூஃமீன்களுக்கு மட்டுமான நபி என்று எவ்வாறு வரையறுத்துக் கூறாத வகையில் அன்னார்கள் அனைத்து மக்களுக்கும் ஒரு பொது நபியாக இருக்கிறார்கள்.

உலகில் தோன்றிய அத்தனை இறைதூதர்களுள்ளும் முழு உலகுக்கு மாகவும், எல்லா நபிமார்களின் அற்புதங்களையும் ஒருங்கே பெறும், அல்லாஹ்வின் இறுதி வேதத்தின் இறுதிப் போதகராகவும், இறுதி நபியாகவும் இறஸூல் (ஸல்) அவர்களை அகிலத்தில் அனுப்பி சிறப்பித்துள்ளான் அல்லாஹ்.

''மனிதர்களே! மெய்யாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன்.'' (குர்ஆன் 7:158)

''இன்னும் (நபியே!) நாம் உம்மை மனித குலம் முழுமைக்கும் நன்மாராயங் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமே அன்றி (வேறெவ்வாறும்) அனுப்பவில்லை.'' (குர்ஆன் 34: 28) இப்படிப் பல குர்ஆன் வசனங்கள் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் முழு உலகுக்குமான ஒரு பொதுத் தூதர் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. ஏனைய நபிமார்களெல்லாம் குறிப்பிட்ட கூட்டத்திற்கு மட்டும் அனுப்பப்பட்டவர்கள் என்பதையும் பின்வரும் ஹதீஸ் ஐயமற உறுதிசெய்வதைக் காணலாம்.

''இதர நபி (மார்)கள் தங்களுடைய கூட்டத்தினருக்கு மட்டும் குறிப்பாக அனுப்பப்பட்டிருந்தனர். நானோ மனிதர்கள் அனைவருக்கும் (நபியாக) அனுப்பப்பட்டுள்ளேன்''. (அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரழி), ஆதாரம் : புகாரீ முஸ்லிம்)

அஃது போன்றே அல்குர்ஆனும் ஒரு பொதுமறையாகவே இருக்கின்றது. இதனைக் குர்ஆன் பல்வேறு இடங்களில் மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன. அவற்றில் சில வருமாறு :

''சத்திய, அசத்தியத்தைப் பிரித்தறிவிக்கக்கூடிய (திருக்குர்ஆன் வேதத்)தை உலகத்தார் அனைவருக்கும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யக் கூடியதாக ஆகும் பொருட்டு தனது அடியார் (முஹம்மது) மீது இறக்கி வைத்தான்''. (குர்ஆன் 25:1)

''குர்ஆன் ஆகிய அதுவோ உலகத்தார்களுக்கு உபதேசமேயல்லாது வேறில்லை''. (குர்ஆன் 68:52)

அல்குர்ஆன் ஒரு சமுதாயத்திற்கோ, ஒரு நாட்டிற்கோ, குறிப்பிட்ட குடும்பத்திற்கென்றோ அருளப்பெற்ற வேதமல்ல. அது உலகோர் யாவருக்கும் பொதுவான உபதேசம் நிறைந்த பொதுமறை வேதமாகும். இன்னும் உலகம் முடியும் வரை இதுவே இறுதி வேதமும் ஆகும். அதுமட்டுமன்றி புனிதமிகு அல்குர்ஆன் ஒரு ரஹ்மத் - அருளாகவும் இருக்கின்றது. அல்குர்ஆன் குர்ஆனின் நாமங்கள் எனச் சுமார் 35 பெயர்களைக் குறிப்பிடுகின்றது. அவற்றில் ஒன்றே ரஹ்மத் - அருள் எனும் நாமமாகும்.

''உங்களுடைய றப்பிடமிருந்து தெளிவான ஆதாரமும், நேர்வழியும் ரஹ்மத்தும் திட்டமாக உங்களுக்கு வந்துவிட்டன.'' (குர்ஆன் 6:158)

இவ்வாக்கியத்தின் பொருள் அல்லாஹ்விடமிருந்து தெளிவான ஆதாரமும், தவறான வழியை விட்டு அகற்றும் நேர்வழியும், அல்லாஹ்வின் அருளும் - கிருபையும் கொண்ட குர்ஆன் உங்களுக்கு வந்துவிட்டது என்று அல்-குர்ஆன் குறிப்பிடுகின்றது.

அல்குர்ஆன் அருள் மாரியாக இறக்கியருளப்பட்டிருக்கிறது என்பதற்குப் போதிய சான்றாக மேற்படி வசனம் உள்ளது. குர்ஆன் என்பது அல்லாஹ்வின் கலாம் - பேச்சாகும். குர்ஆனின் வசன நடையும், கருத்தும் அல்லாஹ்வுடையது. ஆயினும் அது இறக்கி அருளப்பட்டது தவிர படைக்கப்பட்டதல்ல என்பது மிகத் துல்லியமான உண்மையாகும்.

மாபெரும் அருளாக இருப்பவன் அல்லாஹ். அ(வ்விறை)னது பேச்சான குர்ஆனும் அருளாகவே இருக்கிறது. எனவே, அருள் என்பது அல்லாஹ்வின் பண்புகளில் ஒன்றாகும். அல்லாஹ்வின் தன்மையோடு, பண்போடு வேறெவையும் நிகராக - ஒத்ததாக இல்லையெனலாம். ஏனெனில், ''அல்லாஹ்வின் அருள் படைக்கப்பட்டதுமல்ல, யாராலும் வழங்கப்பட்டதுமல்ல. மாறாக அது சுயமானது, தன்னைக் கொண்டே தன்னில் ஆனவை'' என்பதில் வேறு கருத்துக்கு கிஞ்சிற்றும் இடமில்லை.

நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் படைப்புக்களில் ஒன்றே. ஆயினும், அவர்களை ஓர் அருளாகவே படைத்தனுப்பினான். இந்த அருள் என்பது அல்லாஹ்வினால் வழங்கப்பட்டது தவிர அல்லாஹ்வின் அருளை ஒத்ததாகவோ, அ(வ்விறை)வனே நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் கோலத்தில் வந்துவிட்டான் என அர்த்தப்படுத்திடல் அறிவு பூர்வமானதல்ல.

அல்லாஹ்வுக்கு அடுத்தது என்ற அந்தஸ்தையே நபியுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு வழங்கமுடியும். வழங்கவேண்டும். குர்ஆன் என்பது அல்லாஹ்வின் பேச்சு என்பதினால் படைப்பு எனும் வட்டத்துள் அடங்காதவை. அதே நேரம் அல்லாஹ்வின் சிருஷ்டிகளில் முதன்மை யானதும், உயர்ந்ததும்,

மேன்மையானதும் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களாகும் என்பதில் வேறு கருத்திற்கு இடமேயில்லை.

இவ்விடயத்தில் ஒரு தாற்பரியத்தை விளங்குவது அவசியமானது. அதாவது, படைப்புக்களின் மூலமாக நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் திகழ்கின்றார்கள் தவிர சிருஷ்டிகளைப் படைப்பவன் எனும் மூலகர்த்தாவாக அவர்கள் இல்லை என்பதையே. ஆயின், நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் மறு வடிவமோ, அவதாரமோ அல்லவென்பது மிக வெளிச்சமான ஒரு சங்கதியாகும்.

அனைத்து உலகங்களுக்கும் ஓர் அருள்மாரியாகவே அல்லாஹ் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களை படைத்தனுப்பி வைத்தான் என்பதும், அல்லாஹ்வின் பேச்சான அல்குர்ஆனை ஓர் அருள்மாரியாகவே இறக்கி அருளினான் என்பதிலும் நாம் தெளிவுபெற்றிருத்தல் வேண்டும். இந்தத் தெளிவுதான் நம்மை நேர்வழியில் நிலைபெறச் செய்ய உதவும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

ஆகவே, அல்குர்ஆனும், இறுதித்தூதர் (ஸல்) அவர்களும் அல்லாஹ்வின் அருட்கொடைகளாகவே உள்ளன.

# 4. மனிதத்துவத்தின் அகமியங்கள்

“**(நபியே!)** நீர் சொல்வீராக, நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே! நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒரே நாயன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டிருக்கிறது....’’ (குர்ஆன் 18:110).

பெருமை மிகு அருமை நபி (ஸல்) அவர்களின் சிறப்புக்கு இழுக்குச் சேர்க்கும் வகையில் - எண்ணத்தில் கண்மணி (ஸல்) அவர்களை நம்மைப் போன்ற சாதாரண மனிதர் என்று கூறுவோர்களின் கூற்றுப்பற்றி நாம் சிந்திப்பதன் மூலம் ஏந்தல் நபி (ஸல்) அவர்களின் ஏற்றங்களை மாற்றுக் கருத்தின்றி ஏற்றுக்கொள்ள நமக்கு ஏதுவாகும்.

உயர்மிகு இறைதூதர் (ஸல்) அவர்களை சிறுமையாக - குறைவாக மதிப்பிட்டு ‘‘நம்மைப் போன்ற சாதாரணமான மனித உணர்வுகளுக்கு விதிவிலக்கானவர்கள் அல்ல’’வென செப்புவதற்கு அவர்கள் ஒப்புதல் தரும் ஒரேயொரு மறைவசனமே மேற்காண்பது. மாநபி (ஸல்) அவர்களை நபியாக மக்கள் முன் அறிமுகம் செய்வதற்கு முன்னர் என்றாலும் சரி, தூதுவராகப் பிரகடனம் செய்த பின்னர் என்றாலும் சரி அவர்கள் ‘‘மனித வர்க்கம் சார்ந்தவர்கள்’’ என்பதை அன்று வாழ்ந்த அனைத்துத் தர மாந்தர்களும் நன்கறிந்திருந்தனர்.

அவ்வாறாயின் அவர்கள் ‘‘நம்மைப் போன்ற மனிதர்’’ என்று கூறவேண்டிய அவசியமே இல்லை. பின்னர் ஏன்? இப்படியொரு இறைவசனத்தை அல்லாஹ் இறக்க வேண்டுமென்பதை நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். அப்போதுதான் இதன் தாற்பரியம் - தத்துவம் என்னவென்பது நமக்குத் துலங்கும்.

மாறாக, குறை அறிவின் துணையோடும், குறை காண்பதென்ற மனநிலையோடும் நின்று எக்கோணத்திலிருந்து ஆராய்ந்தாலும் நிறைவு காண்பது அரிதெனலாம். ஆயினும் மாண்புமிகு மஹ்மூது நபி (ஸல்) அவர்களின்

கண்ணியத்திற்குச் சற்றும் குறையோ, இழுக்கோ வந்துவிடா தென்பது மட்டும் நிச்சயமானது.

உண்மையில் அன்றிருந்த மக்களின் பெரும்பகுதியினர்கள் அற்புதங்களைச் செய்து காட்டுவோரை கடவுளாக, கடவுளின் குமரனாகப் பார்க்கும் - கருதுமொரு மாயை நிலையில் நிலைபெற்றிருந்தனர். நபியுல்லாஹ் (ஸல்) அவர்களும் அற்புதங்களைத் தேவைக்கேற்ப நிகழ்த்திக் காட்டுபவர்களாகவும் இருந்தனர். இதனால் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களையும் இறைவனாக, இறைவனின் மகனாக நம்பிவிடக் கூடாது என்பதற்காகவே மேற்காணும் வசனம் இறக்கப்பட்டதென்று கொள்வதற்கும் இடமுண்டு.

மற்றொரு வகையில் மேற்படி வசனத்தை நோக்கும் போது, ''எனக்கு வஹீ வருகிறது. உங்களில் (யாருக்கும்) வரவில்லை. எனவே வஹீ வராத உங்களை விட வஹீ வரும் நான் மேன்மையாளன்'' என எதிர்வாதம் புரிவதே இவ்வசனத்தின் உள்ரங்கம் எனவும் கொள்ள இடமிருக்கின்றது.

எந்தக் கருத்தை வைத்து இந்த மறை வசனத்தை நோக்கினாலும் ''நம்மைப் போன்ற சாதாரணமான மனிதராக'' நபியுல்லாஹ் (ஸல்) அவர்களைக் கருத இடம் நல்காததைக் காணலாம். அதுமட்டுமன்றி, மார்க்கச் சட்ட அடிப்படையிலும் சரி, நமது யுக்தி - அறிவுரீதியாகப் பார்த்தாலும் சரி அஹமது நபி (ஸல்) அவர்கள் நம்மை விடப் பல்மடங்கு மேன்மையானவர்கள் என்பதைக் காணலாம் - காண வேண்டும்.

ஸஹாபாக்களைப் பார்த்து ''நான் உங்களுக்குத் தினமும் (நோன்பினை முறிக்காமல் தொடராக) நோன்பு நோற்க உத்தரவோ, அனுமதியோ தரவில்லை. அப்படியிருக்க என்னைப் பார்த்து நீங்களும் தினமும் (தொடர்ச்சியாக) நோன்பு நோற்றுவர உங்களில் யார் என்னைப் போன்று (சக்தி பெற்றிருக்கிறீர்கள்)'' எனவும், மற்றொரு அறிவிப்பில் ''நான் உங்களில் யாரைப் போன்றுமில்லை...'' என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள் (ஆதாரம் : புகாரீ முஸ்லிம்)

''நான் உங்களில் யாரைப் போன்றுமில்லை''. (ஆதாரம் : முஸ்லிம்)

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது மேற்படி இறை வசனம் இறசூல் (ஸல்) அவர்கள் நம்மைப் போன்ற மனிதர் என்ற கருத்தைத் தருகிறது. அதே நேரம் மேற்படி இரு ஹதீஸ்களும் ''நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் நம்மைப் போன்ற சாதாரணமான மனிதர் அல்ல''வென்று செப்புகிறது.

''ஒரு பொருளை மற்றொரு பொருளுக்கு உதாரணமாகக் கூறினால், அந்த இரண்டும் எல்லாக் கோணத்திலும் ஒத்திருக்க வேண்டுமென்பது அவசியமில்லை'' என்பது பொதுவிதியாகும். ஆகவே புறத்தோற்றம்- உருவமைப்பில், சில செயல்களில் மற்ற மனிதர்களுக்கு ஒத்திருக் கிறார்கள் நபி (ஸல்) அவர்கள் தவிர வேறில்லை.

அகத்தோற்றத்தின்படி ஏந்தல் நபி (ஸல்) அவர்கள் எந்த வகையிலும் பிற மனிதர்களுக்கு ஒப்பாக இல்லை என்பது தெட்டத்தெளிவான ஒன்று. இதன் பின்னரும் நம்மைப்போன்ற சாதாரண மனிதரே என்று நன்னபி (ஸல்) அவர்களை வர்ணிப்பது, கருதுவது விவேகமான முடிவல்ல என்பதில் தெளிவுபெற்றிருத்தல் வேண்டும்.

''சர்தார் (ஸல்) அவர்களை சாதாரண மனிதர் என்ற அடிப்படையில் மனிதர் என்று அழைப்பது ஹராமாகும். இழிவுக்கண்கொண்டு கூறுவது குப்ராகும்''. (ஆதாராம் : பதாவா ஆலம் கீறி)

மேலே நாம் பார்த்த குர்ஆன் 18:110 ஆம் வசனத்திற்கு கீழ் காணுமாறும் பொருள் கொள்ளலாமென மறை விரிவுரையாளர்களிற் சிலர் கருதுகின்றனர். அது மிக வலுவான கூற்றாகக் கருதவும் இடம் நல்கிறது என்பதை நாம் நினைவில் நிறுத்திக் கொள்ளல் நற்பயனை விளைவிக்கும் என நம்பலாம்.

''உங்களைப்போன்று'' என்பதின் கருத்தாவது, ''மக்களே! நீங்கள் எவ்வாறு அல்லாஹ்வாக இல்லாது அவனின் அடியார்களாக இருக்கின்றீர்களோ அதுபோன்றே நானும் அல்லாஹ் அல்ல! அல்லாஹ்வின் குமாரனும் அல்ல. நான் அல்லாஹ்வின் அடிமைதான்'' என்பதாகும். ''அத்தோடு என்னளவில் வஹீ அறிவிக்கப்படுகின்றது. நான் அல்லாஹ்வின் தூதன். நீங்கள் எனக்கு வழிப்பட்டு நடக்கவேண்டும் என்பதாகும்''.

ஆகவே உம்மி நபி (ஸல்) அவர்கள் எந்த வகையிலும் நம்மைப் போன்ற சாதாரணமான மனிதர் அல்ல. மாறாகப் பல அகமியங்களைத் தன்னுள் கொண்டு உயர்ந்து நிற்கின்ற மனிதப் புனிதர் ஆவார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்வதோடு, நம்மைப் போன்றவர்கள் சத்தியத்தூதர் (ஸல்) அவர்கள் என்று கூறுவதிலிருந்தும் விலகிக்கொள்ள திடசங்கற்பம் கொள்ளல் வேண்டும்.

## 5. நபி (ஸல்) அவர்களது நினைவுச் சின்னங்கள் அல்லாஹ்வின் அருள் மிக்கவை

**அகிலம்** சிறந்தோங்க நன்னெறிகளைப் புகட்டி மேலான வாழ்வில் மனிதர்களை நிலைநிறுத்துவதற்கு அல்லும் பகலும் பல தியாகங்களை மேற்கொண்ட முஹம்மது நபி (ஸல்) அவர்களின் திருமுடியின் மகிமையையும் அதன் பலாபலன்களையும், அவர்கள் பாவித்த பாத்திரங்கள், பொருட்களின் சிறப்புக்களையும், அதன் பேறுகளின் கோணங்களின் சிலவற்றையும் நமது சிந்தனைக்குக் கொண்டு வருவது சாலப்பொருத்தமான ஒன்றாகும்.

அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : நான் கீழ்காணும் இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டேயிருந்தேன். ''நபி (ஸல்) அவர்களின் சிரசிலிருந்து நாவிதர் திருமுடியை எடுத்துக் கொண்டிருக்கிறார். கீழேவிழவிருக்கும் அந்தத் திருமுடியைப் பெற்றுக்கொள்வதற்காக, தோழர்கள் வலம்வந்து கொண்டிருந் தார்கள். அவர்களின் ஒரு முடியும் கூட, யாரேனும் ஒரு தோழரின் கரத்திலிருந்ததே தவிர தரையைத் தொடவில்லை''. (ஆதாரம் : முஸ்லிம்)

''உம்முஸல்மா (ரழி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்களின் சில திருமுடிகளிருந்தன. யாருக்காவது கண் திருஷ்டியின் தொல்லையோ, அல்லது வியாதியின் சிரமமோ இருந்தால், அந்த முடியை உம்முஸல்மா (ரழி) சுத்தமான தண்ணீரில் முக்கி எடுத்து அதை வியாதியுடையோருக்கு குடிக்கக் கொடுப்பார். அதனால் நோய் குணமாகிவிடும்'' (ஆதாரம் : புகாரீ)

இமாம் பைஹகீ கீழ்க்காணும் நிகழ்வை தெரிவிக்கின்றார்கள். ''கலீபா அபூபக்கர் (ரழி) ஆட்சியின் போது நடந்த ''யர்மூக்'' யுத்த களத்தில் காலித் பின் வலீத் (ரழி) தலைமை தாங்கினார்கள். போர் மும்மூரமாக நடைபெற்ற போது தளபதி காலித்பீன் வலீத் (ரழி) அவர்களின் தலைப்பாகை கீழே விழுந்துவிடுகிறது. தளபதி புரவியை விட்டுமிறங்கி அதனைத்தேட முனைந்துவிடுகிறார். மற்ற வீரர்களெல்லாம் தளபதியின் இச்செயலைப் பார்த்து,

''நம்மீது எதிரிகளின் அம்புகள் மழையாய் பொழிந்து கொண்டிருக்கின்றன. அவர்களின் வாள்கள் நம்மீது மின்னலாய் பாய்ந்து கொண்டிருக்கின்றன. வாழ்வா? வீழ்வா? என்ற வினாவின் கொக்கியில் நாம் தொங்கி நிற்கின்ற வேளையில் தளபதி தமது தலைப்பாகையை தேடிக் கொண்டிருக்கிறாரே'' என ஆச்சரியமுற்றுக் கூறினார்கள்.

இதனைச் செவியேற்ற தளபதி அவர்கள், வீரர்களின் வெறுப்பை சற்றும் பொருட்படுத்தவில்லை. இறுதியில் தொப்பி - தலைப்பாகையைத் தேடிப் பெற்றுக்கொண்டார்கள்.அதன்பின்னே போர்க்களம் புகுந்து வெற்றியை ஈட்டினார்கள். தமது செயல்கண்டு வெறுப்படைந்த ஸஹாபாக்களைப் பார்த்து அதன் காரணத்தை இப்படி விளக்கினார்கள். ''என்னுடைய தொப்பியினுள் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சில திருமுடிகளை வைத்திருந்தேன்''

போர்க்களத்தில் தொப்பி - தலைப்பாகை கீழே விழவும் அந்தத் திருமுடியும் ஒரு சமயம் கீழே விழுந்து அதன் மீது மனிதர்களின் கால்கள் மிதி பட நேர்ந்திடுமோ என அஞ்சியே அதனைத் தேடிப் பெற்றிட முற்பட்டேன், பெற்றும் கொண்டேன். அந்தத் திருமுடியின் பாக்கியத்தால்தான், இந்த யாமூக் போரிலும் வெற்றி வாகை சூடினோம். இந்தத் திருமுடியை என்னுடன் வைத்துக்கொண்டு, எந்தப் போர்க்களத்திற்குள் சென்றாலும் அதன் பாக்கியத்தால் வெற்றியுடன்தான் திரும்புவேன்.
(ஆதாரம் : ஹுஜ்ஜதுல்லாஹி அலல் ஆலமீன்)

''நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் இரு கால் உறைகள், ஒரு கம்பு, ஒரு வாளுறை'' என்பன உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களிடம் இருந்தன. அவற்றினை அன்னார் மிகக் கண்ணியத்தோடு பாதுகாத்து அவற்றைத் தினமும் பார்வையிடவும் செய்வார்கள். சிறப்பு விருந்தினர் வருகை தரும் போது ''யார் மூலம் உங்களைக் கண்ணியப்படுத்தினானோ அவரின் அனந்தரப் பொருட்கள் இவை'' என்று கூறுவார்கள். (ஆதாரம்: நூறுல் ஈமான்)

''மூஆவியா (ரழி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்களின் லுங்கி, சட்டை, மேலாடை, சில திருமுடிகள்.... இருந்தன.'' (ஆதாரம் : இஜ்மால்)

''நபி (ஸல்) அவர்களின் திருமுடி கீழே விழ விடாது தாங்கிப் பிடித்து பரக்கத்திற்காகப் பாதுகாத்து வைக்கும் வழக்கம் ஸஹாபாக்களிடம் இருந்தது'' (ஆதாரம் : ஷரஹ் முஸ்லிம் பாகம் இரண்டு)

அலி (ரழி) அறிவிக்கிறார் : ''நபி (ஸல்) அவர்கள் தங்களின் ஒரு திருமுடியை கையில் எடுத்துக்கொண்டு இவ்வாறு எச்சரித்தார்கள்; எவனும் எனது முடியிலிருந்து ஒரு முடிக்கேனும் அவமரியாதை செய்தானேயானால் அவன் மீது சுவனம் ஹராமாகும். அவன் சுவனம் புகமாட்டான்''.
(அறிவிப்பவர் : இப்னு அஸாஹிர், ஆதாரம்: ஜாமிவுஸ் ஸஹீர்)

அஸ்மா (ரழி) அவர்கள் சொல்கிறார் : ''நபி (ஸல்) அவர்களின் ஜுப்பா ஒன்று ஆயிஷா (ரழி) அவர்களிடம் இருந்தது. ஆயிஷா (ரழி) அவர்களின் மரணத்திற்குப் பின்னர் அதனை நான் பெற்றேன். தற்போது அந்த ஜுப்பாவைக் கழுவி நோயுற்றோருக்கு அருந்தக் கொடுக்கின்றோம். அதன் மூலம் அவர்கள் சுகம் பெறுகின்றனர். (ஆதாரம் : முஸ்லிம்)

இந்த ஹதீஸின் மூலம் ஸாலிஹீன்களின் உடைகளைக் கொண்டும், ஞாபகச் சின்னங்களைக் கொண்டும் பரக்கத் பெற ஆதாரம் இருக்கிறது.
(ஆதாரம் : ஷரஹ் முஸ்லிம்)

''நான் மதீனாவுக்குச் சென்றிருந்தேன். அங்கே அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரழி) அவர்களைச் சந்தித்தேன். என்னிடம் அவர்'' எனது வீட்டுக்கு வாருங்கள் நபி (ஸல்) அவர்கள் நீர் அருந்திய புனித பாத்திரத்தில் தங்களுக்குப் பானம் தருகின்றேன். நபி (ஸல்) அவர்கள் தொழுத இடத்தில் நீங்களும் தொழலாம்'' என்றார். அவரோடு நான் சென்றேன் புனிதமிகு அப்பாத்திரத்தில் எனக்கு கஞ்சி பருகத் தந்தும் பேரீத்தம் பழமும் தந்தார்கள். நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொழுத இடத்திலும் நான் தொழவும் செய்தேன்.'' (அறிவிப்பவர் : அபூதர்தா (ரழி).
(ஆதாரம் : புகாரீ)

காழி அபூ அலி (ரஹ்) அவர்கள் தமது ஞானக் குருவான அபுல் காஸிம் இப்னு அல் மஃமூன் என்பவரிடமிருந்து அறிவிக்கிறார் : ''எங்களிடம் நபி (ஸல்) அவர்கள் உபயோகித்த கோப்பை ஒன்று இருந்தது. நோயாளிகளுக்காக அதில் நீரை ஊற்றிவைப்போம். அதன் மூலம் நோயாளிகள் நலம் பெறுவர்'' (ஆதாரம் : கிதாபுஸ் ஷிபா, பாகம் - 1)

மேற்படி ஆதாரங்களிலிருந்து நபி (ஸல்) அவர்களின் உயர் திருமுடி மூலமும் அவர்கள் பாவித்த பொருட்கள் மூலமும் நோய் நிவாரணமும், நினைவுச் சின்னங்களாகப் பாதுகாத்து வைத்தலும், அதன் மூலமான பரக்கத்துக்களும் பெறத்தக்கது என்பதை அவதானிக்கலாம். இவ்வாறான சிறப்புக்கள் நபிமார்களுக்கு உண்டென்பதைப் பின்வரும் இரு நிகழ்வுகள் மூலம் நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

அதேநேரம் நபி (ஸல்) அவர்களுக்கென்று எவ்விதமான தனிச் சிறப்புக்களும் இல்லை. அவர்களும் எம்மைப்போன்ற சாதாரணமான மனிதர்தான் எனப் பறைசாற்றும் விளக்கமில்லாதவர்களுக்குப் போதிய போதனைகளையும் இதன் மூலம் பெறக்கூடியதாகவுள்ளன.

''உங்களிடம் ஒரு தாபூத் (பேழை) நிச்சயமாக வரும். உங்கள் இரட்சகனிடமிருந்து ஒரு அமைதியும், மூஸாவின் கிளையினரும், ஹாரூனின் கிளையினரும் விட்டுச் சென்றவற்றிலிருந்து சொச்சமும், அதில் (-அப்பேழையில்) இருக்கின்றன. அதை மலக்குகள் சுமந்து கொண்டு வருவர். நீங்கள் உண்மை விசுவாசிகளாகயிருப்பின் இதில் உங்களுக்கு நிச்சயமாக அடையாளமுண்டு.'' (குர்ஆன் 2:248)

தாபூத் பேழை பெட்டியினுள் இருந்த பொருட்கள் என்ன என்பது பற்றி குர்ஆன் விரிவுரையாளர்கள் ஏறத்தாள ஒருமித்த கருத்தையே முன்வைத்திருக்கின்றனர். இதனைப் பின்வரும் சான்றாதாரங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன.

''அந்தப் பெட்டியில், நபி மூஸா (அலை) அவர்களுக்கு அருளப்பட்ட தௌராத் வேதம் பொறிக்கப்பட்ட சில பலகைத் துண்டுகளும், மூஸா, ஹாரூன் ஆகிய இரு நபிமார்களின் கைக்கோல்களும், ஹாரூன் நபியின் தலைப்பாகையும் இருந்தன.'' என இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள். (ஆதாரம்: தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன் - ஸூரத்துல் பகரா)

''பலகைத் துண்டுகள் மூஸா நபியின் கம்பு, ஆடைகள், தௌராத் வேதத்தின் ஒரு பகுதி, மூஸா நபியின் செருப்புக்கள், ஹாரூன் நபியின் தலைப்பாகை'' அப்பெட்டியில் இருந்தன. (ஆதாரம் : தஃப்ஸீர் மதாரிக்குத் தன்ஸீல்)

''அந்தப் பெட்டியில் மூஸா நபியின் கம்பு, செருப்புக்கள், ஹாரூன் நபியின் கம்பு, தலைப்பாகை, மன்னுஸ்ஸல்வாவின் ஒரு பகுதி'' இருந்தன. (ஆதாரம்: தப்ஸீர் லூபாபுத்தஃவீல்)

அந்தப் பெட்டியினுள் ''பலகைத்துண்டு, மூஸா நபியின் கம்பு, ஆடைகள், ஹாறூன் நபியின் தலைப்பாகை போன்றவை இருந்தன'' (ஆதாரம் : தஃப்ஸீர் பைலாவி)

''இஸ்ரவேலர்கள் எங்கே சென்றாலும் இப்பெட்டியை உடன் கொண்டு செல்வர். இப்பெட்டியினால் அவர்களுக்கொரு அமைதி ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது. அதாவது இப்பெட்டி எவ்விடத்தில் இருந்ததோ அதனைக் கண்ணுறுகின்ற அவர்களது மனமும் சாந்தியடையும்''. (ஆதாரம் : தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன் - ஸூரத்துல் பகரா)

''பனூ இஸ்ரவேலர்களிடம் இருந்த அந்தப் பெட்டியினுள் நபி மூஸா (அலை), நபி ஹாரூன் (அலை) ஆகியோர்கள் விட்டுச்சென்ற பொருட்களே இருந்தனவென்றும், போர்க் காலங்களில் இந்தப் பெட்டியினை முன்னால் வைத்து உதவி தேடுவர்; வெற்றியும் பெறுவர்'' எனவும் தப்ஸீர்களான கபீர், ரூஹுல்மஆனி, ஜலாலைன் போன்றவற்றிலும் காணப்படுகின்றன.

நபிமார்களின் பொருட்களில் அருள்கள் நிறைந்திருக்கின்றன என்பதற்கு மேற்படிப் பேழை கொண்டிருந்த பொருட்களும், அதன் மூலம் அம்மக்கள் அடைந்த நன்மைகளும் தக்க சான்றாகின்றன. இதனை இன்னும் தெளிவாகவும், வலுவாகவும் பின்வரும் நிகழ்வு நிதர்சனமாக்குகின்றன.

''இந்த என்னுடைய சட்டையை நீங்கள் கொண்டு போய் என் தந்தையுடைய முகத்தின் மீது அதனைப் போடுங்கள்; பார்வை உள்ளவராய் அவர் ஆகிவிடுவார்.....''.
(குர்ஆன் 12:93)

நபி யூஸுப் (அலை) அவர்களின் பிரிவினால் நபி யாஃகூப் (அலை) அவர்கள் அழுதழுதே தனது பார்வையை இழந்திருந்ததாகவும். பின்னர் நபி யூஸுப் (அலை) அனுப்பி வைத்த சட்டையை அவர் முகத்தில் போட்டதும் பார்வை திரும்பியதாகவும் மேற்படி வசனம் தருகின்ற விளக்கங்களாகும்.

**ஆகவே நபிமார்கள் பாவித்த பொருட்கள் மூலம் சில அருள்களை அல்லாஹ் வெளியாக்கி வைத்திருக்கின்றான் என்பதற்கு மேற்படி நிகழ்வுகள் தக்க ஆதாரமாக அமைகின்றன. அந்த வகையில் நபி (ஸல்) அவர்களது சில**

பொருட்கள் மூலமும் அல்லாஹ்வின் அருட்கள் வெளிப்படக்கூடியதாக உள்ளன என்பதில் சந்தேகமில்லை.

# 6. நேசிப்பது நம்பிக்கையாகும்

''நாம் உமக்காக உம்முடைய புகழை மேலோங்கச் செய்தோம்''. (அல்குர்ஆன் 94:4)

ரபீயுல் அவ்வல் மாதத்துக்கு சிறப்பும், பெருமையும் வந்தது வள்ளல் நபி (ஸல்) அவர்கள் இவ்வையகத்தில் வந்துதித்த நன்நாளை அது கொண்டிருப்பதினால்தான். இதற்கு முன்னர் இம்மாதம் சாதாரண மாதமாகவே கழிந்து சென்றது. ஆயினும் இது ஒரு வசந்த காலமாகவே கணிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வசனத்தில் ''அவர்களுக்காகவே அல்லாஹ் அவர்களின் புகழை மேலோங்கச் செய்ததாக'' அல்லாஹ் அறிவிக்கின்றான். இத்தகைய பேற்றை வேறெந்த நபிமார்களுக்கோ அல்லது வேறெந்த உத்தமர்களுக்கோ, புண்ணிய சீலர்களுக்கோ, இறைநேசர்களுக்கோ ஏற்படுத்திவிடவில்லை. இதிலிருந்தே தாஹா நபி (ஸல்) அவர்களின் தனிப்பெரும் சிறப்பை நாம் விளங்க முடியும்.

மேற்படி வசனத்திலிருந்து பின்வரும் விளக்கங்களைப் பெற முடியுமென தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன் அம்மஜுஊஸ்உவில் காணப்படுகிறது.

''உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் என்றென்றும் பிரஸ்தாபிக்கப்படும் என்ற உண்மையையே இவ்வாக்கியம் குறிப்பிடுகின்றது. நபி (ஸல்) அவர்கள் மீது பொறாமையையும், புழுக்கத்தையும் கொண்டிருந்த கொடிய எதிரிகள் கூட நாயகத்தைப் பற்றிய பிரஸ்தாபம் வரும் போது தங்களையும் அறியாமலேயே நபி (ஸல்) அவர்களைப் போற்றிப் புகழ்வதும், அவர்களின் வாழ்க்கை முறைகளை உலகோர் பின்பற்றி ஒழுக வேண்டுமெனக் கூறுவதும் யாவரும் அறிந்த உண்மை.

உலகிலுள்ள முஸ்லிம்கள் அனைவரும் நபிகள் நாயகத்தின் திருப்பெயர் உச்சரிக்கப்படும் போதெல்லாம் ''ஸல்லல்லாஹுஉ அலைஹிவஸல்லம்'' என்ற சலவாத்தைக் கூறுவதைத் தங்களின் கடமையாகக் கொள்வதையும் பார்க்கிறோம். இவ்வாறு நபி (ஸல்) அவர்களின் கீர்த்தியும், பிரஸ்தாபமும் இவ்வுலகம் உள்ளளவும் மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே வரும் என்பதையும் இவ்வாக்கியம் முன்னறிவிப்புச் செய்கிறது.''

ஆயின் நபி (ஸல்) அவர்களின் கீர்த்தி ஓங்கி முழங்கக் கூடியது. அதுமட்டுமன்றி நபி (ஸல்) அவர்கள் இறுதி நபியாக வருவார்கள் என்பதை முன்வந்த நபிமார்களும், முன் இறக்கப்பட்ட ஸுஃபுகளும், வேதங்களும் முன்னறிவிப்புச் செய்துள்ளன. அத்துடன் நபி (ஸல்) அவர்கள் இந்த மண்ணுலகம் வருவதற்கு முன்னரே எல்லா நபிமார்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் என்பதை இறைமறை இப்படிச் செப்புகிறது.

''நபிமார்களிடம் அல்லாஹ் ஒரு உறுதி மொழி வாங்கிய போது, ''நான் உங்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கொடுத்திருக்கின்றேன். பின்னர்

உங்களிடம் இருப்பதை மெய்யாக்கும் ரஸூல் வருவார். நீங்கள் அவர்மீது திடமாக ஈமான் கொண்டு அவருக்கு உறுதியாக உதவி செய்வீர்களாக (எனக் கூறினான்) நீங்கள் (இதை) உறுதிப்படுத்து கிறீர்களா? என்னுடைய இந்த உடன்படிக்கைக்குக் கட்டுப்படுகிறீர்களா? என்று கேட்டான். நாங்கள் (அதை ஏற்று) உறுதிப்படுத்துகிறோம் என்று கூறினார்கள்''. (குர்ஆன் 3:81)

முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் பற்றி இந்த உறுதி மொழி வாங்கிய போது எல்லா நபிமார்களையும் ஒன்றுதிரட்டி ஒரே தடவையில் வாங்கியதா? அல்லது தனித்தனியாக வாங்கப்பட்டதா என்பதில் கருத்து வேறுபாடுண்டு. எது எப்படி இருப்பினும் இந்த உறுதிமொழியை எப்போது எப்படி வாங்கியது என்பதில்தான் கருத்து முரண்பாடுகள் தவிர, நபியுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏற்றுக்கொண்ட உறுதிமொழி வாங்கியதில் அல்லவென்பது தெளிவானது. இதனால் நபி (ஸல்) அவர்களின் மகத்துவங்களில் இதுவும் ஒன்றாகிவிடுகின்றது.

இப்பிரபஞ்சத்தின் மூலமான மஹ்மூது நபி (ஸல்) அவர்கள் முன், பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட கண்ணியமிக்க மாமனிதர் என்பதைக் குர்ஆன் பின்வருமாறு குறித்துரைக்கின்றது.

''உம்முடைய பாவத்தில் முந்தியதையும், பிந்தியதையும் அல்லாஹ் உமக்கு மன்னிப்பதற்காகவும்....'' (குர்ஆன் 48:2) இந்த மறை வசனத்திற்கு பல்வேறு விளக்கங்களைக் குர்ஆன் விரிவுரையாளர்கள் முன்வைக்கின்றனர். அவற்றிலிருந்து இரு வேறு தஃப்ஸீர்கள் கூறுகின்ற விளக்கங்கள் கீழ்காணுமாறு காணப்படுகின்றன.

''நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் குற்றமற்றவர்களாய் இருந்தும் அவர்களின் முன்னர், பின்னருள்ள பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட்டதாக அல்லாஹ் குறிப்பிட்டிருப்பது அவர்களின் இயற்கைப் பரிசுத்தத்தன்மையை எடுத்துக் காட்டுவதற்காகவேதான்''. (ஆதாரம் : தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன் ஹாமிம் ஜுஸ்உ.

''இதற்கு முன்னர் ஆரம்பத்திலிருந்து பாவம் செய்வதை விட்டு உம்மைக் காத்து இரட்சித்தது போல் இனிமேலும் அ(வ்விறை)வன் இரட்சித்துக் காப்பாற்றுவான்''. (ஆதாரம் : தஃப்ஸீறுல் ஹமீத் பீ தஃப்ஸீறுல் குர்ஆனில் மஜீத் பாகம் - 6)

''உம்முடைய பாவத்திற்காக நீர் மன்னிப்பும் தேடிக்கொள்ளும்.'' (குர்ஆன் 40:55)

''நீர் அறிந்து உமது பாவத்திற்காகவும், விசுவாசிகளான ஆண்கள், விசுவாசிகளான பெண்களுக்காகவும் மன்னிப்புக் கோருவீராக'' (குர்ஆன் 47:19)

மேற்படிய இரு திருமறை வசனங்களை அடிப்படையாக வைத்துச் சிலர் ''நபி (ஸல்) அவர்கள் முன், பின் பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்கள்'' எனக் கூறமுடியாதென வாதஞ் செய்யத் துணியலாம். இவ்வாறு துணிவோர்களிடம் அறிவில்லை என்பது ஒருபுறமிருக்க, இஸ்லாமிய அகீதா - அடிப்படைக் கொள்கைத் தெளிவில்லாததனால் ஏற்பட்ட மருட்சி என்றே கூறவேண்டும். ஏனெனில் ''நபிமார்கள் அனைவரும் பாவத்தை விட்டுப் பாதுகாக்கப்பட்ட

மஹ்ஸுன்கள்'' ஆதலில் நபி (ஸல்) அவர்களுக்கும் இது பொருத்தமாகும்.

''சாமானியரான மனிதர்கள் பாவம் என்று எதனைக் கருதுகிறார்களோ அதை நபி (ஸல்) அவர்கள் செய்திருக்கிறார்கள். இதனால்தான் உமது பாவத்துக்காக மன்னிப்புக் கேட்பீராக என்று அல்லாஹ் கூறியிருக்கின்றான் என்று கருத்துக்கொள்ளலாகாது. சில எதிர்மதவாதிகள் இவ்விதமாகவே கருத்துக் கொண்டு நபி (ஸல்) அவர்கள் பாவத்தைவிட்டும் தப்பவில்லை என்று பிரசாரம் செய்கின்றனர். அவர்களது இக்கருத்து அறியாமையையும், துவேசத்தையும் கொண்டதாகும்.

ஆத்மார்த்த முன்னேற்றத்தின் படித்தரங்களை ஒவ்வொரு வினாடியிலும் கடந்து சென்றுகொண்டிருந்த நபி (ஸல்) அவர்கள் தாங்கள் சற்று நேரத்திற்கு முன்னால் இருந்த நிலையைத் தங்கள் இயல்புக்குத் தகாததாகவே கருதி இருப்பார்கள். ஆதலால் அந்தத் தகுதிக்காக இறைவனிடம் அவர்கள் மன்னிப்புக் கேட்டார்கள். இதனால்தான் தினசரி நூறுவிடுத்தம் அல்லாஹ்விடம் நபி (ஸல்) அவர்கள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் என்பதாக ஹதீஸில் கூறப்பட்டுள்ளது''. (ஆதாரம்: தஃப்ஸீறுல் ஹமீத் பீ தஃப்ஸீறுல் குர்ஆனில் மஜீத் பாகம் - 6)

மேற்படி விளக்கம் குர்ஆன் 47:19ஆம் வசனத்துக்குரியது. இதே வசனத்திற்கு இன்னொரு கோணத்தில் மற்றொரு தஃப்ஸீர் விளக்கம் பகர்கின்றது. அது பின்வருமாறு காணப்படுகின்றது.

''அந்த நபியோ இறைவன் ஒருவன் என்று நன்கறிந்திருப்பதோடு, பாவத்தை விட்டும் தூய்மையாக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அங்ஙனமிருக்க இவ்வாறு உத்தரவிடுவதின் கருத்தென்னவென்றால், அவர்கள் கொண்டுள்ள நன்னம்பிக்கையில் உறுதியாக இருக்கவும், அவர்களது கூட்டத்தினருக்கு அதைக் கற்றுக் கொடுக்கவுமேதான்''. (ஆதாரம்: தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன் - ஹாமீம், காலபமா ஜுஸ்உகள்)

நபியை விளித்து அல்லாஹ் கட்டளை பிறப்பித்தாலும் அது மக்களுக்கு மானதென்பதும் தெளிவானது. எனவே பாவம் நிகழ்ந்தால் மனிதன் பாவமீட்சி - தௌபா கேட்கவேண்டுமென்ற படிப்பினையை வல்லோன் கற்றுக் கொடுத்ததாகவும் பொருள் கொள்ளலாம்.

இப்படி எந்த அடிப்படையில் வைத்து நோக்கினாலும் மனிதப் புனிதராக, அல்லாஹ்வின் மீது நெருக்கத்தில் உறைந்த பெருமகனாக நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் திகழ்வதைக் காணலாம். அத்தகைய பெருந்தகை மீது அன்பு செலுத்துவது நமக்கு இன்றியமையாததொன்றாகும்.

"நான் அல்லாஹ்வினால் எல்லோரையும் விட அதிகமாக நேசிக்கப்படும் அன்பன். ஆனால் இதனை ஒரு பெருமையாக நான் கூறவில்லை" என நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள். (அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரழி) ஆதாரம்: திர்மிதி)

அல்லாஹ்வினால் அதிகமாக நேசிக்கப்படும் நபி (ஸல்) அவர்கள் நம்மாலும் நேசிக்கப்பட வேண்டிய ஒருவராகும். அதுமட்டுமன்றி ஏந்தல் நபி (ஸல்) அவர்கள், விசுவாசிகளுக்கு அவர்களின் உயிரினிலும் பார்க்க மேலானவர்களாக இருக்க வேண்டுமென அல்லாஹ்வே ஆணை பிறப்பித்துள்ளான்.

''விசுவாசிகளுக்கு அவர்களுடைய உயிர்களைவிட (நமது தூதரான) நபிதான் மிக்க பிரதானமானவர்''. (குர்ஆன் 33:6)

''தன்னை வணங்குவதற்கு அடுத்து தாய் தந்தையரை கண்ணியப்படுத்த வேண்டுமென்று அல்லாஹ் கட்டளையிட்டிருக்கின்றான். எனினும் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு மூஃமினுக்கும் அவருடைய பெற்றோரை விட உகப்பானவர்களாகவும், அன்பில் நெருக்கமானவர்களாகவும் இருக்க வேண்டுமென்பது இவ்வாயத்தின் கருத்தாகும்''. (ஆதாரம் : குர்ஆன் தர்ஜமா)

''தன் பெற்றோர், பிள்ளைகளை விடவும் எல்லா மனிதர்களை விடவும், உங்களில் ஒருவருக்கு நான் நேசத்துக்குரியவனாக ஆகாதவரை அவர் ஈமான் கொண்டவராகமாட்டார்''. (அறிவிப்பவர் : அனஸ் இப்னு மாலிக் (ரழி) ஆதாரம்: புகாரீ, முஸ்லிம்)

''ஒரு விசுவாசிக்கு இம்மை மறுமை இரண்டிலும் நான் ஏற்றமானவனாக இருந்தாலன்றி (அவர்) உண்மை விசுவாசியல்ல''. (ஆதாரம் : புகாரீ, முஸ்லிம்)

விசுவாசிகளின் உள்ளங்களில் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதான அன்பு என்றும் நிலைகொண்டிருக்க வேண்டும். அந்த அன்பு தன்மீது, தன் உயிர் மீது கொள்ளும் அன்பை விடவும் மேலானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் உண்மையான விசுவாசிகளாக வாழ முடியும் என்ற உண்மையை மேற்படி குர்ஆன் வசனங்களும் நபி மொழிகளும் முன்வைக் கின்றன. நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது வைக்கும் அன்பு பின்வருவனவைகளில் பிரதிபலிக்க வேண்டும். அப்போதுதான் அன்பின் யதார்த்தம் நிறைவு பெறும். நபியுல்லாஹ் (ஸல்) அவர்களை அல்லாஹ்வின் தூதராக ஏற்றுக் கொள்ளல், அவர்களுடைய கட்டளைகளை சிரமேற்கொண்டு வாழ்வது, அவர்களின் நடைமுறைமைகளைப் பின்பற்றுவது, அவர்கள் மீது அதிகமாக ஸலவாத் கூறுவது, அவர்களது கப்ரைத் தரிசிப்பது, அவர்களின் குடும்பத்தினர்கள் மீது உவப்பு வைப்பது.

நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்வது நமது ஈமானுடன் தொடர்பு பட்டுக் காணப்படுகின்றது. இதனால்தான் ஸஹாபாக்கள் அளவு கடந்த அன்பை நபி (ஸல்) அவர்கள் மீது வைத்திருந்தார்கள் என்பதை இஸ்லாமிய வரலாறு தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இதற்குப் பின்வரும் நிகழ்வுகள் நல்ல உதாரணங்களாகும்.

ஒரு முறை ஒரு மனிதர் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து மறுமையைப் பற்றி விசாரித்தார். அதற்கு அண்ணலார் ''நீர் அந்த மறுமைக்காக எதனைத் தயார் செய்து வைத்திருக்கிறீர்'' என்று வினாவினார்கள். அந்த மனிதர் ''அல்லாஹ் மீதும் அவனது தூதர் மீதும் நான் கொண்டிருக்கும் அன்பைத் தவிர வேறு எதனையும் தயார் செய்து வைக்கவில்லை'' எனப் பதிலளித்தார். இதனைக் கேட்ட நாயகம் (ஸல்) அவர்கள் ''நீர் யாரை நேசித்தீரோ அவருடன் (மறுமையில்) இருப்பீர்'' எனப் பதிலளித்தார்கள். (அறிவிப்பவர் : அனஸ் (ரழி) ஆதாரம் : புகாரீ, முஸ்லிம்)

ஒரு மனிதர் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து ''அல்லாஹ்வின் தூதரே நான் தங்கள் மீது அளவில்லாத அன்பு கொண்டிருக்கிறேன். தங்கள் ஞாபகம் வந்துவிட்டால் உடனே தங்களை வந்து பார்த்துவிட வேண்டும். இன்றேல்,

உயிரே போய்விடும் போல் இருக்கிறது. நிலைமை இப்படி இருக்க, மறுமையில் எனக்குத் தங்களோடு இருக்கும் பாக்கியம் கிட்டாவிட்டால் நான் என்ன செய்வேன்? அதனை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாதே! எனவே மறுமையில் தங்களுடன் நானும் இருக்க விரும்புகின்றேன்'' எனக் கூறினார். நபி (ஸல்) அவர்கள் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தார்கள். இச்சந்தர்ப்பத்திலேயே பின்வருமாறு அல்லாஹ் வஹீ அறிவித்தான்.

''யார் மெய்யாகவே அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் வழிபடு கின்றார்களோ, அவர்கள் அல்லாஹ்வின் அருளைப் பெற்ற நபிமார்கள், சத்தியவான்கள், உயிர்த் தியாகிகள், நல்லொழுக்கம் உடையவர்கள் முதலியோர்களுடன் மறுமையில் வசிப்பார்கள்'' (குர்ஆன் 4:69) என்னும் இத்திரு வசனத்தை உடனேயே நபி (ஸல்) அவர்கள் அந்த மனிதரை அழைத்து ஓதிக் காண்பித்தார்கள். (ஆதாரம் : ஜவாமிஉல் கலீம் மினவ் அஹாதீஸின்நபவிய்யதிஸ்ஷரீபா)

''காளீ இயல் (ரழி) கூறுகின்றார்கள் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களது சுன்னத்தைக் கடைப்பிடிப்பதற்கு முயற்சி செய்வதும், அவர்களது ஷரீஅத்தை எதிர்ப்பவர்களுக்குத் தகுந்த பதில் கொடுப்பதும் உயிர், பொருள் அனைத்தையும் கொடுத்தாயினும் அன்னாரைச் சந்திக்க வேண்டுமென்ற ஆவல் கொண்டிருப்பதும் அவர்களது முஹப்பத்தில் கட்டுப்பட்டதாகும்''.

எனவே இந்நேசமில்லாமல் ஈமான் பூரணத்துவமடையாது. நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் அந்தஸ்து தாய், தந்தை, உயர்ந்தவர்கள், உபகாரிகள் அனைவரையும் விடச் சிறந்ததாய், உயர்ந்ததாய் ஆகாதவரை ஈமான் சரியாகாது. எவரிடம் இந்த நம்பிக்கை இல்லையோ அவர் மூஃமினே அல்ல''வென இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். (ஆதாரம்: ஷரஹ் முஸ்லிம் - இமாம் நவவீ (ரஹ்)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது இணையிலா அன்பைச் செலுத்தி, அவர்களின் நல்லாசியைப் பெற்று ஈருலகிலும் ஈடேற்றம் நிறைந்த சிறப்பான வாழ்வினை நாம் அடைந்துகொள்வதற்கு உறுதியுடன் செயற்படும் மனோவலிமையை நோக்கி நமது வாழ்வு முறைமை திரும்ப வேண்டும்.

## 7. அல்லாஹ்விற்கு வழிப்படும் பாதை

''நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் உங்களுக்குரிய அழகான முன்மாதிரி இருக்கிறது''. (குர்ஆன் 33:21)

விசுவாசிகளின் வாழ்க்கை செவ்வையாகச் செல்வதற்குரிய முறையான வழிகாட்டல்கள் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இருக்கிறது என்பதை இவ்வசனம் நமக்குத் தெளிவாக விவரிக்கின்றது. இதில் சந்தேகத்திற்கோ, கேள்விக்கோ கிஞ்சித்தும் இடமிராது என்பது பகிரங்கமானது.

உண்மையில் மனித வர்க்கத்திற்குரிய நேர் வழிகாட்டல்கள், முறையான வாழ்வு நெறிகளைக் கொண்டிலங்கும் தனிப்பெரும் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மட்டும் என்பதும், முன்மாதிரிகள் நிறைந்தவர்களாக அவர்கள்

மிளிர்ந்தவர்கள் என்பதையும் பின்வரும் நான்கு காரணங்களினால் உறுதியாக நம்ப முடியும்.

1. மனித வாழ்க்கையில் சந்திக்கக் கூடிய அனைத்துத் துறைகளிலும் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் சங்கமித்திருக்கிறார்கள். உறவு முறைகள் என்றாலும் சரி, ஆட்சி நிலைவரங்கள் என்றாலும் சரி, குடும்ப உறவுகள், சமூகங்களின் கூட்டு வாழ்வு போன்ற எந்த துறைகளானாலும் அவற்றிலே கால்பதித்து, சீரிய நெறிமுறைகளைச் செம்மையாகக் காட்டியிருக்கின்றார்கள்.

2. நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் சொல்வது, செய்வது என்பதெல்லாம் அவர்களின் சுய எண்ணத்தின் வழியிலல்ல. மாறாக அல்லாஹ்விடமிருந்து கிடைக்கின்ற நெறிப்படுத்துதலிலிருந்தாகும். இதனைக் குர்ஆன் பின்வருமாறு பிரஸ்தாபிக்கின்றது. ‘‘உங்கள் தோழர் வழி கெட்டு விடவுமில்லை; அவர் தவறான வழியில் செல்லவுமில்லை. அவர் தம் இச்சைப்படி (எதையும்) பேசுவதில்லை. அது அவருக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டதேயன்றி வேறில்லை’’. (குர்ஆன் 53:2 - 4)

நபியுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் காணப்பட்ட வாழ்க்கை அமைப்புக்கள், அவர்களினால் எடுத்துரைக்கப்பட்ட அறநெறி முறைமைகள் யாவும் புனிதமானதும், சத்தியம் நிறைந்ததும் என்பது நிதர்சனமானது. அவர்களிடம் இருந்து வெளிப்பட்டவைகள் யாவும் அல்லாஹ்வினால் வழங்கப்பட்டவைகளாகும்.

3. நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறைமைகள் எப்படி இருந்ததென ஒரு தடவை ஆயிஷா (ரழி) அவர்களிடம் வினவப்பட்டபோது, ‘‘குர்ஆனை நீங்கள் ஓதவில்லையா’’ எனத் திருப்பிக் கேட்டதாக நம்பகரமான நபிமொழியொன்று தெரிவிக்கின்றது. அவ்வாறாயின் அவர்களின் வாழ்க்கை குர்ஆன் கூறும் வழியில் சற்றும் பிறழாது இருந்தனவென்பதே பொருளாகும். அத்தகைய வாழ்க்கை உடையோர் களின் வாழ்விலிருந்து முன்மாதிரிகளைப் பெறுகின்ற போது அதுவொரு நேர்வழிக்குரியதன்றி வேறிருக்க முடியாதென்பது தெளிவானது.

4. நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்கள் அ(வ்விறை)வனுடைய வழிகாட்டல்கள் எனவும், அல்லாஹ்வைப் பின்பற்றுவதன் அடையாளம் முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதாகும் எனவும் அல்லாஹ்வே எடுத்துரைக்கின்றான். இந்தப் பறைசாற்றுதலைக் குர்ஆன் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றது.

   ‘‘எவன் (அல்லாஹ்வுடைய) தூதருக்கு (முற்றிலும்) வழிப்ப(ட்)டு (நடக்)கின்றானோ அவன் நிச்சயமாக அல்லாஹ்வுக்கே வழிப்பட்டான்’’. (குர்ஆன் 4:80)

இந்த மறை வசனத்தைக் கீழ்வரும் ஹதீஸ் உறுதி செய்கின்றது. அதே நேரம் எவ்வளவு நெருக்கமாக அ(வ்விறை)வனின் தோழரை பெருமைப் படுத்தியுள்ளான் என்பதையும் நாம் உணரக்கூடியதாகவுள்ளது.

‘‘எவர் எனக்கு கீழ்ப்படுகின்றாரோ அவர் அல்லாஹ்வுக்கு வழிப்பட்டவராகிறார்.

எவர் எனக்கு மாறு செய்கிறாரோ அவர் அல்லாஹ்வுக்கு மாறு செய்தவராவார்''. (அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) ஆதாரம் : புகாரீ, முஸ்லிம்)

''அ(வ்விறை)வனுக்கு வழிப்பட்டவர்களில் (முஸ்லிம்களில்) நான் முதன்மையானவனாகவும் இருக்கிறேன் என்று (நபியே நீர் கூறும்.'' (குர்ஆன் 6:163)

ரஸூல் (ஸல்) அவர்கள் இறைவனுக்கு வழிப்பட்டளவில் இவ்வுலகில் வேறு யாரும் இருக்க முடியாது. அவர்களின் நிலை மேலானது என்பதில் ஐயமில்லை என்பதை இந்த ஆயத்து ஆணித்தரமாக அறைகின்றது.

"(நம்முடைய) தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் (மனமொப்பி) எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதனை உங்களுக்குத் தடுத்துக் கொண்டாரோ, அதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்'' (குர்ஆன் 59:7)

இத்தகைய பேறுடைய நபி (ஸல்) அவர்களின் அழகிய வழிமுறைகள் மேன்மையுடையதாகவும், நேரிய வழிக்கான சீரிய நடைமுறையாகவும் அமைந்திருந்தன என்பதில் எவ்விதமான ஐயங்களுமில்லை. ஏனெனில் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் பிறப்பு தொட்டு, இவ்வுலகை விட்டு மறைவு வரையான வாழ்க்கைச் சரிதை எவ்விதமான இடைச் செருகல்களுமின்றி தொகுக்கப் பட்டிருக்கின்றது.

ஆகவே, பின்பற்றுவதற்கும், முன்மாதிரியாகக் கொள்வதற்கும் முஹம்மத் (ஸல்) அவர்கள் மிகப் பொருத்தமுடைய பெருந்தகை என்பதைப் பின்வரும் கோணத்திலிருந்தும் நன்குணரமுடியும். அதுமட்டுமன்றி, இவ்விடயத்திற்கு நடப்பியல் ரீதியான வலுவான சான்றாகவும் கொள்ளத் தக்கது.

உலகில் தோன்றிய, தோன்றக் கூடிய சுருக்கமாகக் கூறுவதாயின் முற்காலங்களுக்குமுரிய எந்த அறிஞர்களாலும் மனித சமுதாயத்திற்கு குறைவில்லாத நிறைவான நேர்வழியைக் காண்பிக்கும் அறிவுடையோர் இருக்க முடியாது. எல்லா வகையான அறிஞர்களுக்கும் மேலான அறிஞன் அல்லாஹ்வே.

இறைவனிடமிருந்து வருகின்ற வழிகாட்டல்களே நிறைவுடையதாக இருக்க முடியும் என்பதை முஸ்லிம்கள் மட்டுமன்றி ஏனைய மதப் பெரியார்கள், ஏனைய கொள்கை உடையவர்கள், ''இஸ்லாமிய மார்க்கம் சிறந்தது, உயர்ந்தது, நன்னெறி கொண்டது, முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் உண்மையான தீர்க்கதரிசி, உதாரண புருஷர்'' என்றெல்லாம் கூறுவதைக் கொண்டு பொதுவாக ஏற்கப்பட்ட ஒரு கருத்தாகவும் இதனைக் கொள்ளலாம்.

உலக மாந்தர்களுக்கு, இஸ்லாமியர்களுக்கு ஓர் இறுக்கமான அதாவது, முறையான நெறிப்படுத்தப்பட்ட உறுதியான வாழ்க்கை முறைமையைப் பேணிக் கொள்வதற்கு முன்னுதாரணங்கள் நிறைந்த கண்ணியத் தூதர் முஹம்மது (ஸல்) என்பதில் வேறு அபிப்பிராயங்கள் இருக்க முடியாது.

# 8. மதீனா நகர் புனிதம் நிறைந்தது

இம்மையில் பேரின்பப் பயணங்களை மேற்கொள்ளும் உன்னத இடங்களில் மதீனாவுக்கென்று ஒரு தனித்துவம் உண்டு. இங்கு மகிமை மிகு பள்ளிவாயல்களும் புகழ்பெற்ற மலைகளும், ஜன்னத்துல் பகீஃ என்ற அடக்கஸ்தலம் போன்ற பல விஷேட அம்சங்களைக் கொண்ட புனித தலங்களும் உள்ளன.

இவை எல்லாவற்றுக்கும் சிகரமாக மஸ்ஜிதுந் நபவி, புனித ரௌழா ஷரீப்'' ஆகிய இரு தலங்கள் இங்கு அமையப் பெற்றிருக்கின்றன. இவற்றினால் மதீனா பயணம் முஸ்லிம்களிடம் அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. நபி (ஸல்) அவர்களினால் உவக்கப்பட்டு அதிகம் நேசிக்கப்பட்ட புனித பூமியாகவும் மதீனா திகழ்கின்றது.

மதீனாவுக்கு நிறைய மறு பெயர்கள் உண்டு. இவைகள் அல்லாஹ்வும், அவனது தூதர் மஹ்மூத் (ஸல்) அவர்களும் சூட்டியதாகும். இப்பெயர்களிலிருந்தே மதீனாவின் மகத்துவங்கள், முக்கியத்துவங்கள், சிறப்புக்கள் போன்றவற்றைத் தெளிவாக விளங்கலாம்.

''அர்ளுள்ளாஹ்'' - அல்லாஹ்வின் பூமி, ''பைத்துல் றசூல்'' - தூதரின் இல்லம், ''ஹறமு ரசூலில்லாஹ்'' - றஸுலில்லாஹ்வின் புனித பூமி, ''மதீனத்து ரஸுல்'' - ரஸுல் (ஸல்) அவர்களின் நகரம், ''மள்ஜஉ ரஸுலில்லாஹ்'' - இறைதூதரின் உறங்கலிடம், ''முபாறக்கா'' பறக்கத் செய்யப்பட்ட நகரம், ''கல்புல் ஈமான்'' விசுவாசத்தின் இதயம், ''தாறுஸ் ஸலாம்'' - சாந்தி இல்லம். இவைகள் மதீனாவின் நாமங்களுள் சிலவாகும்.

மதீனாப் பயணம் புனிதம் நிறைந்ததாகவும், புண்ணியங் கொண்டதாகவும் அமைந்துள்ளது. இதனால் சந்தர்ப்பம் கிடைத்தால் புறக்கணித்து விடாது அதனை அடைகின்ற அனைத்துச் சந்தர்ப்பங்களையும் தவறவிடாது பேணிக் கொள்வது அளவிட முடியாத நன்மைகளை அடைந்து கொள்வதற்கான வழியுமாகும்.

''எனது இந்த (மதீனா)ப் பள்ளியிலே தொழுமொரு தொழுகை (மக்காவின்) மஸ்ஜிதுல் ஹறாமைத் தவிர்த்து ஏனைய பள்ளிகளில் தொழும் ஆயிரம் தொழுகைகளை விட மேலானது. (அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) ஆதாரம்: புகாரீ, முஸ்லிம்)

''எனது பள்ளியிலே தவறாமல் நாற்பது நேரத் தொழுகையை ஒருவர் தொழுது வந்தால் அவருக்கு நரகத்திலிருந்தும், வேதனையிலிருந்தும் நயவஞ்சகத் தன்மையிலிருந்தும் விடுதலை கிடைக்கும்''. (அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரழி) ஆதாரம் : முஸ்னத் அஹ்மது)

ஒருவர் மஸ்ஜிதுல் அக்ஷாவுக்குப் போகப் புறப்பட்ட ஒரு பிரயாணத்தை மைமூனா (ரழி) பயன் குறைந்தது எனத் தடுத்து மஸ்ஜிதுல் நவவியில் தொழவைத்த நம்பகமான ஹதீஸ் உண்டு. எனில் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் பள்ளிவாசலில் தொழும் தொழுகை மேன்மையானதும், நன்மையானதும் என்பது புலனாகின்றன.

நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்காவை விட்டுப் புறப்பட்டு ஹிஜ்ரத் மேற்கொண்ட போது, ''என்னிறைவா! எனக்கு மிகப் பிடித்தமான இந்த இடத்தை (மக்காவை) விட்டு நீ என்னை வெளியேற்றச் செய்துள்ளாய். எனினும் உனக்கு மிகப் பிடித்தமான ஓர் இடத்தில் என்னைத் தங்கியிருக்கச் செய்வாயாக'' என்று பிரார்த்தித்தார்கள். (ஆதாரம் : முவத்தா)

''நாயனே! மக்காவில் ஏற்படுத்தியதைவிட இரட்டிப்பு பரக்கத்தை மதீனாவில் ஏற்படுத்துவாயாக!'' என்று நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தித்தார்கள். (அறிவிப்பவர்: அனஸ் (ரழி) ஆதாரம் புகாரீ)

''ஒருவன் காலையில் ஏழு அஜ்வா இனப் பேரீச்சம் பழங்களைச் சாப்பிட்டால் அந்நாளில் அவனுக்கு நஞ்சாலோ, சூனியத்தாலோ தீங்கு ஏற்படமாட்டாது''. (ஆதாரம் : முஸ்லிம்)

''உயர்தர அஜ்வா பழத்திலே நோய்க்கு மருந்துள்ளது'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர் : ஆயிஷா (ரழி) ஆதாரம் : முஸ்லிம்)

இப்படிப் பல அகமியங்களை மதீனா நகர் தன்னுள் சுமந்து கொண்டிருக்கின்றன. ஆதலால் அதன் மண் சிறப்புக்குரியதாக இருப்பதில் வியப்பில்லை. ஏனெனில் மண், உமிழ்நீர் பற்றியதொரு ஹதீஸ் பின்வருமாறு காணப்படுகின்றது.

''அல்லாஹ்வின் பெயரால் நமது பூமியின் மண்ணும், நம்மில் சிலரின் உமிழ் நீரும் நம் நாயனுடைய உத்தரவைக் கொண்டு நமது பிணிகளைத் தீர்த்து வைக்கின்றன''. (ஆதாரம் : புகாரீ)

மேற்படி ஹதீஸின் வெளிச்சத்தில் வைத்து பின்வரும் கூற்றுக்களைச் சிந்திக்கின்ற போது மதீனாவின் மண்ணிற்கென்றும் ஒரு தனித்துவமும், மகத்துவமும், புனிதமும் இருக்க முடியுமென்ற தீர்மானம் அறிவுபூர்வமான ஒன்றென ஒப்புக் கொள்வதில் தவறு இருக்க முடியாது.

''மதீனாவின் மண் குஷ்டத்தையும் சுகப்படுத்தும் இறைவன் மீது ஆணையாக மதீனாவின் மண் மூலம் எல்லாப் பிணிகளிலிருந்தும் சுகம் உண்டாகிறது''. ''எந்த இறைவன் வசம் எனது ஆன்மா ஆகியுள்ளதோ அவன் மீது சத்தியமாக மதீனாவின் புழுதி மண் சகல நோய்களையும் நிவாரணம் செய்துவிடும்'' (ஆதாரம் : தாரீகு மதீனத்தில் முனவ்வரா)

''அந்த நபி (ஸல்) அவர்களுடைய எலும்புச் சரீரத்தை (அழிவின்றி) தன்னுள் பொதிந்து வைத்துக் கொண்டிருக்கும் அந்த மதீனா மாநகரின் மண்ணுடைய வாசத்திற்கு வேறு எந்த நறுமணமும் ஈடாகாது. அத்தகைய புனித மண்ணை முத்தி, முகர்ந்து கொள்பவருடைய பாக்கியமே பாக்கியம்!'' (ஆதாரம் : புர்தாஷரீப் இமாம் பூஸரீ (ரஹ்)

மதீனா நகரம் முஹம்மத் (ஸல்) அவர்களின் புனித பூமியாகும். இங்கு மேற்கொள்ளப்படும் பயணத்தின் மூலம் அளப்பரிய நன்மைகளை தமதாக்கவும், அரிய பல இடங்களைக் காணவும், அல்லாஹ்வை வணங்குவதில் நன்மைகளைப் பெருக்கிக் கொள்ளவும், அவனை நெருங்கவும், அவனது தூதர் மஹ்மூத் (ஸல்) அவர்களின் கருணையையும், பற்றுதலையும் பெற்றுக்

கொள்ளவும் ஓர் ஊடகமாக அமைந்திருக்கின்றன என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

## 9. புனித ரௌழா ஷரீபைத் தரிசித்தல்

''யார் ரௌழா ஷரீபை தரிசிக்கின்றாரோ அவருக்கு எனது ஷபாஅத் உரித்தாகிவிட்டது'' என நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: தாரகுத்னி, ஷுபுல்ஈமான்)

''யார் என்னை என் மறைவுக்குப் பின் ஸியாரத் செய்கிறாரோ அவர் என்னை எனது வாழ்நாளில் தரிசித்தவர் போன்றவராவார். எவர் என்னை ஸியாரத்து செய்வதற்காக என் கப்ரை நோக்கி வந்து சேர்ந்தால் கியாம நாளில் நான் அவருக்காக மன்றாடுவேன்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: தப்ரானி, பைஹகீ, அஃபா)

''நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னை (முஆத்) யமன் தேசத்துக்கு அனுப்பி வைத்தபோது, எனது ரௌழாவையும் எனது மஸ்ஜிதையும் தரிசிப்பது உன்மீது கடமையாகும்'' எனக் கூறியதாக முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (ஆதாரம் : முஸ்னத் அஹ்மத், சுனன்பைஹகீ)

''உமர் பாறுக் (ரழி) அவர்கள் மஸ்ஜிதுக்குச் சென்ற போது அங்கே முஆத் பின் ஜபல் (ரழி) அவர்கள் ரஸூல் (ஸல்) அவர்களின் ரௌழா ஷரீபில் அழுதுகொண்டிருக்கக் கண்டதாகக் கூறுகின்றார்கள்.'' (ஆதாரம் : முஸ்தத்ரக்)

''மெய்யாகவே, மர்யமுடைய புதல்வரான ஈஸா (அலை) அவர்கள் நீதியை நிலைநாட்டும் நீதிபதியாகவும், தீர்ப்பளிக்கும் அரசராகவும் இறங்குவார். இன்னும் அவர் ஹஜ்ஜுடைய எண்ணத்தில் அல்லது உம்ராவுடைய எண்ணத்தில் அல்லது இரண்டுடைய எண்ணத்திலும் புனிதமிக்க மக்கமா நகரம் வருவார். இன்னும் எனது கப்ருக்கும் வருகை தந்து எனக்குச் ஸலாமும் உரைப்பார். திடனாக அவருக்கு நான் பதிலளிப்பேன்'' என்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் : முஸ்தத்ரக்)

''என்னுடைய உம்மத்தில் என்னை மிகவும் அதிகமாக நேசிக்கும் மானிடர் எனக்குப் பிற்காலத்தில் இருப்பார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் தன்னுடைய குடும்பத்தாரையும், சொத்தையும் தியாகம் செய்தாவது என்னைக் காண வருவார்கள்'' (ஆதாரம் : முஸ்லிம்)

இவ்விடத்தில் ஓர் அடிப்படைத் தெளிவு அவசியமாகின்றது. நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் புனித ரௌழா ஷரீபை தரிசிப்பதை ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு விடயமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற அதேவேளை ரௌழா தரிசனம் நபி (ஸல்) அவர்களின் ஷபாஅத்தை உரித்தாக்கும் என்ற கருத்தை சிலர் மறுத்துரைக்கின்றனர். அவ்வாறானவர்கள் பின்வரும் இரு கூற்றுக்களை ஊன்றி கவனிப்பதன் மூலம் தெளிவடைய வாய்ப்பிருக்கின்றது.

ஒன்று மேற்படிய இரு ஹதீஸ்களும் இலங்கையின் இஸ்லாம் பாடப் புத்தகத்தில் இடம்பெற்றிருக்கின்றன. இது தவறானது என இதுகாலவரை ஆட்சேபனையோ, மறுப்புக்களோ எழுதப்படாது பல்லாயிரக் கணக்கான

மாணவர்கள் நீண்டகாலமாக கற்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

மற்றொன்று, மதீனாவில் மரணிப்பவர்களுக்கு ஷபாஅத் இருக்கின்றது என்பதும் மரணிப்பதற்கு மதீனாவை விரும்பலாம் என்பதும் உமர் (ரழி) அவ்வாறு விரும்பினார்கள் என்பதையும், மதீனாவில் கஷ்டங்களைத் தாங்குபவர்களுக்கு நபி (ஸல்) அவர்களின் ஷபாஅத் உண்டென்பதையும் நம்பகமான ஹதீஸ்கள் எடுத்துக்காட்டுகின்றமையும் இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

''ஸியாரத்'' எனும் - தரிசித்தலை இஸ்லாம் எவ்வாறு பேணும்படி கட்டளையிடுகின்றது என்பதை முதலில் நோக்குவதன் மூலம் புனித ரௌழா ஷரீபை தரிசிப்பதன் அனுமதியையும், அதன் மகத்துவத்தையும் புரிந்து கொள்வதை இலகுபடுத்தி வைக்கும்.

ஷரீஅத்தின் பரிபாஷையில் பிரயாணத்தை ஸியாரத் எனும் சொல்லினால் குறிப்பிடுவதை அனுமதிக்கின்றது. அதேநேரம் ஸியாரத் என்பது பயணத்தோடும் சிலவேளை பயணமின்றியும் நிகழக்கூடியதாகும். எவ்வாறிருந்தாலும், இவ்விரு வழிமுறைகளும் இஸ்லாத்திற்குட்பட்டதாகவே சட்டநிலை கொள்கின்றது. மாறாக ஒன்றுக்கொன்று முரண்பட்ட வழிமுறைகள் எனப் பகரவில்லை.

''கப்ருகளை ஸியாரத் (தரிசித்தல்) செய்வதை நான் தடுத்திருந்தேன். இப்போது அதை தரிசியுங்கள். ஏனெனில், அச்செயல் மறுமையை உங்களுக்கு ஞாபகமூட்டும்'' என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். (ஆதாரம் : முஸ்லிம், முஸ்னத் அஹ்மத்)

''ஒரு காரியம் தடுக்கப்பட்டு பின்னர் அது அனுமதிக்கப்பட்டால் அது முபாஹ் - அனுமதிக்கப்பட்டவை எனக் கொள்ளப்படும். அதேநேரம் அனுமதிக்கப்பட்டதற்கான காரணம் கூறப்பட்டால் அச்செயல் ''சுன்னத்'' தான காரியமாகக் கொள்ளப்படல் இஸ்லாமிய சட்ட அடிப்படை விதியாகும்''. என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதன்படி, கப்ருகளைத் தரிசித்தல் எனும் அமல் ஒரு சுன்னத்தான காரியமாகும். இவ்வணக்கத்தைப் புரிவதில் ஆண், பெண் என்ற வேறுபாடின்றி இரு பாலாருக்குமான பொதுவான அனுமதியேயாகும். விரும்பும் எவரும் இப்புண்ணிய கிரியையில் ஈடுபட முடியும். இதனைப் பின்வரும் நபி மொழி எடுத்துக்காட்டுகின்றது.

''யார் கப்ருகளைத் தரிசிக்க விரும்புவார்களோ அவர்கள் அவ்வாறு செய்யட்டும்..'' என ஏந்தல் நபி (ஸல்) அவர்கள் எடுத்துரைத்தார்கள். (ஆதாரம் : நஸஈ)

"நபி (ஸல்) அவர்கள் உயிருடன் வாழ்ந்திருக்கையிலும், நபிகள் மரணமடைந்தாலும் அவர்களைப் பொறுத்த வரையில் இரு வாழ்க்கையும் சமம்தானே. கப்ரிலும் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் உயிருடன்தானிருப்பார்கள்." ஆதாரம்: வஸீலா தேடுவதின் தெளிவான சட்டங்கள்)

ஆகவே, நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது கப்ரில் உயிருடன் வாழ்கின்றனர் என்பதை இப்னுதைமிய்யா ஒப்புக் கொள்வதை அவரது மேற்படிய கூற்று நமக்கு தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. அதுமட்டுமன்றி, இம்மை, கப்ரு

ஆகிய இரு வாழ்விலும் அவர்களது வாழ்வு சமமானதென்றும் சான்றுப் படுத்துகின்றார். மஹ்மூது நபி (ஸல்) அவர்களின் உடல் அழியாமலும் உயிருடனும் ரௌழா ஷரீபில் வாழ்கின்றார்கள் என்பதில் எத்தகைய சந்தேகமும் தேவையில்லை.

''நிச்சயமாக அவர்கள் தமக்குத் தாமே அநீதமிழைத்துக்கொண்டு உம்மிடம் வந்து பின்னர் அல்லாஹ்விடம் அவர்கள் பாவமன்னிப்புக் கோரி, அவர்களுக்காக (அல்லாஹ்வுடைய) தூத(ராகிய-நீ)ரும் பாவமன்னிப்புக் கோரியிருந்தால், தௌபாவை ஏற்(று-மன்னிப்)பவனாக, மிக்க கிருபையுடையோனாக அல்லாஹ்வை அவர்கள் காண்பார்கள்''. (அல்குர்ஆன் 4:64)

இத்திருக்குர்ஆன் வசனத்தில் ''(1) அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரல், (2) நபியுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் செல்லல், (3) அவர்களுக்காக நபி (ஸல்) அவர்கள் மன்னிப்புக் கோரல் ஆகிய மூன்று விடயங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன, வலியுறுத்தப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி, மேற்படி வசனத்தில் ''ஜாஊக்க'' என்ற சொல் பாவிக்கப் பட்டிருப்பதனால் அது நிபந்தனையுடன் கூடியதாகும். அரபு இலக்கணப் படி நிபந்தனைகளுக்குப் பின்னர் வரும் வினைகள்தான் பொதுக் கருத்துக் களாகக் கொள்ளப்படும். அந்தவகையில் அல்லாஹ்வின் மன்னிப்பையும், அருளையும் அடைவதற்கு மேற்சுட்டிக்காட்டிய மூன்று விடயங்களும் வழியாகும் என்பதை எடுத்துக்காட்டுவதாகவே கொள்ள வேண்டும்.

ஆகவே, நபி (ஸல்) அவர்கள் நானிலத்தில் வாழும்போது, வாழாதபோது என்கின்ற வேறுபாடுகளோ, அல்லது இவ்வுலகைவிட்டு மறையும் முன்னர், பின்னர் என்கின்ற வேறுபாடுகளுக்கு அப்பால், ஷஎன்றும்' என்கின்ற கருத்தையே இவ்வசனம் தருகின்றது என்பது வெளிப்படையானது.

மேற்படி வசனத்தில் பிரயோகிக்கப்பட்டிருக்கும் ''இத்'' என்ற அரபுப் பதம் இறந்த காலம், எதிர்காலம் எனும் இரு காலங்களையும் சுட்டிக்காட்டக் கூடியது என்பதை இஸ்லாமிய அறிஞர்கள் வரையறுத்து, தெளிவாக்குகின்றனர்.

''இத் எனும் இடைச்சொல் இறந்த காலத்தை சுட்டிக்காட்டுவது போல் எதிர்காலத்தையும் குறித்துக்காட்டும். இத் எனும் இடைச் சொல்லிற்கு பல கருத்துக்களும் உண்டு'' என இமாம் இப்னு ஹிஷாம் அபிப்பிராயப் படுகின்றார். (ஆதாரம் : முக்னியுல் லபீப் - பாகம் 1)

இமாம் அல் - அஸ்ஹரி (ரஹ்) அவர்கள் அரபியரின் வாழ்க்கையை மேற்கோள்காட்டி ''எதிர்காலத்தைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு இத் எனும் பதத்தையும், கடந்த காலத்தைக் குறிப்பதற்கும் இச்சொல்லை உபயோகிப்பவர்களாக இருந்தார்கள்'' என எடுத்துரைக்கின்றார்கள். (ஆதாரம்: தஹ்தீபுல்லுஙா)

இத் எனும் பதம் எதிர்காலத்தைக் குறிப்பதாகக் குர்ஆன் பல இடங்களில் பிரயோகித்துள்ளது. அதற்கான சான்றுகள் பலவிருந்த போதிலும் ஒரு சிலவற்றை இங்கு எடுத்து நோக்குவோம்.

''(நரக) நெருப்பின் மீது அவர்கள் நிறுத்தப்படும் பொழுது (நபியே) நீங்கள்

அவர்களைப் பார்ப்பீர்களாயின் நாங்கள் (உலகத்திற்குத்) திரும்ப அனுப்பப்பட வேண்டுமே'' (அல்குர்ஆன் 6:27)

''(காபிர்கள் மறுமையில்) பயத்தால் நடுங்குவதை நீங்கள் காண்பீர்களாயின், அவர்களுக்குத் தப்பியோட வழியுமிராது, இன்னும் சமீபமான இடத்திலிருந்தே அவர்கள் பிடிபடுவார்கள்''. (குர்ஆன் 34:51)

''... இந்த அநியாயக்காரர்கள் மரண வேதனையில் இருக்கும் போது நீங்கள் அவர்களைப் பார்ப்பீர்களாயின்...'' (குர்ஆன் 6:93)

ஷநபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் புனித ரௌழா ஷரீபைச் சென்று தரிசிப்பதை முஸ்தஹப்பு - விரும்பத்தக்க செயலாகும்'' என இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் தெரிவிக்கின்றார்கள். (ஆதாரம் : அல்-முஹத்தப்)

ஆண், பெண் இருபாலரும் நபி (ஸல்) அவர்களுடைய புனித ரௌழா ஷரீபை ஸியாரத் செய்வது வலுப்பமான புண்ணிய காரியமாகும்''. (ஆதாரம்: நிஹாயத்துல் முஹ்தாஜ் ஷரஹுல் மின்ஹாஜ், பாகம் 2)

''ஸியாரத் செய்வது ஆகுமாக்கப்பட்டிருப்பினும் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களை (த் - ஸியார)த் தரிசிக்கச் செல்வது கட்டாயக் கடமையாகும்'' (ஆதாரம்: அஷ்ஷிபா)

புனித ரௌழா ஷரீபை ஸியாரத் செய்வது என்பது ஹஜ்ஜுக் கிரியைகளில் ஓர் அங்கமில்லையாயினும். அவ் யாத்திரையோடு தொடர்புடைய ஓர் அம்சமாகும். உண்மையில் ரௌழா ஷரீபைத் தரிசித்தல், மதீனாவுக்குச் செல்லல் என்பன எல்லாக் காலங்களிலும் புரியத்தக்க ஓர் அமலாகும். அத்தகைய ஓர் அமலை ஹஜ்ஜுப் பயணத்தோடு இணைத்துக் கூறுவதற்குப் பின்வரும் இரு காரணங்களும் பிரதானமாகும்.

ஷவ்வால், துல்கஃதா ஆகிய இரு மாதங்களும் துல்ஹஜ்ஜு மாதத்தின் முதல் பத்து நாட்களும் ஹஜ்ஜுக்குரிய காலமாக இருக்கின்றன. இக் காலங்களுக்குள் மதீனா சென்றுவர போதிய அவகாசங்கள் இருப்பதினால், நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் அளப்பரிய ஸியாரத்தை பேணுவதற்கு ஊக்குவிப்பது.

''ஹஜ்ஜை நிறைவேற்றிய பின்னர் (அல்லது முன்னர்) மதீனா செல்வதால் வாழ்வில் ஒரு முறையேனும் நபி (ஸல்) அவர்களின் ரௌழா ஷரீபை தரிசிக்கும் அரும் பாக்கியத்தைப் பெறுகின்றனர்'' என இமாம் மவறுதி (ரஹ்) சுட்டிக்காட்டுகின்றார். (ஆதாரம் : அல்-அஹ்காமுஸ்தல்தானியா)

மதீனாப் பயணம் காலங்கள் குறிப்பிட்டு நடைமுறைப்படுத்தும் ஒன்றல்ல. அது எக்காலங்களும் பேணக்கூடிய ஒன்றாகும். ஆயின் முடிந்த போதெல்லாம் கஞ்சமின்றி வாஞ்சையோடு இவ்யாத்திரையை மேற்கொண்டு நன்மைகளைத் தேடிக் கொள்வது நன்றானதொன்றாகும். புனித ரௌழா ஷரீபை ஸியாரத் செய்வதும், அவ்விடம் செல்வதும் இவ்வுலகம் அழியும் வரை நிகழக்கூடிய ஒன்றென்பது இதிலிருந்து நன்கு தெளிவாகின்றது. எனினும் இஸ்லாமிய அடிப்படைச் சட்ட மூலாதாரங்களின் நிழலில் இது அனுமதிக்கப்பட்ட காரியமும், நன்மைகள் நிறைந்த நல்லமல் என்பதிலும் எவ்விதமான ஐயங்களுமில்லை.

# 10. ஸலவாத் ஓர் இபாதத்

‘‘**நிச்சயமாக** அல்லாஹ்வும் அவனுடைய மலக்குகளும் நபியின் மீது ஸலவாத்துக் கூறுகின்றார்கள். விசுவாசங் கொண்டவர்களே நீங்களும் அவர்கள் மீது ஸலவாத்துக் கூறி சாந்தி அளிக்கும் ஸலாமையும் கூறுங்கள். (குர்ஆன் 33:56)

வையகம் சிறக்க வந்துதித்த மஹ்மூத் (ஸல்) அவர்கள் மீது விசுவாசிகள் ஸலவாத்தும் ஸலாம் எனும் இருவேறு நற்கிரியைகளை மேற்கொள்ளுமாறு மேற்படி மறைவசனத்தின் மூலம் அல்லாஹ் கட்டளையிடுகின்றான். அவற்றில் ஸலவாத்துச் சொல்வது பற்றி நோக்குவதே இப்பகுதியின் இலக்காகும்.

‘‘ஸல்லூ’’ என்ற ஏவல் வினைச்சொல்லிலிருந்து பிறந்த பெயர்ச் சொல்தான் ‘‘ஸலவாத்து’’ என்பது. இதற்கு புகழ்தல், மாண்புறச் செய்தல், பிரார்த்தனை, கிருபை என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். இதிலிருந்தே இதன் மகத்துவங்களும் முக்கியத்துவங்களும் நமக்குத் துலங்கப் போதுமானது. இஸ்லாம் விசுவாசிகள் மீது கட்டாயக் கடமைகள் என ஐந்து விடயங்களை முன்வைத்துள்ளது. அவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கென காலங்களையும், நேரங்களையும், வேலைகளையும் நிர்ணயித்துள்ளது.

இவ்வாறின்றி என்றும் எப்போதும் பேணக்கூடிய ஓர் அமலாக ஸலவாத்து மொழிவதை இஸ்லாம் சுட்டுகின்றது. ஆயின், இஸ்லாத்தின் கட்டாயக் கடமைகளை அடுத்து மேற்கொள்ளும் அமல்களில் ஸலவாத்துக் கூறுவது முதன்மை பெற்றிருக்கின்றது எனக் கொள்ள முடியும். இதனால்தான் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வது வாஜிபு (கட்டாயக் கடமை) என்பதில் எல்லாச் சட்ட அறிஞர்களும் ஒருமித்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். அதுமட்டுமன்றி ஸலவாத்துக் கூறுமாறு மேற்படி வசனத்தில் ஏவல் வினையில் வந்திருப்பது கட்டாயக் கடமை என்பதையே குறித்துக் காட்டுகின்றது.

ஸலவாத்துக் கூறும் வணக்கத்தை அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் புரிவதாகவும் மேற்படி திருமறை வசனம் சுட்டிக்காட்டுகின்றது. ஸலவாத்துக் கூறும் அமலைத் தவிர வேறெந்த அமல்களையும் அல்லாஹ் மேற்கொண்டதாக எங்கும் காணக்கிடைக்கவில்லை. இதனாலும் ஸலவாத்துக் கூறும் நற்செயல் ஏனையவற்றிலிருந்து வேறுபடுவதோடு, அதற்கென சில சிறப்புக்களையும் தனித்துவ அம்சங்களையும் கொண்டிலங்கத்தக்கது என்பது வெளிப்படையானது.

ஸலவாத்துக் கூறுவதென்றால் என்ன? என்பதை இவ்விடத்தில் விளங்கிக் கொள்வது இன்றியமையாததாகும். ஏனெனில் ஓர் அமலை நன்கறிந்து முறையோடு ஈடுபடுவதானது, அதன் மீதான தெளிவையும், பற்றுதலையும் அதிகரிக்கச் செய்வதோடு நிறைவான திருப்தியோடும், ஆத்ம அமைதியோடும் மேற்கொள்ளத் துணைபுரியும். அல்லாஹ் தனது நபியின் மீது ஸலவாத்துக் கூறுகின்றான் எனில் ‘‘அவர்கள் மீது அளவற்ற கிருபை காட்டுகின்றான் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களை புகழ்ந்து போற்றுகின்றான். அவர்களைப் புனிதமாக்குகின்றான். அவர்களுடைய கீர்த்தியையும், பெயரையும் உயர்த்துகின்றான். அவர்கள் மீது அருள் மழையை, அருட்சுடரைப் பொழிகின்றான்’’ என்பதே அதன் அர்த்தமாகும்.

வானவர்கள் ஸலவாத்துச் சொல்லுகின்றார்கள் எனில், ''நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அளவற்ற அன்புவைக்கின்றனர். அவர்களின் மாண்பை, மகத்துவத்தை மேலும் உயர்த்திக் கொண்டிருக்குமாறு இறைஞ்சுவதோடு தங்களின் பொறுப்பில் அல்லாஹ் தந்துள்ள அருட்சுடர்களை அவர்கள் மீது பொழிந்து கொண்டுள்ளார்கள்'' என்பதே அதன் பொருளாகும்.

''விசுவாசங் கொண்டவர்களே, நீங்களும் அந்த நபியின் மீது ஸலவாத்துச் சொல்லுங்கள்'' என்றால் ''நீங்கள் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு வழிப்படுங்கள், அவரைப் போற்றிப் புகழுங்கள், அவருக்கு அருள் புரியுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள், அவரைச் சதாவும் கண்ணியப் படுத்துங்கள்'' என்றே பொருள் படும். ஆனால், நாம் அவ்வாறின்றி ஸலவாத்துச் சொல்லச் சொன்னவனையே சொல்லுமாறு கூறுகின்றோம். அதாவது, ''அல்லாஹும்ம ஸல்லி அலா செய்யிதினா முஹம்மதின்.'' இறைவனே எங்களின் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் மீது நீ ஸலவாத்துச் சொல்வாயாக என்று அல்லாஹ்வையே வேண்டுகின்றோம். இதன் பொருள் என்ன? பலர் பலவிதமான காரணங்களை முன்வைத்துள்ளார்கள். அவற்றினை கூட்டுமொத்தமாக நோக்கின் பின்வரும் கருத்துக்கள் புலப்படும். அதுவே நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்தின் ஒரு சிறுபகுதியை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

''யா அல்லாஹ்! உனது தூதர் (ஸல்) அவர்களின் அருமை பெருமையினைச் சிற்றறிவு கொண்ட எங்களால் அறிய இயலாது. ஆதலால் அவர்களுக்குரிய தரத்திற்கேற்றவாறு ஸலவாத்துக் கூற நாங்கள் இயலாது உள்ளோம். எனவே நீயே அவர்களின் தகுதிக்கு ஏற்ற அருள்மாரியைப் பொழிந்து அந்த அருட்சுடரில் நாங்களும் பெறக்கூடிய நிலையினை எங்களுக்குத் தந்தருள்'' என்கின்ற சரணாகதியினையே இதன் மூலம் வெளிப்படுத்தி நிற்பதனைத் தெளிவாகக் காணலாம்.

ஸலவாத்து மொழிதல் அளப்பரிய நற்பேறுகளை நமதாக்கி வைக்கின்றது. அல்லாஹ்வையும் அவனது தூதரையும் ஒரே நேரத்தில் நினைவு கூருகின்றோம். நமது கட்டாயக் கடமையான தொழுகையில் ஸலவாத்து மொழியும் வகையில் ஆக்கப்பட்டிருக்கிறது. ஜும்ஆ, ஜனாஸா தொழுகை, துஆ போன்றவற்றில் எல்லாம் ஸலவாத்துச் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

அல்லாஹ்வின் நினைவோடும், அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது பற்றையும், நெருக்கத்தையும், இறுக்கமாக்கக் கூடிய ஆற்றலையும், ஸலவாத்துத் தன்னுள் கொண்டிருக்கின்றது. இதனால் தான் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு சமயம் இப்படிச் செப்பினார்கள். ''மறுமையில் என்னைக் கொண்டு மிகவும் நெருங்கியவர் (யாரெனில்) என்மீது அதிகம் ஸலவாத்துச் சொல்பவர்களே!'' (ஆதாரம் : திர்மிதி)

''என்மீது காலையிலும், மாலையிலும் பத்துப் பத்து ஸலவாத்துக்கள் சொல்லி வருபவருக்கு இறுதி தீர்ப்பு நாளில் எனது ஷபாஅத்துக் கிடைக்கும்'' என நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பர்: அபூதர்தா (ரழி) ஆதாரம் : தப்ரானி)

''எவன் என் மீது ஸலவாத்துச் சொல்லவில்லையோ அவனுக்கு சன்மார்க்கமில்லை''.
(ஆதாரம் : கஸ்புல் கும்மா)

''ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கை ''உடல் என்றால் தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ்ஜு போன்ற கடமைகள் அந்த ஈமானின் உறுப்புக்களாக'' இருக்கின்றன. ஷஸலவாத்' என்பது அந்த ஈமானின் ஷஉயிராக' இருந்து கொண்டுள்ளது. ஆகவே, ஸலவாத் இல்லாவிட்டால் ஈமான் வெறும் மரணித்த ஜடலமாகப்போய்விடும்.'' (ஆதாரம் : புரவலர் போர்த்திய பொன்னாடை)

இவ்வாறு மாண்புகள் நிறைந்த ஸலவாத்துக் கூறும்படி குர்ஆன் - அல்லாஹ்வே குறிப்பிட்டிருப்பதால் ''ஒவ்வொருவரும் ஆயுளில் ஒரு முறை மொழிவது பர்ழு - கடமையாகும்'' எனச் சட்ட அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்கள் ''வாழ்க்கையில் ஒரு தடவை ஏகத்துவத்தை உறுதிகொண்டு உரைக்கும் கலிமாவைப் போல் இந்த ஸலவாத்தையும் ஒரு முறை கூறுவது கடமை'' என்கின்றார்கள்.

''எவரொருவர் என்மீது ஒரு ஸலவாத்துச் சொல்லுகின்றாரோ, அவர் மீது அல்லாஹ் பத்து ஸலவாத்துக் கூறுகின்றான்''. (அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரழி) ஆதாரம் : புகாரீ, முஸ்லிம்)

''எவரொருவர் என்மீது ஒரு ஸலவாத்துச் சொல்லுகின்றாரோ, அவர்மீது இறைவன் பத்து ஸலவாத்துக் கூறுவதோடு, பத்து பாவங்களை மன்னிக்கிறான். அவருடைய பதவிகளை பத்து மடங்காக உயர்த்து கின்றான்''. (அறிவிப்பவர்: அனஸ் (ரழி), ஆதாரம் : திர்மிதி, நஸாஈ)

நாட்களில் மிகச் சிறந்தது. ஜும்ஆவுடைய நாளாகும். அன்று அதிகமாக என்மீது ஸலவாத்துச் சொல்லுங்கள். உங்களின் ஸலவாத் எனக்கு எடுத்துக் காட்டப்படுகின்றது. (ஆதாரம் : அபூதாவூத்)

''எனது பெயர் மொழியப்பட்டு, அதைக் கேட்கும் மனிதரில் யார் என் மீது ஸலவாத்துச் சொல்லவில்லையோ அவர்தான் கஞ்சன்''. (ஆதாரம்: இன்ஸானுல் காமில்)

நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயரைக் கேட்டாலும், சொன்னாலும் அவர்கள் மீது ஸலவாத்துக் கூறிக்கொள்ளும் நடைமுறையானது ஈருலகிலும் இறையன்பையும், அவனது அருளையும் நமதாக்கிக் கொள்ள ஒரு வழியாகின்றது. ஆகவே, முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது நாளெல்லாம் ஸலவாத்து மொழிந்து அளவிலா அருளைச் சொந்தமாக்கிக் கொள்வோம்.

''மூலம் முஹம்மது முப்பாழ் முஹம்மது மோனமுள்ள
பாலம் முஹம்மது பக்தியுள்ளோர்களும் பாய்ந்தெடுக்கும்
வேலும் முஹம்மது வேதாந்த மூல விளக்குடைய
கோலும் முஹம்மது குன்றாக் குணங்குடி கொண்டவர்க்கே!''
- குணங்குடி மஸ்தான் சாஹிப்.

ஸல்லல்லாஹு அலாமுஹம்மத்
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்.

# அல்லாஹ்வின் தரிசனம்

முஸ்லிம்களுக்கு அல்லாஹ்வின் தரிசனம் கிடைக்குமா? என்பதில் மூன்று விதமான கருத்துக்கள் காணப்படுகின்றன. அவை பின்வருவனவாகும்.

1) இம்மை, மறுமை ஆகிய ஈருலகிலும் அ(வ்விறை)வனை அறவே காண முடியாது. இது முஃதஸிலாக்கள், காரிஜியாக்களின் கொள்கையாகும். 2) மறுமையில் மட்டும் அல்லாஹ்வைக் காணலாம். 3) இம்மை, மறுமை ஆகிய இருவுலகிலும் அல்லாஹ்வைப் பார்க்க முடியும். அதாவது இம்மையில் கஷ்பினாலும் மறுமையில் புறக்கண்களாலும் பார்க்க முடியும். இது அஹ்லு ஸுன்னத்வல் ஜமாஅத்தினரின் கொள்கையாகும்.

''இம்மை, மறுமை ஆகிய ஈருலகிலும் அல்லாஹ்வைக் காண்பது அறவே சாத்தியமில்லை'' என்போர் தங்களின் கூற்றுக்கு பின்வரும் சான்றாதாரங்களை முன்வைக்கின்றனர்.

''பார்வைகள் அ(வ்விறை)வனை அடைய முடியா; ஆனால் அ(வ்விறை)வனோ (எல்லாப்) பார்வைகளையும் அடைவான்'' (அல்-குர்ஆன் 6:104)

''எந்த மனிதரிடமும் அல்லாஹ் அவரிடத்தில் (நேரில்) பேசுவதில்லை. வஹீயின் மூலமே தவிர; அல்லது திரைக்குப் பின்னாலிருந்தே தவிர; அல்லது எவரேனும் ஒரு தூதரை (மலக்கை) அவன் அனுப்பியே தவிர....'' (அல்குர்ஆன் 42:51)

''..... (நபி மூஸா (அலை) அவர்கள் தன் இறைவனை நோக்கி) ஷஎன் இறைவனே! நான் உன்னை (என் கண்ணால்) பார்க்க (விரும்புகிறேன்) நீ உன்னை எனக்கு காண்பி'' என்று கூறினார். (அதற்கு இறைவன் நேர்முகமாக) ஷஎன்னைக் காண உம்மால் ஒருக்காலும் முடியாது' (என்றான்)....'' (அல்குர்ஆன் 7:143)

''அபூதர் (ரழி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. நான் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஷதாங்கள் தங்களுடைய ரப்பை பார்த்தீர்களா?'' என வினவினேன். அதற்கவர்கள் அ(வ்விறை)வனோ ஒளி, நான் எப்படி அ(வ்விறை)வனைக் காண முடியும்? என்றார்கள்'' (ஆதாரம் : முஸ்லிம்)

''ஆயிஷா (ரழி), இப்னு மஸ்ஊத் (ரழி) மற்றும் ஸஹாபாக்களின் ஒரு பகுதியினர்களும், முஹத்திஸீன்களில் ஒரு பகுதியினர்களும்'' ''நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிஃராஜ் சென்ற சமயத்திலும் (புறக்கண்களால்) அல்லாஹ்வை நேரில் காணவில்லை என்ற கருத்தையே கொண்டுள்ளனர்.

ஆகவே, நபியுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கூட சாத்தியமற்றுப் போனவொன்று வேறு யாருக்கும் சாத்தியமாகிவிடவும் முடியாதென்று தங்கள் கருத்தை வலியுறுத்துகின்றனர். இவர்களின் மேற்படிக் கருத்துக்களை பின்வரும் கூற்றுக்களின் அடிப்படையில் வைத்து நோக்கும் போது பொருளற்ற கருத்தாக அமைவதை தெளிவாக அவதானிக்கலாம்.

''பார்வைகள் அ(வ்விறை)வனை அடைய முடியா!'' என்ற மறை வசனத்தின் மூலம் ''அல்லாஹ்வின் தாத்துடை உள்ளமையை யாராலும் முழுமையாகப் பார்க்கவியலாது'' என்பதைச் சுட்டுமே தவிர, ''அல்லாஹ்வின் பேரழகை, இலட்சணங்களைப் பார்க்க முடியாது'' எனச் சுட்டுவதாகக் கொள்ள முடியாது.

''எந்த மனிதரிடமும் அல்லாஹ் (நேரில்) பேசுவதில்லை...'' எனும் கருத்தைத் தெரிவிக்கும் குர்ஆன் 42:51 ஆம் வசனத்தில் ''அல்லாஹ் பேசுவதற்குத்தான் திரை வேண்டும்'' என்று கூறுகிறது தவிர பார்ப்பதற்கல்ல. ஆயின், ''திரையின்றிக் கண்டதற்குப் பின்னர் திரையோடு வசனித்திருக்கலாம். தரிசிக்கும் போதே பேசவேண்டுமென்பது நியதி இல்லையே?'' என இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கருத்துத் தெரிவித்திருப்பது இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்.

நபி மூஸா (அலை) அவர்களுக்கு அல்லாஹ் தன்னைப் பார்க்கவியலாது என்று கூறியதனால் மற்ற யாருக்கும் பார்க்க இயலாது என்ற கருத்தைத் தராது. அது அவர்களுக்கு மட்டுமானதாகவே கொள்ள வேண்டும். ஏனெனில் குறிப்பாக ''என்னைக் காண உம்மால் ஒருக்காலும் முடியாது'' என விபரிப்பதிலிருந்து இதனை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

அதேநேரம் இதில் இன்னொரு பக்கத்தையும் நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. அதாவது ''நபி மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் தூதராகவும், தவறுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்களாகவும் இருந்த நிலையில் சாத்தியமற்ற ஒன்றினை அவர்கள் கேட்டிருக்கமாட்டார்கள்'' என அஷ்அரிய்யா கோட்பாட்டு அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே, நபி மூஸா (அலை) அவர்கள் ''அல்லாஹ்வைக் காண வேண்டும்'' என விண்ணப்பித்ததே அ(வ்விறை) வனைப் பார்ப்பது சாத்தியமானது என்பதற்குத் தக்க சான்றாகக் கொள்ள முடியும்.

மேற்படி ஹதீஸில் ''அ(வ்விறை)வனோ ஒளி நான் எப்படி அ(வ்விறை) வனைக் காண முடியும்?'' என்ற வினாத்தொனியில் அமைந்த பதிலைப் பார்க்கின்றோம். இது நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் ''தன்னடக்கமான பதில் வகையைச் சார்ந்தது'' என்று கொள்ளல் வேண்டும். ஏனெனில் இத்தொடரில் கூறப்பட்ட ஹதீஸ் மேற்படியது மட்டுமல்ல. மாறாக வேறு பல ஹதீஸ்களும் உண்டு. அவை இந்த ஹதீஸ் குறிப்பிடும் கருத்துக்கு மிகச் சரியான எதிர் - மாறுபட்ட கருத்தைக் கொண்டிருக்கின்றது. இதற்குப் பின்வரும் ஹதீஸ் உதாரணமாகும்.

''நான் அபூதர் (ரழி) அவர்களிடம் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை நான் கண்டால் அவர்களிடம் கேட்பேன் எனக் கூறினேன். அவர்கள் எதைப் பற்றிக் கேட்பீர் என்று வினாவினார்கள். நான் ரஸூல் (ஸல்) அவர்களிடம் நீங்கள் உங்கள் றப்பைப் பார்த்தீர்களா எனக் கேட்பேன் என்றார். அபூதர் (ரழி) அவர்கள் நான் அதைப்பற்றி (முன்பே) கேட்டிருக்கிறேன். அதற்கவர்கள் ஷநான் ஒளியைக் கண்டேன்' என்பதாகக் கூறினார்கள் என்றார்கள்''. (அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு ஷகீக் (ரழி) ஆதாரம் : முஸ்லிம்)

''இப்னு அப்பாஸ் (ரழி), இப்னு உமர் (ரழி), அபூதர் (ரழி), கஅப் (ரழி), ஹஸன் பஸரி (ரஹ்), இமாம் அஹமத் இப்னு ஹன்பல் (ரஹ்) போன்றோர் நபி (ஸல்) அவர்கள் மிஹ்ராஜின் போது அல்லாஹ்வை நேரடியாகப் பார்த்தார்கள் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்'' என இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஆதாரம் : ஷரஹ், முஸ்லிம்)

மேலும் ஆயிஷா (ரழி), இப்னு மஸ்ஊத் (ரழி) போன்றவர்கள் ''புறக்கண் களால் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வைக் கண்டார்கள்'' எனும் கூற்றை மறுத்துரைத்திருப்பது குர்ஆன், ஹதீஸின் அடிப்படையில் இருந்தல்ல. மாறாக அவர்களின் இஜ்திஹாத் எனும் ஆய்வுரீதியான கருத்தாகும்.

இஜ்திஹாத்தில் வெற்றி பெற்றாலும், தோல்வியுற்றாலும் அல்லாஹ்விடம் அதற்குக் கூலியுண்டு என்பது எல்லாத் தரப்பு இஸ்லாமிய அறிஞர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஓர் அம்சமாகவிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

''நான் (கனவில்) எனது இறைவனை அழகான தோற்றத்தில் கண்டேன்''. (அறிவிப்பவர் : முஆத் இப்னு ஜபல் (ரழி), ஆதாரம் : அஹ்மத், திர்மிதி)

## 1. மறுமையில் அல்லாஹ்வைக் காணலாம்

**பொதுவாக** அல்லாஹ்வைக் காண்பது சாத்தியமா? என்பது தொடர்பில் இம்மை தவிர்ந்தவற்றில் அவ்விறைவனைக் காண முடியும் என்ற முடிவுக்கு நாம் வரலாம். அதேநேரம் கஷ்பினால் காண்பது என்ற வகையினையும் இணைத்துப் பார்ப்போமானால் இம்மை, மறுமை எனும் ஈருலகிலும் அருள்மிகு அல்லாஹ்வை முஸ்லிம்கள் காண்பது சாத்தியமாகும் என்ற முடிவுக்கு நம்மை இட்டுச் செல்லும்.

''அந்நாளில் சில(ருடைய) முகங்கள் செழுமையாக இருக்கும். (அவை) நம்முடைய ரப்பின்பால் நோக்கியவையாக இருக்கும்'' (அல்குர்ஆன் 75:22-23)

இவ்வசனத்தில் அல்லாஹ்வின் தரிசனம் மறுமையில் சுவர்க்க வாசிகளுக்கு வழங்கப்படுகின்ற ஓர் அருள் பாக்கியம் என எடுத்துரைக்கின்றது. இதனைப் பின்வரும் மறை வசனம் மேலும் உறுதி செய்கின்றது.

''நன்மைகள் புரிந்தோருக்கு சுவர்க்கமும், இன்னும் அதிகமும் இருக்கிறது''. (அல்குர்ஆன்) இவ்வசனத்தில் இடம்பெறும் ஸியதா அதிகம் எனும் சொல்லுக்கு அல்லாஹ்வின் தரிசனம் என நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் விளக்கியுள்ளார்கள்.

இத்தரிசனம் எப்படிப்பட்டது என்பதை இமாம் முல்லா அலிகாரீ (ரஹ்) அவர்கள் பின்வருமாறு தெளிவுபடுத்தி யுள்ளார்கள்.

''இந்தப் பார்வை (காண்பதென்பது) சிருஷ்டிகளைக் காண்பதைப் போல் நேருக்கு நேராகவோ, ஓர் இடத்திலோ, திசையிலோ, உருவத்திலோ இராது. சுருங்கக் கூறுமிடத்து இந்தத் தரிசனம் (லிகா) அற்புதம் முஃஜிஸா போன்ற (வழக்கத்திற்கு மாற்றமான) தாகவே அமையும்''. (ஆதாரம் : பிக்ஹுல் அக்பர்)

''இத்ராக்'' என்றால் ''சுறறிச்சூழ முழுமையாகப் பார்வையால் சூழ்ந்து காணுதல்'' எனப் பொருள்படும். இவ்வாறான பார்வையில் அல்லாஹ்வின் தரிசனம் அமையாது. மாறாக ''லிகா'' எனும் அடிப்படையில் அல்லாஹ் காட்சி தருவான் என்பதே மறுமையில் அ(வ்விறை)வனின் தரிசனம் என்பதன் அடிப்படையாகும்.

''மறுமையில் அல்லாஹ்வைப் பார்க்கும் சக்தி முஃமின்களுக்கு மட்டும் வழங்கப்படும். அதனால் முஃமின்கள் அங்கு அல்லாஹ்வைப் பார்க்கலாம். அப்போதும் அல்லாஹ்வின் உள்ளமை எப்படி இருக்கிறதோ. அப்படி முழுமையான முறையில் பார்க்க முடியாது என்பதே முடிவான கருத்தாகும்''. (ஆதாரம் : மஆரிஃபுல் குர்ஆன்)

''அவ்வாறு அல்ல, நிச்சயமாக அவர்கள் அந்நாளில் (மறுமையில்) தங்களுடைய ரப்பைவிட்டும் தடுக்கப்பட்டோர் ஆவார்கள்''. (குர்ஆன் 83:15)

''இவ்வசனத்திற்கு இமாம் ஷாபி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கின்றார்கள். அல்லாஹ்வின் கோபத்தால் ஒரு சமூகம் அ(வ்விறை)வனைத் தரிசிக்க முடியாமல் தடுக்கப்படுவார்கள் என்பது, அல்லாஹ்வின் திருப்தியால் - விருப்பால் வேறொரு சமூகத்திற்கு அல்லாஹ்வின் தரிசனம் கிடைக்கும் என்பதையே சுட்டும்''. (ஆதாரம் : தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீறுல் குர்ஆனில் மஜீத், பாகம் 07)

''மேற்படி வசனத்தின் கருத்தென்னவென்று மாலிக் இப்னு அனஸ் (ரஹ்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது, ''அல்லாஹ்வின் சன்மார்க்க விரோதிகள் திரையிடப்பட்டு அல்லாஹ்வைப் பார்க்க முடியாதவர்களாகவிடுவார்கள் என்றால், அவ்விறைவனுக்குப் பிரியமானவர்களுக்கு அவ்விறைவனைப் பார்ப்பதற்குத் தக்கவாறு தன்னை (அல்லாஹ்வை)க் காட்டுகின்றான் எனக் கூறினார்கள்''. (ஆதாரம் : தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீறுல் குர்ஆனில் மஜீத்)

''நபி (ஸல்) அவர்களுடைய பார்வை வழுவவுமில்லை. (பார்த்த காட்சியை விட்டும்) மாறவுமில்லை''. (அல்குர்ஆன் 53:17)

''(நபியுடைய) இதயம் தான் கண்டதைப் பற்றிப் பொய் கூறவில்லை. அவர் கண்டதைப்பற்றி நீங்கள் சந்தேகித்து அவருடன் தர்க்கிக்கின்றீர்களா? இன்னும் நிச்சயமாக அவர் இரண்டாவது முறையாகவும் அ(வ்விறை)வனைக் கண்டார்கள்''. (குர்ஆன் 53:11-13)

இவ்வசனங்களில் வரும் ''ரஆஹு'' என்ற வார்த்தையில் உள்ள ''ஹு'' என்பது அல்லாஹ்வைக் குறிக்கின்றது என இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

''நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் புறக் கண்களினால் அல்லாஹ்வைப் பார்த்தார்கள் என்பதற்கு இவ்வசனத்தில் (53:17) கூறப்பட்டுள்ள அரபுப் பதங்களிலிருந்து ஆதாரங்கள் கிடைக்கின்றன''. (ஆதாரம் : தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத் - பாகம் 07)

''அல்லாஹ், நபி மூஸா (அலை) அவர்களை பேச்சாலும், நபி இப்றாஹீம் (அலை) அவர்களை நட்பாலும், நபி (ஸல்) அவர்களை ருஃயத் பார்வையாலும் தேர்ந்தெடுத்தான்''. (ஆதாரம் : ஹாகீம், நாஸாஈ, திர்மிதி)

இமாம் ஹஸன் பஸ்ரீ (ரஹ்) அவர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுப் பின்வருமாறு பிரஸ்தாபிக்கின்றார்கள். ''நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வைத் தமது புறக்கண்களினாலேயே கண்டார்கள் தரிசித்தார்கள்''.

''நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிஃராஜின் போது தமது புறக்கண்களினால் அல்லாஹ்வைத் தரிசித்தார்கள்'' என்று இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் கூறுவதுதான் மேலான, முதன்மையான கருத்தாகும்'' என அல்லாமா முல்லா அலிகாரீ (ரஹ்) அவர்கள் தெரிவிக்கின்றார்கள். (ஆதாரம் : ஷரஹுஷிபா)

''நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிஃராஜின் போது அல்லாஹ்வின் தரிசனம் பெற்றார்கள் என்பது தவிர, மற்றவர் எவரும் இப் புறக்கண்களால் அல்லாஹ்வைக் கண்டார்கள் என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. இம்மாதிரி காணுதல் இயலாது என்பதுவே மார்க்க மேதைகளின் முடிவாகும். இது ஸுன்னத் வல்ஜமாஅத்தினரின் அசைக்க முடியாத கொள்கை'' (யாகும்) (ஆதாரம் : இஸ்லாமியக் கொள்கை மணிக் கோவை)

இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் அறிவிக்கிறார்கள், ''எல்லா அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமாஅத்தினருடைய கூற்றும் மறுமையில் அல்லாஹ்வைப் பார்க்க முடியும். அது சாத்தியமற்றதொன்றல்ல என்பதுதான். மேலும் அ(வ்விறை)வனை முஸ்லிம்கள் மட்டுமே பார்ப்பார்கள் காபிர்களல்ல என்பதிலும் கருத்தொற்றுமை கொண்டிருக்கின்றனர்''. (ஆதாரம் : ஷரஹ் முஸ்லிம்)

இமாம் அபுல்ஹஸன் அலி அஷ்அரீ (ரஹ்) அவர்கள் பின்வரும் இரு காரணங்களை தர்க்க ரீதியாக எடுத்துக்காட்டி, அல்லாஹ்வின் தரிசனம் சாத்தியமானதொன்று என நிறுவுகிறார்கள். அதுமட்டுமன்றி, இத்தெளிவான ஆதாரங்களின் பின்னரும் மறுப்போர் அல்லாஹ்வை வெறுமனே ஒருதத்துவப் பொருளாகச் சித்தரிக்கின்றனர். எனவும் கூறி, அவர்களின் கூற்றை மறுத்துக் கண்டிக்கின்றார்கள்.

1) ''உலகில் இயங்கும் எல்லாப் பொருட்களையும் அல்லாஹ்வினால் எங்களுக்குக் காட்ட முடியும். எனவே, அ(வ்விறை)வனுக்கு அ(வ்விறை)வனை எங்களுக்குக் காட்ட முடியும்''.

2) எல்லாப் பொருட்களையும் பார்க்கும் ஒருவன் அ(வ்விறை)வனையும் பார்க்கின்றான். எனவே, அல்லாஹ் அ(வ்விறை)வனைப் பார்க்கிறான். அ(வ்விறை)வனைப் பார்க்கும் ஒருவன் ஏனையவர்களுக்கும் அ(வ்விறை)வனைப் பார்க்க வழி செய்ய முடியும்''.

மேற்படி தர்க்க ரீதியான கருத்து வெறுமனே புறப்பட்டவொன்றல்ல. மாறாக,

இஸ்லாமிய அடிப்படைச் சட்ட மூலாதாரங்களுக்கு முரண்பாடில்லாச் சிந்தனையின் வெளிப்பாடாகும். இதனைப் பின்வரும் தெளிவான ஹதீஸ்கள் மூலம் நாமறிந்து கொள்ள முடியும்.

சிலர், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், ''யாரஸூலல்லாஹ்! நாங்கள் கியாமத்து நாளில் எங்கள் ரப்பைக் காண்போமா?'' எனக் கேட்டார்கள். (அதற்கு) ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ''பௌர்ணமி இரவில் பதினாலாம் பக்கத்து நிலவைக் காண்பதில் உங்களுக்கு ஏதேனும் இடையூறு இருக்கிறதா?'' என்றார்கள். அவர்கள் ''இல்லை! யாரஸூலுல்லாஹ்'' என்றார்கள்.

சூரியனை மேகம் மறைக்காதிருக்கும் போது, அதனைக் காண்பதில் உங்களுக்கு ஏதேனும் சிரமம் இருக்கிறதா? என மீண்டும் வினவினார்கள். அவர்கள் ''இல்லை'' எனப் பதிலளித்தார்கள். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதேபோன்றுதான் (ஒருவர் பார்ப்பதால் வேறொருவருக்குத் தடை ஏற்படாத வண்ணம்) அல்லாஹ்வை நீங்கள் காண்பீர்கள்''. (அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) ஆதாரம் : முஸ்லிம்)

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது காலத்தில் சிலர், ''யா ரஸூலுல்லாஹ்! நாங்கள் கியாமத்து நாளில் எங்கள் ரப்பைக் காண முடியுமா?'' எனக் கேட்டனர். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ''ஆம்'' எனக் கூறிவிட்டு, ''நண்பகல் வேளையில், மேகம் இல்லாது வானம் தெளிவாக இருக்கும் போது சூரியனைக் காண்பதில் உங்களுக்கு ஏதேனும் இடையூறு இருக்குமா? பௌர்ணமி இரவில் மேகமில்லாது வானம் தெளிவாக இருக்கும் போது சந்திரனைக் காண்பதில் உங்களுக்கு ஏதேனும் இடைஞ்சல் இருக்குமா?'' எனக் கேட்டார்கள். அவர்(கள் ஸஹாபாக்)கள் ''இல்லை யாரஸூலுல்லாஹ்!'' என்றனர். (அதேபோன்றுதான்) கியாமத்து நாளில் அல்லாஹுத்தஆலாவை காண்பதில் எவ்வித இடையூறும் இருக்காது'' எனக் கூறினார்கள்....'' (அறிவிப்பவர் : அபூ ஸயீதுல் குத்ரீ (ரழி) ஆதாரம் : முஸ்லிம்)

மறுமையில் அல்லாஹ்வின் (லிகா) திருவுலக் காட்சி நபியுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய உம்மத்தினர்களுக்கும், இன்னொரு கூற்றுப்படி, கடந்த கால சமுதாயங்களில் வாழ்ந்த இறை விசுவாசிகளுக்கும் கிடைக்கும் என்பதே அஹ்லுஸ் சுன்னத் வல்ஜமாஅத்தின் அறிஞர்களின் முடிந்த முடிவாகும்.

## 2. கஷ்பினால் தரிசிக்க முடியும்

**எனவே,** அல்லாஹ்வை ஞானதிருஷ்டியா(ல் கஷ்பினா)ல் காண்பது சாத்தியமாகுமா? என்ற வினாவுக்குரிய விடையின் பால் எமது சிந்தனையைச் செலுத்தி, தெளிவைப் பெற்றுக்கொள்வதும் இன்றவசியத் தேவையாக நம் முன்னுள்ளன.

''அல்லாஹ்வை ஞானதிருஷ்டியால் (கஷ்பால்) காண்பது என்பது அ(வ்விறை)வனுடைய அருட்சுடர்களை (தஜல்லியாத்துகளைக்) காண்பது தான். இதற்கு உதாரணமாக நாம் மனிதனையோ அல்லது சூரியனையோ காண்பதாகச் சொல்கிறோமே, அப்போது நாம் காண்பது அவ(ன் மனிதனி)ன் வெளித்தோற்றத்தையேயாகும். அவ(ன் மனிதனி)ன் உள்ளமையையல்ல; சூரியன் ஒளியைக் காண்கிறோமேயன்றி அதன் உள்ளமையையல்ல. எனவே,

அ(வ்விறை)வனின் உள்ளமையை அறிய முயல்வது வீண்'' (ஆதாரம் : மெய்ஞ்ஞானப் பேரமுதம் - அறிஞர் சித்தி லெவ்வை)

''மனிதத்தன்மை மிகுந்த நஃப்ஸும், ஆறறிவுமிகுந்த அக்லும் மனிதனின் கல்பில் அரசோச்சும் பொழுது அவன் அன்பும், அறனும், அளிவும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவனாக விளங்குகின்றான். அப்பொழுது அவனுடைய ''கல்பு'' தூய்மையை தரிசிக்கும் வல்லமையைக் கொண்ட உள்ளமாக, அபாரமான ஆற்றல் படைத்ததாகிவிடுகின்றது.

இது இறைவனைப் பற்றியே அல்லும் பகலும் சிந்தித்து அவனுடனே நீங்காத தொடர்புகொண்டு மாசு மறுவற்ற கண்ணாடி போன்று ஆகிவிடுகிறது. இதில் அனைத்து இரகசியங்களும் பிரதிபலிக்கின்றன. அவற்றை அவன் கண்டுகளிக்கிறான். இதனையே அகக்கண் என்றும் ஞானக்கண் என்றும் கூறுகின்றார்கள். இதன் மூலம் அவன் இறைவனையே காண்கிறான். இறைவனும் தன்னுடைய அரியாசனமாக அவனது இதயாசனத்தையே ஆக்கிக் கொள்கின்றான்''. (ஆதாரம் : இஸ்லாமிய கலைக்களஞ்சியம் - மூன்றாம் பாகம்)

கஷ்பு நிலையை அடைந்த ஒருவர் இம்மையில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அவரின் அகக் கண்பார்வை திறக்கப்படும் போது இவ்வுலகை விட்டும் அவர் நீங்கியவராகவும், அவரது உள்ளமும், உணர்வும் வேறொரு உலகத்தை நோக்கியதாகவும் இருக்கும். எனில் கஷ்பு நிலைக்குப் புறம்பான நமது பார்வையால் அவர் இம்மையில் இருப்பது போன்ற தோற்றத்தைத் தந்தாலும் அவரைப் பொறுத்தவரை இம்மையுலகிற்கு அப்பாலான ஓர் உலகத்தினுள் இருப்புக் கொள்கின்றார்.

''நப்ஸை அழித்து (முதல்) மரணத்தைத் தழுவிக் கொண்டால், அகத்தால் அல்லாஹ்வைக் காண முடியும்''
(ஆதாரம் : புஷ்றா மலர் 1, இதழ் 3, ஏப்ரல் 2006)

பொதுவாக அல்லாஹ்வின் தாத் - உள்ளமையைக் காண்பது முடியாத ஒன்றாகும். ஆத்மீக ஞானிகள் இம்மையில் அல்லாஹ்வைத் தரிசித்ததாகக் கூறியிருப்பதற்கு நேரடி அர்த்தம் கொள்ளாது. பின்வரும் அடிப்படையில் பின்னணியில் புரிந்து கொள்வதுதான் சரியான கொள்கையாக - பொருளாக இருக்க முடியும்.

''யார் தன்னைப் பற்றி அறிவாரோ அவர் தனது இரட்சகனை (ரப்பை) அறிந்து கொ(ண்டவராவார் -க)ண்டவராவார்''
(ஆதாரம் : தப்ராணி)

''(அல்லாஹ்வை புறக்கண்களால் கண்டு) அறிய இயலாது என்று அறிவது தான் உண்மையான ஞானமாகும்''. என அபூபக்கர் ஸித்தீக் (ரழி) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். (அதாவது) மெய்ஞ்ஞானத்தின் முடிவான அறிவே அல்லாஹ்வின் உள்ளமையை - வுஜூதை (கண்டு) அறியக்கூடாது என்பது தான்''. (ஆதாரம் : மெய்ஞ்ஞானப் பேரமுதம்)

''அல்லாஹ்வை இவ்வுலகில் கண்களால் கண்டதாக எவரும் கூறினால் அது பொய். அந்தக் கூற்று ஏற்கத்தக்கதல்ல'' என மஷாயிகள் அனைவரும்

ஒருங்கிணைந்து தெரிவித்துள்ளனர்''.
(ஆதாரம் : அத்தக்ரீப் - இது தஸவ்வுஃப் கலைக்குரிய நூலாகும்)

''சில ஸூஃபியாக்களும், வேதாந்திகளும் அல்லாஹ்வைக் கண்டதாகக் கூறப்படும் அவர்களின் கூற்றுகளுக்கு வலிந்துரை கூறி, வேறு கருத்துக் கொள்ள வேண்டுமே தவிர, அதனை அப்படியே ஒப்புக்கொண்டு விடலாகாது. அப்படி எந்த ஸூஃபியேனும், வேதாந்தியேனும் (இவ்வுலகில்) புறக் கண்களால் அல்லாஹ்வைக் கண்டதாகக் கூறி சாதித்தால் அவர் வழிகெட்டவரும் வழி கெடுப்பவருமாவார்''. (ஆதாரம் : இஸ்லாமியக் கொள்கை மணிக்கோவை - மௌலவி பீ.ஏ. கலீலுர் ரஹ்மான் (ரியாஜி)

அல்லாஹ்வின் (ஸிஃபாத்) பண்புகள் எனும் பகுதியை அறிந்து கொள்வது அ(வ்விறை)வனைக் காண்பதாகக் கொள்ளப்படுகின்றன. இதுகூட எல்லோருக்கும் சாத்தியப்படுவதில்லை. ''இல்ஹாம்'' எனும் (அல்லாஹ்வின் புறத்திலிருந்து பெறப்படும் விஷேட) அறிவுடைய வர்களுக்கே கஷ்பா(ல் - ஞான திருஷ்டியா)ல் அறியும் தன்மை இருக்கும்.

இத்தகையோர்களினா(ல் - கஷ்பா)ல் அல்லாஹ்வை அறிவதையே ''அல்லாஹ்வின் தரிசனத்தை இவ்வுலகில் அனுபவித்ததாக''க் கொள்ளப் படுகின்றன என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

''இம்மை, மறுமை ஆகிய இருவுலகிலும் அல்லாஹ்வைக் காண்பது அறவே சாத்தியமில்லை'' என்ற கருத்தை காரிஜிகளும், முஃதஸிலாக்களும் கொண்டுள்ளனர். ஆயின் இது வழிதவறியவர்களின் கொள்கைகளின் கருத்திற்குட்பட்டவை என்பது மிகத் தெளிவாகி விடுகின்றது. நேர்வழிக்குரிய அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமா அத்தினர்கள் இதுவிடயத்தில் கொண்டுள்ள கருத்துக்கள் பின்வருவனவாகும்.

அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமா அத்தினர்களின் கோட்பாட்டின் - அடிப்படைக் கொள்கையின் படி, ''நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் உம்மத்தினர்களான முஸ்லிம்களும், முஃமீன்களும் நபி ஆதம் (அலை) அவர்கள் தொட்டு நபி ஈஸா (அலை) அவர்கள் வரையான நபிமார்களின் சமூகங்களிலும் விசுவாசங் கொண்டவர்களும் அல்லாஹ்வைக் காண்பது - தரிசிப்பது'' என்பது நிச்சயமான ஒன்றாகும்.

அவ்வாறாயின், அவரவர்களின் தகுதிக்கேற்ற வகையில் அல்லாஹ்வின் (லிகா என்னும்) திருவுலக் காட்சி கிட்டுமென்பது வெள்ளிடை மலையானது. நமக்கு இப்பாக்கியம் கிடைப்பதற்கு அல்லாஹ்விடம் இறைஞ்சுவோம்.

அனைத்தையும் மிக நன்கறிந்தவன் அல்லாஹ் ஒருவனே.

# அவுலியாக்கள்

இஸ்லாத்திற்கும் விலாயத்திற்கும் இடையில் எவ்விதத் தொடர்புகளுமில்லை எனச் சிலரும், அவுலியாக்கள் என்றொரு சாராரும் இல்லை எனப் பிரிதொரு பகுதியினர்களும் கருத்துத் தெரிவிக்கின்றனர். மறுபுறத்தில் அவுலியாக்கள் என்று ஒரு சாரார் இருக்கின்றனர். ஆயினும் அவர்களிடமோ அல்லது அவர்கள் ஊடாகவோ பிரார்த்திப்பதும், நேர்ச்சை வைப்பதும் தான் இஸ்லாத்தில் இல்லாதவை - இஸ்லாத்திற்கு முரண்பட்டது எனச் சிலர் கூறுகின்றனர்.

இன்னொரு புறத்தில் இவ்வுலகில் உயிருடன் வாழும் அவுலியாக்களிடம் உதவி தேடுவதோ, பரக்கத்திற்காக பிரார்த்திக்கக் கூறுவதோ தவறில்லை என்போர்களும் எம்மிடையே உள்ளனர். இஸ்லாமிய போர்வையினை போர்த்திக் கொண்ட சில இயக்கங்களும், மௌலவி என்போரில் சிலரும் மேற்படிக் கருத்துக்களின் பின்னாலுள்ளனர்.

இப்படிப் பல கோணங்களில் அவுலியாக்கள் பற்றிய கருத்துக்கள் சர்ச்சைக்குரியதாக மாற்றப்பட்டிருப்பது கண்கூடு. உண்மையில் அவுலியாக்கள் சர்ச்சைக்குரியவர்கள் அல்லவென்பது மிக யதார்த்தமான ஒன்றாகும்.

எனவே, அல்லாஹ்வின் அவுலியாக்கள் என்போர் யார்? அவர்களின் அகமியங்கள் என்ன? அவர்களிடம் உதவி தேடலாமா? அவர்கள் ஊடாக நேர்ச்சை வைக்கலாமா என்பன போன்றவற்றை நோக்குவதே இக்கட்டுரையின் இலக்காகும்.

## 1. இஸ்லாத்தில் விலாயத்துண்டா?

அவுலியாக்கள் என்போர்கள் பிரச்சினைகளுக்கும், பிணக்குகளுக்கும் உரியவர்கள் அல்லர். மாறாக இஸ்லாமிய வரலாற்றில் நீண்ட பாரம்பரியத்திற்குரியவர்கள் என்பது மிகத் தெளிவானது.

“உங்களுக்கு முன்னர் வாழ்ந்த சமுதாயங்களில் “முஹத்தஸூன்கள்” அல்லாஹ்வின் புறத்திலிருந்து “இல்ஹாம்” எனும் தெய்வீக உதிப்பு கொடுக்கப்பட்டவர்கள் பலர் இருந்துள்ளனார் (என் சமூகத்தில் இல்ஹாம் வழங்கப்பட்டவர் உமர் (ரழி) ஆவார்) என நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.'' (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) ஆதாரம் புகாரீ)

இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் இந்த ஹதீஸை ஆயிஷா (ரழி) வாயிலாக அறிவிக்கிறார்கள். இவ்விரு அறிவிப்பிலும் “முஹத்தஸூன்” என்பதன் பொருள் “முல்ஹமூன்”-இல்ஹாம் கொடுக்கப்பட்டவர்கள் என இப்னு வஹப் கூறுகிறார். (ஆதாரம்: ரியாழுல் ஸாலிஹீன் - பாகம் 04

“இறை நேசர்களுக்கு அல்லாஹ்வோடு சில உரையாடல்களும் கஷ்ஃபுகள் என்ற இறை உதிப்புக்களும் இருக்கின்றன” என இப்னு தைமிய்யா குறிப்பிடுகின்றார். (ஆதாரம்: இறைநேசச் செல்வர்களும் ஷைத்தானின் தோழர்களும்)

“ஒவ்வொரு இறைதூதரும் வலியாகவும், நபியாகவும் இருக்கிறார். இறைதூதராக இருக்கக்கூடிய ஒருவருடைய இறைத்தூதில் நபித்துவம் அடங்கிவிடுகிறது. அந்நபித்துவத்தில் விலாயத் என்னும் இறைநேசம் உள்ளடங்கி விடுகிறது. விலாயத் என்னும் இறைநேசமின்றி ஒருவருக்கு அல்லாஹ் வஹீ அறிவிப்பது ஒருபோதும் முடியாத காரியமாகும். ஒருவருக்கு அல்லாஹ் வஹீ அறிவிக்கும் போது அவர் இறைநேசராக இருப்பது அவசியம். ஷிலாயத் என்னும் இறைநேசமின்றி நபியாக மட்டும் ஒருவர் இருக்கமுடியாது.” (ஆதாரம்:இறைநேசச் செல்வர்களும் ஷைத்தானின் தோழர்களும் - இப்னு தைமிய்யா)

ஆகவே நபித்துவத்திற்குரிய நுபுவ்வத்தைக் கொண்டிருப்பவர் விலாயத் எனும் பதவியையும் தன்னோடு கொண்டிருப்பார். ஆனால் நபியுல்லாஹ்(ஸல்) அவர்களின் பின்னர் நபித்துவம் முற்றுப் பெற்றமையினால் நுபுவ்வத்தின் வாயில் மூடப்பட்டுவிட்டன. இதனடிப்படையில் விலாயத் மட்டும் கொண்டிலங்கும் அவுலியாக்கள் மட்டும் கியாமத் நாள் வரை இருந்து கொண்டிருப்பர் என்பது தெளிவானது. இதனை முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி தமது நூலில் பின்வருமாறு விளக்குகின்றார்கள்.

“ஆதி பிதா ஆதம்(அலை) அவர்கள் இவ்வுலகிற்கு வந்தபோது அவர்கள் வெளிரங்கத்தில் நுபுவ்வத்தும் உள்ரங்கத்தில் விலாயத்தும் உடையவர்களாக இருந்தார்கள். அவர்களுக்குப் பிறகு பல்லாயிரம் நபிமார்கள் வெளியாகி, இறுதியாக முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தோன்றினார்கள். அவர்களோடு நபித்துவம் முடிவடைந்து விட்டபடியால் அவர்கள் பால் பகிரங்கமாக இருந்த நுபுவ்வத்து அந்தரங்கமாகி, அந்தரங்கமாகவிருந்த விலாயத்து பகிரங்கமாயிற்று. அல்லாஹ் நபிமார்களுக்குத் தனது வஹீயைக் கொண்டு பயிற்சியளித்தான். அவுலியாக்களுக்கு அல்லாஹ்வின் உதிப்பாகிய இல்ஹாமைக் கொண்டு பயிற்சியளிக்கின்றான். இறை நேசர்கள் நபிமார்களுடைய நிர்வாகப் பொறுப்பாளர்களாகவும், பிரதிநிதிகளாகவும், வாரிசுகளாகவும் இருக்கிறார்கள்.” (ஆதாரம்: பத்ஹுர்ரப்பானீ)

“நபிமார்கள் வஹீயின் மூலம் நேரடி இறைவழிகாட்டலைப் பெற்றார்கள். வஹீ எனும் தெய்வீக அருள் வெளிப்பாடு அவர்களுக்கும், அல்லாஹ்வுக்கும்

இடையில் இருந்த திரையை அகற்றியது. அவ்வாறே அல்லாஹ்விற்கு மிகவும் நெக்கமான அவனது நேசர்கள் - ஸூஃபியாக்கள் நுபுவ்வத்துக்கு அடுத்த படித்தரத்தில் உள்ள விலாயத்துக்குரிய வழிகாட்டலை ''இல்ஹாம்'' மூலம் பெற்றுக் கொண்டனர்'' (ஆதாரம் : ஷரீஆவின் பார்வையில் தஸவ்வுப் - எச்.எம்.எம். கைருல் பஷர் எம்.ஏ.)

“விலாயத்'' எனும் அரபுச் சொல்லிற்கு “நேசம், நெருக்கம்'' போன்ற பொருள்களைக் தமிழில் கொள்ளலாம். விலாயத் எனும் சொல்லின் எதிர்ச் சொல் ''அதாவத்'' என்பதாகும். இச்சொல் “வெறுப்பு, தூரம்'' போன்ற அர்த்தங்களைக் கொண்டதாகும்.

## 2. அவுலியாக்கள் என்போர் யார்?

“வலி'' என்னும் அரபுச் சொல்லின் பன்மைச் சொல்லே அவுலியா'' என்பதாகும். “வலி'' என்பதற்கு ''நெருக்கமானவர்'' என்றும் ''வலியுல்லாஹ்'' என்பதற்கு ''அல்லாஹ்விற்கு மிக நெருக்கமானவர் எனவும், “அவுலியா'' என்பதற்கு “அல்லாஹ்வின் நண்பர்கள் - இறை நேசச் செல்வர்கள்'' என நாம் தமிழில் பொருள் கொள்ளலாம். இத்தகைய அ(வ்விறை)வனது நேசத்துக்கும், அன்புக்கும் உரிய அவுலியாக்களைப் பற்றி அல்லாஹ் அல்குர்ஆனில் அழகுற பின்வருமாறு எடுத்துரைக்கின்றான்.

''(விசுவாசிகளே!) அறிந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ்வின் நேயர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.'' (குர்ஆன் 10:62)

“விலாயத் என்பது அல்லாஹ்வை அறிவதும், தங்கள் நப்ஸுகளை அறிவதுமாகும். அல்லாஹ்வை அறிவது என்பது முஹப்பத் எனும் பார்வையைக் கொண்டு அ(வ்விறை)வனைப் பார்ப்பதாகும். நப்ஸை அறிவது என்பது நப்ஸின் தன்மையும் அதன் நிலையும் வெளியாகும் போது பகை என்ற பார்வையைக் கொண்டு அதனைப் பார்ப்பதுமாகும்.”

“நப்ஸை நீ அறிய வேண்டிய முறைப்படி அறிந்தால் இன்னும் அது அல்லாஹ்விற்கும் உனக்கும் பகைவன் என்பதை நீ உணர்ந்து கொண்டால் அதற்கு மாறான காரியங்களைக் கொண்டு அதற்கு நீ சிகிச்சை செய்தால், நீ அதன் வஞ்சகம், சூது ஆகியவைகளை விட்டும் அச்சம் தீர்ந்தவனாக மாறுவதுடன் அதன் பால் இரக்கம், வாஞ்சை என்ற கண்ணைக் கொண்டு நீ பார்க்கமாட்டாய்.'' (ஆதாரம் : தாவீலாத் துன்னஜ்மிய்யா-இமாம் கஸ்ஸாலி (ரஹ்))

“அவர்கள் தங்கள் வணக்கத்தினால் அல்லாஹ்விடம் நெருங்கி இருக்கிறார்கள். இன்னும் அ(வ்விறை)வனது ஞானத்திலே மூழ்கி இருக்கிறார்கள். எனவே அவர்கள் காண்பதெல்லாம் அல்லாஹ்வின் குத்ரத்தின் ஆதாரங்களையே. அவர்கள் செவியேற்பதெல்லாம் அ(வ்விறை)வனது திருஷ்டானங்களையே. அவர்கள் பேசுவதெல்லாம் அல்லாஹ்வின் புகழையே. அவர்கள் நடமாடினால் அ(வ்விறை)வனது ஊழியத்திலேயே. அவர்கள் முயற்சி செய்தால் அ(வ்விறை)வனது வழிபாட்டிலேயேதான்.'' என்பதாக மௌலா அபுல்ஸஊது (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அல்-கௌப் அதாவது பயம் என்பதற்கு எதிர்காலத்தில் தங்களுக்கு வெறுப்பான காரியங்கள் சம்பவிப்பதைக் குறித்து அச்சம் என்பது கருத்தாகும். இவ்விடத்தில் சிலர், ''அல்லாஹ் அச்சமில்லாதவனாக இருப்பது போல் அவுலியாக்களும் அச்சமற்று இருக்கிறார்கள்'' எனக் கூறுகின்றனர். உண்மையில் அவுலியாக்களுக்கு அல்லாஹ்வைப் பற்றிய அச்சம் இருக்கின்றது. ஆயின் அல்லாஹ்வுடைய தன்மைக்கு நிகராக, ஹல்குகளை - படைப்புக்களை நிகராக்குவதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது.

எனவே, அல்லாஹ் தனது நேசர்களுக்கு அச்சமில்லாத தன்மைகளை வழங்கி இருக்கின்றான் என்பதுவே யதார்த்தமாகும். இக்கோட்பாடானது அவுலியாக்களுக்கு மட்டும் உரித்தானதல்ல. மாறாக அல்லாஹ்விற்கும் அ(வ்விறை)வனது படைப்பினங்கள் எல்லாவற்றிற்குமிடையில் இருக்கின்ற பொதுவான தொடர்பேயாகும்.

ஆழமான சிந்தனைகள், ஆத்மீகத் தெளிவுகள் என்ற போர்வையில் அல்லாஹ்வின் பண்புகளை, தன்மைகளை நிகராகப் படைப்பினங்களுக்கு சூட்டி அழகு பார்ப்பதினால் உண்மைகள் வெளிச்சத்திற்கு வராது, புதையுண்டு போகின்ற அபாயமும் இருக்கின்றது என்பதை நாம் மறக்கலாகாது.

அல்-ஹுஸ்னு - அதாவது துயர் என்பதற்கு அவர்கள் நேசித்த ஒன்று தவறிப் போவதால் ஏற்படும் கவலைகள் அல்லது விரும்பாமல் இருந்த ஒன்று நிகழ்ந்து விடுதல் என்பது பொருளாகும். அல்லாஹ்வின் அவுலியாக்களுக்கு இம்மை, மறுமை இரண்டிலும் பயம், துயர் எனும் இரண்டும் நிகழாதென்பது மேற்படி வசனத்தின் கருத்தென்பது மறை விரிவுரையாளர்களின் முடிந்த முடிவாகும்.

" ஓர் அடியாரின் இதயம் கணப்பொழுது கூட அல்லாஹ்வின் நினைப்பை விட்டு அகலாது அ(வ்விறை)வனிலேயே மூழ்கி விடுமானால் ஹவிலாயத்' எனும் பெரும்பேறு கிட்டி விடுகிறது. இதனைப் பெறுகின்ற அவருக்கு எதைப் பற்றியும் கவலையோ, பயமோ கிடையாது. அல்லாஹ்வின் ஜோதியிலேயே மூழ்கிப்போயிருக்கும் அவர், இவ்வுலகைப் பற்றிச் சிந்திப்பதே கிடையாது. கவலை, பயம் என்பதெல்லாம். இவ்வுலகத்திற்குரியவை. உலகைப் பற்றிய சிந்தனையற்ற ஒருவர் கவலை, பயம் என்பதற்கெல்லாம் அப்பாற்பட்டவராகி விடுகின்றார்." (ஆதாரம்: தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன்-பாகம்02, ஸூரத்து மாயிதா முதல் ஹூது வரை)

## 3. அவுலியாக்கள் முக்தியின் சொத்துக்கள்

"அவர்கள் ஈமான் கொண்டு (அல்லாஹ்விடம்) பயபக்தியுடன் நடந்து கொள்வார்கள்'' (அல்குர்ஆன் 10:63) இவ்வசனம் அவுலியாக்களின் மாண்புகளையும், அவர்கள் இப்பதவிக்கு வந்த காரணங்களையும் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றது.

''ஷரீஅத், தரீக்கத் ஆகியவைகளின் அந்தஸ்தில் தவறான குணங்களும், தவறான செயல்களும் தங்களில் வந்து விடுவதைக் குறித்து அல்லாஹ்வை அவர்கள் பயந்து கொண்டிருந்தவர்கள். மேலும், ஹக்கீகத், மஃரிபத் என்ற முறையில் மறதிகளும், தவறுகளும் வந்து விடாமல் தங்களைக் காத்துக் கொண்டவர்கள். ஏனெனில், அவர்கள் தங்கள் பிறவிக் குணங்களை

ஷரீஅத்தைக் கொண்டும், தங்கள் நப்ஸுகளை தரீக்கத்தைக் கொண்டும், தங்களின் இதயங்களை மஃரிபத்தைக் கொண்டும், தங்கள் ஆத்மாக்களையும், இரகசியங்களையும் சீர்திருத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே, அவர்கள் அல்லாஹ்வைத் தவிர உள்ள யாவையும் தவிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான தார்ப்பரியம் ''தக்வா'' என்பதற்கு ஞானவான்கள் அளித்துள்ள அந்தஸ்த்தில் மூன்றாவது அந்தஸ்தைக் குறிக்கின்றது. அதாவது, ஹக்கைவிட்டு - மெய்ப்பொருளைத் தவிர்த்து மறக்கும் படியான சகலதையும் விட்டு நீங்கி, அல்லாஹ்வின் பால் சார்ந்துவிடுதல் என்ற பொருளையே அறிவிக்கின்றது. ஷிர்க்கைவிட்டு நீங்குதல், பாவத்தை ஏற்படுத்தும் செயல்களைச் செய்யாதிருத்தல் என்ற இருவகை அந்தஸ்த்துக்களையும் இப்பொருள் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கின்றது.'' (ஆதாரம் : தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத் - பாகம் 03)

ஷரீஆத், தரீக்கத், ஹக்கீகத், மஃரிபா ஆகிய செல்வங்களை அல்லாஹ்வின் பேரருளால் நிரம்பப் பெற்றவர்கள் தாம் அவுலியாக்கள் எனப்படுவர்கள்''. (ஆதாரம் : குர்ஆன்தர்ஜமா)

## 4. அவுலியாக்களின் இன்னொரு வதனம்

அல்லாஹ்வின் அவுலியாக்களைக் குறித்து நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது. அதற்கு அவர்கள், (குமுல்லதீன யத்கருல்லாகபிரூ ஈயத்திஹிம்) ''எவரைப் பார்ப்பது கொண்டு அல்லாஹ் நினைவூட்டப் படுகின்றானோ அத்தகையோர்தம் அவுலியாக்கள்'' எனப்பதிலளித்தார்கள். (ஆதாரம் : குர்ஆன் தர்ஜமா)

அவுலியாக்களின் அந்தஸ்துப் பற்றி நபி (ஸல்) அவர்கள், ''அல்லாஹ்விற்குச் சில அடியார்கள் இருக்கிறார்கள் அவர்கள் நபிமார்களுமல்ல; ஷுஹதாக் களுமல்ல. அவர்களுக்கு அல்லாஹ்விடத்திலிருக்கின்ற அந்தஸ்தினால் கியாமத்து நாளில் நபிமார்களும், ஷுஹதாக்களும் கூட அவர்களிடம் போட்டி போடுவார்கள்'' எனக் கூறினார்கள். (அறிவிப்பவர்: உமர் (ரழி) ஆதாரம் : அபூதாவூத்)

“...வலிமார்களில் கௌதுல், குத்பு, அப்தால் எனப்பல்வேறு படித்தரங்கள் உண்டு. எவ்வளவு உயர்வான படித்தரமுடைய வலியாயிருப்பினும் அவர் ஒரு நபி அல்லது ரஸுலின் அந்தஸ்த்தை எய்திட இயலாது.'' (ஆதாரம் : இஸ்லாமியக் கொள்கை மணிக்கோவை!)

நபிமார்களது அந்தஸ்திற்கு எந்த அவுலியாக்களும் வரமுடியாதென்பதில் அபிப்பிராய முரண்பாடு இல்லை. என்றாலும் இந்த ஹதீஸில் அவுலியாக்களின் அந்தஸ்துகளின் மேன்மை உவமானத்தின் மூலம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் கருத்தாகும். அஹ்லுஸ் ஸுன்னத்வல் ஜமாஅத் அறிஞர்களின் முடிவும் இதுவேயாகும். இதனைப் பின்வரும் கூற்று உறுதிப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

“ஸித்தீக் என்பவர் யாரெனில், மனோ இச்சையும், பொய்மையும் முற்றிலும்

அகன்று அகமும் புறமும் ஒன்றுபோல் உண்மை குடிகொண்டு உன்னத பதவியடைந்தவராவர். "ஷஹீதானவர்" யாரெனில் இறை தரிசனத்தைக் கொண்டு நிச்சயமடைந்தவராவார். ஸாலிஹ் என்பவர் யாரெனில் அகத்திலும் புறத்திலும் பாவங்களை விட்டும், துர்க்குணங்களைவிட்டும் சித்த சுத்தி பெற்ற உத்தம புருஷராவர். இம்மூன்று வகுப்பினருக்கும் ஒலி எனும் பெயர் பொருந்தும். (ஆதாரம்: தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத் பாகம் 01)

மேற்படி கருத்துடன் பின்வரும் கூற்றினையும் இணைத்து நோக்குவதன் மூலம் அல்லாஹ்வின் நேசர்களின் மகத்துவங்கள் இன்னும் தெளிவாகிவிடும். அதுமட்டுமன்றி அவர்களுக்கு அல்லாஹ்விடமிருக்கின்ற அந்தஸ்த்தினையும் நாம் புரிந்து கொள்ள முடியும்.

"விலாயத் என்பதன் கருத்து அல்லாஹ்வை நெருங்குவதும், அல்லாஹ்வை அறிவதும், அகமிய இரகசியங்களைத் தெரிந்து கொள்வதுமேயாகும். இந்த தெரிந்து கொள்ளல் அதன் உச்சநிலையை இறுதி நிலையை எட்டுவதாக இருக்கவேண்டும். இறையருள் பெற்ற அவுலியாக்களின் நோக்கத்தை அடைந்தவர்களிடமிருந்து மக்களை அழைக்கும் பணியை அல்லாஹ் வாங்க நாடினான் எனவே அவர்களுக்கு ஹநுபுவ்வத்' என்ற பதவியைக் கொடுத்தான். இந்த வேலையை அவர்களிடமிருந்து வாங்கினான். அதாவது நபிமார்கள் வலியாகவும் இருக்கிறார்கள். ஆனால் வலி (இறைநேசர்) வலியாகவே இருப்பார். நபியாக மாட்டார்." (ஆதாரம்: அடியார்களை ஆதரிக்கும் ஞானம் தமிழில் மௌலவி எம்.ஜே.எம்.கமாலுத்தீன் (பாகவி).

"வலிமார்களான இறைநேசச் செல்வர்களுக்கு மெய்ஞானத்தின் ஊற்று எவ்வாறு திறக்கிறதென்றால், அவர்களிடத்தில் இறைவணக்கம் என்ற அச்சப்பாடு (உள்ளச்சம்) எந்தளவு மேலோங்கி இருக்கிறதோ அந்த அளவில்தான் விலாயத்தின் படித்தரத்தை பெறுகிறார்கள். இதைப்பற்றி பின்வரும் அல்குர்ஆன் வசனத்தில் அல்லாஹ் தெளிவு படுத்துகின்றான்.

"யார் அல்லாஹ்வை அஞ்சுகிறாரோ அவருக்கு (சந்தேகம் என்னும் இருளை விட்டும்) வெளியாகும் இடத்தை ஆக்குகிறான். மேலும் அவருக்கு அவர் எண்ணாத திசையிலிருந்து (அறிவு ஞானங்களை) அளிக்கிறான்." (குர்ஆன் 65:2,3)

"இறைநேசர்களை நேசிப்பதைவிட சிறந்த வணக்கமில்லை. ஏனெனில், அவர்களின் நேசம் அல்லாஹ்வை நேசிப்பதன் அடையாளம் ஆகும்" என அபூஃபவாரிஸ் கிர்மானீ(ரஹ்) கூறினார்கள். (ஆதாரம்: நுஜ்ஹதுல் பஸாதீன்)

"அவுலியாக்களை ஞாபகம் செய்யும் இடத்தில் அல்லாஹ்வின் பேரருள் இறங்குகிறது.அல்ாஹ்வின் கடைக்கண் பார்வை ஒரு மனிதனின் தலைவிதியையே மாற்றவல்ல வலிமைமிக்கது" என அல்லாமா இக்பால் குறிப்பிடுகின்றார். (ஆதாரம்: வழிகாட்டும் வலிமார்கள்)

"உலக சுகங்களையும் மனோ இச்சைகளையும் வெறுத்து தீய செயல்களை முற்றிலும் துறந்து, நற்செயல்களை முடிந்த மட்டும் செய்து, அல்லாஹ்வைப் பற்றி போதிய அளவு அறிந்தவர்(ஆரிஃப்)தான் வலி என்பவராவார். (ஆதாரம்:ஜம்வுல் ஜவாமிஃ ஷரஹுல் அகாயிது)

"நிச்சயமாக அல்லாஹ்வுக்குச் சில அடிமைகள் இருக்கிறார்கள் எந்த ஒரு காரியத்தையும் அவர்கள் சத்தியம் செய்து சொன்னால் அல்லாஹ் அதை நடைமுறைப்படுத்திக் காட்டுகின்றான்" என்று நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் : புகாரீ)

குர்ஆன் 10:62,63ஆம் வசனங்களில் குறிப்பிட்டுக் காட்டப்படும் "அவுலியா" என்பது "மனிதர்களில் இறைநேசர்களும் இருக்கின்றனர்" என்பதை எடுத்துக் காட்டுவதாக இப்னு தைமிய்யா அபிப்பிராயப்படுகின்றார். (ஆதாரம் : இறைநேசச் செல்வர்களும் ஷைத்தானின் தோழர்களும்)

அவ்வாறாயின் அவுலியா எனும் அரபுச் சொல்லை பல்வேறு பொருள்களில் அல்லாஹ் குர்ஆனில் பிரயோகித்து இருந்தாலும் மேற்படி வசனத்தில் சுட்டிக் காட்டப்படுவது விலாயத்துடைய இறைநேசர்களைக் குறிப்பிடுவதற்கு என்ற அபிப்பிராயத்தை அஹ்லுஸ் சுன்னத் வல் ஜமாஅத் கொள்கையுடைய அறிஞர்கள் எடுத்துக் காட்டி வந்திருக்கின்றனர். அதனை இப்னு தைமிய்யாவும் ஒப்புக் கொள்வதையே இது முன்னிறுத்துகிறது.

"அலி (ரழி) அவர்கள் ஈராக்கில் இருக்கும் போது, அவர்களிடம் அமீருல் முஃமினீனே! ஷாம் தேசத்தினரை சாபமிடுங்கள் என்று சொல்லப்பட்ட போது, அதற்கு அவர்கள் முடியாது என்று மறுத்ததுடன், அங்குதான் அப்தால்கள் எனப்படுவோர்கள் இருப்பர். அவர்கள் மொத்தம் நாற்பது பேராகும். அவர்களில் ஒருவர் மரணம் அடைந்தால் இன்னொருவர் அந்த இடத்தில் நியமிக்கப்படுகிறார். இன்னும் அவர்கள் பொருட்டே மழை பொழிகின்றது. எதிரிகளிடமிருந்து வெற்றி கிடைக்கின்றது. முஸீபத்துக்கள் தூரமாக்கப்படுகின்றன என்பதாக நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் சொல்ல நான் கேட்டேன் என்று கூறினார்." (ஆதாரம் : முஸ்னத் அஹ்மத் பாகம் 01)

"இப்பூவுலகில் அல்லாஹ்வின் கலீல் ஆகிய இப்றாஹீம் நபியைப் போல் (இதயமுடையோர்) நாற்பது பேர் எப்போதும் இருந்து கொண்டே இருப்பர். அவர்கள் பொருட்டே மழை பொழிகிறது. இன்னும் அவர்கள் பொருட்டே விரோதிகளுக்கு எதிராக வெற்றி கிடைக்கின்றன. அவர்களில் ஒருவர் மரணமடைந்தால் இன்னொருவர் அவருக்கு பகரமாக்கப்படுகின்றார்" என்று நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் : தப்ரானி, மஜ்மவுல் பஹ்ரைன் பாகம் 07)

"ஒவ்வொரு காலத்திலும், நபி (ஸல்) அவர்களுக்கு முன்னும் சரி பின்னும்சரி கௌது அல்லது குத்புல் அக்தாபு உண்டு. அல்லாஹ்வின் பார்வை அவர்களை நோக்கிய வண்ணமாகவே இருக்கின்றது. அவர்கள் இருக்கும் வரை பிரபஞ்சம் அழிவதில்லை. அவர்களைக் கொண்டே அல்லாஹ் உலகத்தையும், சிருஷ்டிகளையும் பாதுகாத்து வருகின்றான்." (ஆதாரம் : ஷரஹ் புஸூஸுல் ஹிகம்)

"அல்லாஹ்வின் கட்டளைகளையும் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் நற்போதனைகளையும் உயிராய் எடுத்து, தீன் எனும் மார்க்க நெறியில் நடந்து ஷரீஅத் (சரியை) தரீகத் (கிரியை) ஹகீகத் (யோகம்) போன்றவற்றை படிப்படியாகக் கடந்து மஃரிபத் (ஞானம்) எனும் சாஸ்வதப் பேரின்ப வீட்டை அடைந்த நித்திய ஜீவன் பெற்றவர்களே வலிமார்களாவார்கள்." (ஆதாரம் : வலிமார்களின் அற்புதங்களில் வஹாபிகளுக்கு மறுப்புரை)

“அவுலியாக்களின் அந்தஸ்த்துக்களை மிக அறிந்த அல்லாஹ், தான் நாடியவர்களுக்கு அவர்களை அறிவித்துக் கொடுக்கிறான்.” (ஆதாரம்: வழிகாட்டும் வலிமார்கள்) என்பதுதான் உண்மை அவ்வாறானால் நாம் எல்லோரும் அவுலியாக்களை அறிந்து கொள்ள முடியும் ஒன்றல்ல. மாறாக சிலர் அறிந்து கூறுவதிலிருந்து நாம் எல்லோரும் உணர்ந்து அறிந்து கொள்ள முடியும் என்பதும் இதுவிடயத்தில் மிக முக்கியமான ஒன்றாகும்.

# 5. ஈருலகிலும் மோட்சமுடையவர்கள்

“அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையிலும், மறுமையிலும் நன்மாராயம் உண்டு. அல்லாஹ்வின் வாக்கு(றுதி)களில் எவ்வித மாற்றமுமில்லை. இதுவே மகத்தான பெரும் வெற்றியாகும்.'' (குர்ஆன் 10:64)

“இறைநேசச் செல்வர்கள் பற்றி இங்கு ஒரு சமிக்ஞை காட்டப்படுகிறது. இறைநேசம் என்பது ஒவ்வொரு முஃமீனின் உள்ளத்தையும் பொதிந்துள்ளது.'' (ஆதாரம் : குர்ஆன் தர்ஜமா)

அல்லாஹ் தனது இறைநேசர்களுக்கு இருவுலகிலும் பல்வகை பாக்கியங்களை வழங்குவதாக உறுதியளிக்கின்றான். அவைகள் இவைகள்தான் என வரையறுத்துக் கூறாது பொதுவாகவே கூறியுள்ளான். இதனால் பல்வேறு கருத்துக்களை தகுதியுடையோர் இவ்வாக்கியத்திற்குப் பொருளாக முன்வைப்பதை அவதானிக்கலாம்.

மேற்படி வசனத்தில் இடம்பெறும் “அல்-புஷ்ரா'' என்னும் சொல்லிற்கு, “இவ்வுலகில் மக்கள் அவரைக் குறித்துப் புகழ்வதும், அவரைப் போற்றுவதும், அன்பு பாராட்டுவதும்'' தான் என மௌலா அபுஸ்ஸஊத் (ரஹ்) அவர்கள் தெரிவிக்கின்றனர். வேறுசிலர் “மரணத்தருவாயில் அமரர்(கள் - மலக்கு)கள் ரஹ்மத்து(டன்-அருளு)டன் வருவதே'' இம்மையின் புஷ்ரா எனக் கூறுகின்றனர்.

“அல்புஷ்ரா'' எனும் சொல்லிற்கு இன்னொரு பகுதியினர் ‘‘நல்ல கனவுகள்'' ஏற்படுவதையே இது சுட்டுகின்றது என்கின்றனர். தங்களின் கருத்திற்குப் பின்வரும் ஹதீஸின் வழி நின்று ஆதாரப்படுத்துகின்றனர். ‘‘நபித்துவத்தில் முபஷ்ஷராத்துக்களைத் தவிர வேறொன்றும் எஞ்சியிருக்கவில்லை''. இக்கருத்தினை மேலும் வலுப்படுத்துவதற்குப் பல ஹதீஸ்கள் ஆதாரமாக வுள்ளன. அவற்றிலிருந்து ஒரு சிலவற்றை நமது நோக்கிற்கும், நினைவுக்கும் கொண்டுவருவோம்.

நான் நபி (ஸல்) அவர்களிடம் “அவுலியாக்களுக்கு இவ்வுலகில் கிடைக்கின்ற சுபச்செய்தி எது?'' என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ‘‘அது ஒரு விசுவாசி காண்கின்ற அல்லது காட்டப்படுகின்ற நல்ல கனவு'' எனச் சொன்னார்கள். (அறிவிப்பவர் : உபாதத்பின்ஸாமித் (ரழி) ஆதாரம் : திர்மிதி)

“நுபுவ்வத் - நபித்துவத்தின் நின்றும் எனக்குப் பின்னால் எஞ்சியிருப்பது முபாஷ்ஷராத் - சுபச்செய்தி சொல்பவை மட்டும்தான்'' என ஏந்தல் நபி (ஸல்) அவர்கள் செப்பிய போது, அங்கிருந்த ஸஹாபாக்கள் “முபஷ்ஷராத்'' என்றால் என்ன நாயகமே!'' என்று வினவினார்கள். அதற்கு அண்ணல்

அஹமது நபி (ஸல்) அவர்கள், "அவைதான் நல்ல கனவு'' என விடையளித்தார்கள். (அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) ஆதாரம்: புகாரீ)

"ஒரு விசுவாசியின் கனவு நபித்துவத்தின் நாற்பத்தியாறு பாகங்களில் ஒன்று'' என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். (அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) ஆதாரம்: புகாரீ)

மேற்படி ஆதாரங்களிலிருந்து பின்வரும் முடிவுகளுக்கு நாம் வரலாம். அல்லாஹ்வின் அவுலியாக்களுக்கு இவ்வுலகில் கிடைக்கின்ற சுபச் செய்தி நல்ல கனவு எனவும், மறுமையில் அவர்களுக்குக் கிடைக்கின்ற சுபச் செய்தி அல்லாஹ்வைக் காண்பது - பார்த்துக் கொண்டிருத்தல் என்பதுமாகும்.

"வலித்தனம்'' என்பது இரண்டு வகையானது. எல்லா முஃமின்களுக்கும் பொதுவானதொன்று. இதனைப்பற்றி அருள் மறை பின்வருமாறு எடுத்துரைக்கின்றது. ''அல்லாஹ் முஃமின்களுக்கு வலியாக இருக்கிறான். இருள்களிலிருந்து பிரகாசத்தின் பால் அவர்களை வெளியாக்குகிறான்'' (குர்ஆன் 2:257) மற்றொன்று, அ(வ்விறை)வனது நல்லடியார்களுக்கு மாத்திரம் சொந்தமானது. அதாவது ஹக்கில் - மெய்ப்பொருளில் அடியான் அழிந்து அ(வ்விறை) வனுடன் நெருங்கி இருப்பதாகும்.

"அவுலியாக்களுள் இரு வகுப்பாருண்டு. ஒரு வகுப்பார் அல்லாஹ்வுடைய பாதையில் கஷ்டப்பட்டுத் தெண்டித்து அவனளவில் தன்னை அழித்து பனாவாகியவர்கள். இவர்களுக்கு " கஸ்பீ" என்று சொல்லப்படும். மற்ற வகுப்பார் ஆலம் அர்வாஹ் எனும் ஆன்மா உலகத்திலேயே அல்லாஹ்வால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். இவர்களுக்கு "அத்தாயீ" என்று கூறப்படும். குத்பு, கௌதுகள் அத்தாயீ வகுப்பைச் சேர்ந்தவர்கள்." (ஆதாரம் : ஜவாஹிருஸ் ஸுலூக்கு)

## 6. அற்புதங்கள் அவுலியாக்களின் அடையாளமா?

இவ்வாறான அவுலியாக்களுக்கு அற்புதச் செயல்கள் அவசியமன்று. ஏனெனில், ''கராமத்தே கௌனிய்யா - பிரபஞ்சத்தைச் சேர்ந்த அற்புதச் செயல்கள்'' முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்தும் வெளிப்படக் கூடியதாகும். ஆனால், இப்பிரபஞ்சத்தில் ''கராமத்தே கல்பிய்யா - இருதய சம்பந்தமான அற்புதங்கள்'', இறைஞானம், வேதாந்த இரகசியறிவு போன்றவை இருக்க வல்லனவாகும். ஆயின் இவ்விருவகையான கராமத்துக்களும் எல்லா அவுலியாக்களிடமும் இணைந்து இருப்பதில்லை. சிலரிடமே இணைந்து இருக்கும். அத்தகையோர்களுக்கு பின்வருவோர்கள் உதாரணமாவார்கள். "செய்துனா முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி (ரஹ்), செய்கு அபூமத்யனில் மகுதிபாய்யி (ரஹ்) அவர்கள்''. (ஆதாரம் : தப்ஸீறுல் ஹமீத் பீதப்ஸீரில் குர்ஆனில் மஜீத் - பாகம் மூன்று)

இவ்விடத்தில் இன்னொரு விடயத்தையும் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளல் வேண்டும். அதாவது முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்தும் அற்புதங்கள் நிகழ்கின்றனவே இதற்கும் முஸ்லிம்கள் குறிப்பிடும் அற்புதங்களை நம்புவதற்கும் இடையில் வேறுபாடு என்ன என்பதேயாகும். பொதுவாக செயல்கள் முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதவர்கள் எனும் இரு

பகுதியினரிடமிருந்தும் புறப்படுவது ஒன்றுபோல் அமைந்தாலும் அடிப்படையில் அவைகள் எல்லாம் ஒரே கூறைக் கொண்டதல்ல. இதனைப் பிரித்துக் காட்டுவதில் முக்கிய இடம் வகிப்பது நம்பிக்கை ஆகும். இதனை வேறு வார்த்தையில் கூறுவதாயின் ஈமான்-விசுவாசம் ஆகும்.

“நபிமார்கள் மூலம் வெளிப்படும் அற்புதங்களுக்கு முஃஜிஸாத் என்றும், அவுலியாக்கள் மூலம் நிகழ்த்தப்படும் அற்புதங்களுக்கு கராமத் என்றும், நல்லாடியார்கள் மூலம் வெளியாகும் அற்புதங்களுக்கு மஊனத் என்றும், முஸ்லிம் அல்லாதவர்களின் மூலம் நிகழும் புதுமைகளுக்கு இஸ்தித்ராஜ், இஹானத் என்று இரு பிரிவுகளாக வெளிப்படும். இப்படி அற்புதச் செயல்கள் ஐவகையாகப் புறப்படும்.” (ஆதாரம்:கஸீதத்துல் புர்தாஹ் மூலமும் உரையும்-மௌலவி என்.எஸ்.என்.முஹம்மது அப்துல் காதிர் (பாகவி))

அல்லாஹ் அற்புதங்களை மேற்கண்ட வழியில் மட்டுமன்றி பின்வரும் கோணத்திலும் வெளிப்படுத்துகின்றான். இவ்விரு வகுப்புக்களையும் வைத்து நோக்கும் போது அல்லாஹ்வின் அற்புதங்கள் ஆறு வகையாக வெளிப்படுவதைக் காணலாம். இரு வேறு பகுப்புக்கள் காணப்படுவதினால் இவ்விடயத்தில் முரண்நிலை என்று எண்ணத் தேவையில்லை என்பதையும் இவ்விரு பிரிப்பு வகைகளையும் ஒப்பு நோக்கும் போதே தெளிவடைய முடியும்.

“அல்லாஹ் தானாக நிகழ்த்தும் அற்புதங்களுக்கு குத்ரத் என்றும் தன்னுடைய தூதர்களை உண்மைப் படுத்தும் முறையில் அவர்கள் மூலமாக நிகழ்த்தும் அற்புதங்களுக்கு முஃஜிஸாத் என்றும், தன் நேசர்களான வலிமார்கள் மூலம் நிகழ்த்தும் அற்புதங்களுக்கு கராமத் என்றும் தன்னை மறுப்பவர்கள் மூலம் நிகழ்த்தும் அற்புதங்களுக்கு இஸ்தித்ராஜ் என்றும் பெயர்கள் கூறப்படுகின்றன.” (ஆதாரம் : இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் பாகம் 04)

“இமாம் அபூஹனீஃபா(ரஹ்) அவர்கள் வலிமார்களுக்கு இறப்பிற்குப் பின் கராமத்துக்கள் நிகழ்வதில்லை என்று கூறியதாக உள்ள செய்திக்கு ஆதாரமில்லை.” (ஆதாரம்: துஹ்ஃபத்துல் ஆலி)

“அவுலியாக்கள் எனப்படுவோர் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களை முற்றிலும் பின்பற்றி, அவர்களது கட்டளைகளைச் செயல்படுத்தி, அவர்கள் விலக்கியவைகளைத் தவிர்ந்து நடப்போராவர். அவர்களுக்கு இறைவன் தனது மலக்குகள் மூலமாகச் சக்தியூட்டுகின்றான். அவனது ஆத்மீகப் பேரொளியை அவர்களது உள்ளத்தில் தோன்றச் செய்கின்றான். “கராமத்” என்னும் அற்புதங்களைக் கொண்டு அவர்களைக் கண்ணியப் படுத்துகின்றான்.” (ஆதாரம் :பதாவா இப்னு தைமிய்யா 11)

“நற்செயல்கள் மூலம் தன்னிடம் மிகவும் நெருக்கத்தைப் பெற்றுவிட்டதால், தனது அன்பைப் பெற்றுவிட்ட அடியானுக்கு கராமத் எனும் அற்புதங்களை நிகழ்த்தும் ஆற்றலை அல்லாஹ் கொடுக்கின்றான். இது அறிவுக்குட்பட்ட ஒன்றே தவிர அப்பாற்பட்டதல்ல.”(ஆதாரம் : தஃப்ஸீர் ராஜி)

“உமர் (றழி) அவர்கள் மதீனாவில் இருந்து கொண்டு நிஹவாந்து எனும் இடத்தில் போர் செய்து கொண்டிருந்த படைத் தளபதி ஸாரியா (ரழி) அவர்களுக்கு (யாஸாரியா அல்ஜபல் என) எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.” (ஆதாரம் : மிஷ்காத்) இறை நேசர்களுக்கு தொலை தூரம், சமீபம் இரண்டும்

ஒன்றுதான் என்பதற்கு இது ஒரு தகுந்த எடுத்துக் காட்டு.

இமாம் இப்னு ஹஜர் (ரழி) அவர்கள் சொல்கிறார்கள் "நபிமார்களுக்கு முஃஜிஸாத்தாக உண்டாகும் எல்லாச் செயல்களும் அவுலியாக்களுக்கு கராமத்தாக உண்டாகலாம் என்பதுதான் முஃதமதான (பலம் வாய்ந்த) சொல்லாகும்." (ஆதாரம் : பாதவா ஹதீஸிய்யா)

"உலகத்தின் அத்தனை இன்பங்களையும் தூசாக மதித்து அல்லாஹ்வின் வணக்கத்தில் தன்னை முழுவதுமாக ஈடுபடச் செய்து வாழ்ந்தவர் மகான் ஜுரைஜ் (ரழி) அவர்கள் தன்னுடைய வணக்க இடத்துக்கு அருகில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ஒரு பெண், இன்னொருவனுடன் கொண்ட தகாத உறவால் ஒரு குழந்தைக்கு தாயானாள். ஆனால் அவள் இப்பழியை ஜுரைஜ் (ரழி) அவர்களின் மீது சுமத்தினாள். இதனைக் கேள்விப்பட்ட மக்கள் ஜுரைஜ் (ரழி) அவர்களை அநியாயமாக தாக்கி அவர்களின் வணக்க இடங்களையும் உடைத்தெறிந்தார்கள். அப்போது ஜுரைஜ் (ரழி) அவர்கள் அந்தப் பச்சிளம் குழந்தையை தன்னிடம் கொண்டுவரச் செய்து, எல்லோரின் முன்னிலையில் அந்த குழந்தையிடம் உன் தந்தை யார்? என்று கேட்டார்கள். உடனே பால்மணம் மாறா அப்பச்சிளம் குழந்தை என் தந்தை ஆடு மேய்க்கும் இடையன் என்று சொல்லிக் காட்டியது." (ஆதாரம் : புகாரீ)

"வலிமார்கள் உயிரோடு இருக்கும் பொழுது மட்டுமல்லாது இறந்ததன் பின்பும் கராமத்துக்கள் நிகழ்வுறலாம். என்பதே அஹ்லுஸ் சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கையாகும்."(ஆதாரம் : இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் பாகம் 03)

இமாம் ரம்லி (ரஹ்) அவர்கள் சொல்லுகிறார்கள் "அவுலியாக்களின் கராமத் அவர்கள் இறந்த பின்பும் அறுந்து விடாது" (ஆதாரம் : பதாவா ரம்லி)

"(இஸ்லாம்) மதச் சட்டங்களுக்கு தகுந்த மேற்கோள் காட்டி எண்பிக்கப் படுவதற்கும் மதப் போதனைகளை நிரூபிக்க வேண்டிய நிலைகளும் உருவானால் மட்டுமே தம் கராமத்தினால் அவற்றை திட்டவட்டமான முறையில் விளக்கி இஸ்லாம் மதத்தை கண்ணியப்படுத்தி காட்டுவார்கள். முஸ்லிம்களுக்கு ஏதேனும் தேவைகள் ஏற்பட்டாலும் கராமத்தைக் கொண்டு அவற்றை பூர்த்தி செய்து கொடுப்பதுமுண்டு. அனுமதியில்லா ஹராமான பாவச் செயல்கள் புரிவதற்குச் சாதகமாக ஒரு வலியுல்லாஹ் கூடத் தம் கராமத்தை பயன்படுத்திக் கொள்ளவில்லை. அவுலியாக்கள் தூய ஈமானினாலும், தீர்க்க பக்தியாலும் அல்லாஹ்விடமிருந்து வெகுமதியாக கராமத்தைப் பெறுகின்றனர்." (ஆதாரம்: வஸீலா தேடுவதின் தெளிவான சட்டங்கள்)

இப்னு தைமிய்யாவின் மேற்படி கூற்றுக்களிலிருந்து கராமத் என்னும் ஓர் அம்சம் இறைநேசர்களுக்கு இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்வதைக் காணலாம். ஆகவே, கராமத் எனும் அம்சம் அவுலியாக்களுக்கு இருக்கின்றது எனும் அஹ்லுஸ் சுன்னத் வல் ஜமாஅத் அறிஞர்களின் ஆதாரத்துக்கு இப்னு தைமிய்யாவும் உடன் படுகின்றார். பொதுவாக அவுலியாக்கள் தங்களிடம் உள்ள அற்புதங்களை தமது அடையாளமாக முன்னிறுத்த முனைவில்லை என்பதே யதார்த்த வரலாறாகும்.

# 7. அவுலியாக்கள் மற்றும் இஸ்லாத்தில் வெறுப்பு

"...இவ்வுலகின் சுகதுக்கங்களை மிகத் துச்சமாக மதிக்கின்றனர். அல்லாஹ்வின் அருளும், சிந்தனையும் அவர்களுடைய இதயங்களை மேவிக் கொண்டிருப்பதால் எத்தகைய பயத்தின் குறியையோ, துக்கத்தின் சாயலையோ இவர்களில் காண முடியாது. இவர்களே தாம் இறைநேசச் செல்வர்களென்னும் அவுலியாக்களாகும்.'' (ஆதாரம் : தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன் ஜுஸ்உ ஹாமீம் - மௌலவி, ஹாபிஸ், ஈ.எம். அப்துர் ரஹ்மான் (நூரிய்யி, பாகவி)

"ஞானதீட்சை பெற்ற மகான்கள் சதாவும் இறைதியானத்தில் இருப்பதன் மூலம் அல்லாஹ்வுடன் நெருங்கிக் கொள்ளும் வஸீலாவைப் பெற்றுக் கொள்கின்றனர். அவர்களது இதயத்தில் அல்லாஹ்வின் ஜோதியைத் தவிர வேறொன்றும் குடிகொள்வதில்லை. இதனால் அவர்களது ஆன்மீக ஞானக்கண் திறந்து சகலவற்றிலும் அவர்களது அன்பான அல்லாஹ்வின் தோற்றத்தையே காண்கின்றனர்.'' (ஆதாரம் : தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன், ஸூரத்துல் மாயிதா - அல்ஹாபிஸ், மௌலவி, பாஸில் ஈ.எம். அப்துர் ரஹ்மான் (பாகவி, நூரிய்யி)

"அவுலியாக்கள் எனப்படுவோர் அல்லாஹ்வின் தாத், ஸிபாத்களென்னும் குணிகுணங்களை தமது இயல்பிற்கேற்ப அறிந்துணர்வதின் மூலம் அல்லாஹ்வைப் புரிந்து கொண்ட ஞானிகளாவர்; அவர்(கள்-அவுலியாக்)கள் முற்றிலும் அல்லாஹ்விற்கு கீழ்ப்படிந்து நடப்பர். தீமைகளிலிருந்து விலகிநிற்பர். இன்பக் கேளிக்கைகளிலும், சரீர இச்சைகளிலும் மூழ்கித் திளைப்பதைப் புறக்கணிப்பர். இவ்வுலகை உதறித்தள்ளிவிட்டு, மறுவுலகின் பால் சிரத்தை காட்டுவர். சதாவும் இறைதியானத்தில் திளைத்திருப்பர்.'' இத்தகைய இறைகாதலர்கள் தாம் அவுலியாக்கள்.'' (ஆதாரம் : இஸ்லாமியக் கொள்கை மணிக் கோவை!)

"அல்லாஹ் தனது நல்லடியார்களுள் ஒருவகையினர் பற்றி திருமறையில் (10:62-64) மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளான். இவர்கள் முகர்ரபூன் (நெருங்கியவர்கள்), அவுலியா(தோழர்கள்) முஹ்லிஸீன் (தூய எண்ணமுடையோர்), முத்தகீன் (பயபக்தியுடையோர்) எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். இத்தகைய பெயர்களுள் பல திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளன." (ஆதாரம்: ஸூபிகள் - பன்னூலாசிரியர் டாக்டர் ஏ.எம்.அபூபக்கர்)

இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் தனது "இஹ்யாவு உலூமுத்தீன்" எனும் நூலில் எழுதுகையில், அவுலியா எனப்படும் இறைநேசர்களின் ஆற்றலைப் பற்றி நான் இன்னும் அறிந்து கொள்ளவில்லை. அவர்(களால்-அவுலியாக்) களால் எது இயலும், எது இயலாது என்பது பற்றியும் நாம் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. அவர்(களிடமிருந்து-அவுலியாக்)களிடமிருந்து வெளிப்பட்ட செய்திகளை மறுக்கும் பகுத்தறிவை விட அறியாமையே சிறந்தது என நான் நினைக்கின்றேன். ஒருவன் வலி என்னும் இறைநேசரின் ஆற்றலை மறுத்தால் அவன் திருத்தூதர்களின் ஆற்றலை மறுத்தவனாகின்றான். இப்படிப்பட்ட மனிதனை இஸ்லாம் தன் எல்லைக்கு அப்பால் தள்ளிவிடுகின்றது" என்று குறிப்பிடுகின்றார். (ஆதாரம்: ஸூபிகள் - பன்னூலாசிரியர் டாக்டர் ஏ.எம்.அபூபக்கர்)

"(நபியே!) உம்முடைய இறைவன் நிழலை எப்படி நீட்டுகின்றான் என்பதை நீர் பார்க்கவில்லையா?......" (குர்ஆன்25:45) இந்த மறை வசனத்தில் இடம் பெறும் "நிழல்" என்பது அவுலியாக்களைக் குறிப்பிடுவதாகும். " என மௌலானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்." (ஆதாரம் மஷ்னவி ஷரீப்)

"அல்லாஹ் எவனுடைய திரையைக் கிழிக்க நாடுகிறானோ அவனுடைய மனதை நல்லடியார்களை அலட்சியப்படுத்திப் பரிகாசிக்கச் செய்வதில் தள்ளுவான்" என்பதாக மௌலானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். (ஆதாரம் : மஷ்னவி ஷரீப்)

"கோபமூட்டப்பட்ட சிங்கம் எதிரியிடமிருந்து பழிக்குப் பழி வாங்குவது போல் என் அவுலியாக்களின் விரோதிகளை நான் பழிவாங்குவேன்" என அல்லாஹ் கூறுகின்றான் எனும் ஹதீஸை இப்னு தைமிய்யாவும் எடுத்துக் காட்டுகின்றார். (ஆதாரம்:இறைநேசச் செல்வர்களும் ஷைத்தானின் தோழர்களும்) அவ்வாறாயின் அல்லாஹ்வின் அவுலியாக்களை வெறுப்பது, மறுப்பது, பிழையாகச் சித்தரிப்பது, தரக்குறைவாக விமர்சிப்பது என்பது மிகவும் தவறான செயற்பாடுகள் என்பது புலப்படக்கூடியதே.

# 8. இறை நெருக்கத்தில் உறைந்தவர்கள்

அல்லாஹ்வின் நேசர்களின் மகத்துவங்களிலிருந்து ஒரு பகுதியினை மேற்கண்ட இறைவாக்குகளும், பூமான் நபி (ஸல்) அவர்களின் நன் மொழிகளும், இஸ்லாமிய அறிஞர்களின் கூற்றுக்களும் சுட்டிக்காட்டுகின்றன. இதிலிருந்து "அல்லாஹ்வின் தோழர்களை தரக் குறைவாகக் கருதி தகாத வார்த்தைகளினால் திட்டித் தீர்க்கும் அறிவு சூன்யங்களின் விமர்சனம் விவேகத்திற்குப் புறம்பானவை" என்பது எளிதில் விளங்குபவை.

அதுமட்டுமன்றி, நாற்றக்கூற்றுகளுக்குப் புறம்பானவர்கள் அவுலியாக்கள் என்பதையும் அவர்களின் அந்தஸ்தின் ஏற்றங்களையும் பின்வரும் சான்றுகளின் அடிப்படையில் நின்று விளங்கிக் கொள்வதே அவர்கள் மீதான நேசத்தை செலுத்துவதை உறுதி செய்யும் எனலாம்.

" எவரேனும் எனது வலியைப் பகைத்தால் நான் (அல்லாஹ்) அவர்களுக்கு எதிராகப் போர் தொடுப்பேன். எனது அடியான் நான் அவனிற்கு விதியாக்கியவைகளைத் தவிர எனக்கு விருப்பமான வேறெதனையும் கொண்டு என்னி(அல்லாஹ்வி)டம் நெருங்கமாட்டான். (அல்லாஹ்வாகிய )நான் அவனை நேசிக்கும் வரை எனது அடியான் நபிலான வணக்கங்களைக் கொண்டு என்னை நெருங்கிக் கொண்டிருக்கின்றான். நான் அவனை நேசித்துவிட்டால்: நான் அவன் கேட்கும் கேள்வியாகவும் அவன் பார்க்கும் பார்வையாகவும் அவன் பற்றும் கரமாகவும் அவன் நடக்கும் பாதமாகவும் நான் ஆகிவிடுவேன். அவ(ன்-இறைநேச)ன் என்னி(டம்-அல்லாஹ்வி)டம் (எதையும்) கேட்டால் அதனையே அவ(னிற்கு-இறைநேச)னிற்கு நிச்சயமாக நான் கொடுப்பேன். அவன் என்னிடம் அபயம் தேடினால் நான் அவனுக்கு நிச்சயம் அபயம் அளிப்பேன்."(அறிவிப்பவர்:அபூஹுரைரா (ரழி) ஆதாரம் : புகாரீ)

இறை நேசர்களைப் பற்றி அறிவிக்கப்பட்டுள்ள ஹதீஸ்களில் இது மிக ஸஹீஹானதாகும். என இப்னு தைமிய்யா குறிப்பிடுகின்றார். (ஆதாரம்: இறை நேசச் செல்வர்களும் ஷைத்தானின் தோழர்களும்-தமிழில் மௌலவி எஸ்.கமாலுத்தீன் (மதனி)

“ஒரு அடியான் என்னைப்பற்றி நினைப்பதற்கேற்ப அவனிடம் நான் நடந்துகொள்வேன். அவன் என்னை நினைவு கூரும் போது நான் அவனுடன் இருப்பேன். அவன் என்னைத் தன் உள்ளத்தில் நினைவுகூர்ந்தால் நானும் அவனை என் உள்ளத்தில் நினைவுகூர்வேன். அவன் ஓர் அவையோர் மத்தியில் என்னை நினைவுகூர்ந்தால் அவர்களை விடச் சிறந்த ஓர் அவையோரிடம் அவனை நான் நினைவுகூர்வேன். அவன் ஒரு சாண் அளவுக்கு என்னை நெருங்கினால் நான் ஒரு முழம் அளவுக்கு அவனை நெருங்குவேன். அவன் ஒரு முழம் அளவுக்கு என்னை நெருங்கினால், நான் ஒரு பாகம் அளவுக்கு அவனை நெருங்குவேன். அவன் என்னை நோக்கி நடந்துவந்தால் நான் அவனை நோக்கி ஓடிச்செல்வேன்.” (அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) ஆதாரம் : புகாரீ, முஸ்லிம்)

மேற்படி ஹதீஸ்கள் அவுலியாக்களின் இறைநெருக்கத்தை நமக்கு எடுத்தியம்புகின்றது. மேலும், அல்லாஹ்வின் நண்பர்களின் மகிமைகளிலும்,ஆற்றல்களிலும் ஒரு பகுதியையும் இனங்காட்டுகின்றது. பின்வரும் ஹதீஸ் குத்ஸி வகையைச் சேர்ந்த நபி மொழி அவுலியாக்களின் இனனொரு மகத்துவப்பக்கத்தை விவரித்துப் பகிரங்கப்படுத்துகிறது.

“எனது அவுலியாக்கள் எனது பரிவட்டத்திற்குள் இருக்கின்றார்கள். என்னை(யன்றி-இறைவனை)யன்றி எவரும்(அவர்களின் அகமியங்களைப் பூரணமாக)அறிய மாட்டார்கள்.”

“விளக்கின் மீது காதலுற்று அதில் தன்னை அழித்துக் கொள்ளும் விட்டில் பூச்சி போன்றுதான் இறைநேசச் செல்வர்கள். தங்களை இறை காதலில் அழித்து ஃபனா நிலையை எய்தப் பெறுகின்றனர்.” (ஆதாரம் :இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் பாகம் 04)

அல்லாஹ்வோடு மிகவும் நெருங்கிய பந்தத்தை அவுலியாக்கள் ஏற்படுத்திக் கொள்ளும் ஆற்றலை இயல்பை அல்லாஹ் அவுலியாக்களுக்கு வழங்கியுள்ளான். இதனால் அவர்கள் அல்லாஹ்வின் நேசர்களாக மாறி அவனோடு நெருங்கியிருப்பதில் நாம் வியப்புறுவதற்கும், ஆட்சேபிப்பதற்கும் எதுவும் இல்லை.

அல்லாஹ்வின் பேரரசில் நுபுவ்வத்து நபித்துவம் என்பது அரச பதவியாகும் விலாயத்-அவுலியாக்களின் அதிகார நிலை என்பது அமைச்சர் பதவியாகும். எனக்கூறப்படுவதுண்டு. இது இலகுவாக விளங்கிக் கொள்வதற்கு உதாரணரீதியான பதவி விபரமாகும். “அல்லாஹ்வின் ஆட்சியில் கூட்டாளிகள் இல்லை” என்ற கோட்பாட்டுச் சிந்தனைக்கு எதிரானதல்ல மேற்படி பதவி உதாரணம் என்பது நிதானமாகச் சிந்திக்கும் எவரும் எளிதில் விளங்கிக் கொள்ளலாம்.

## 9. அவுலியாக்கள் நம்போன்றவர்களல்ல!

இப்படிப் பலவகையிலும் பேராற்றலுக்குரிய இறை நேசச் செல்வர்களின் குணஇயல்புகளும் நடத்தைப் பண்புகளும் அவர்களின் மேன்மை அந்தஸ்துக்களும் நமக்குச் சமமாக இல்லை என்பது மிகத் தெளிவானது. சாதாரணத் தன்மையில் வாழும் நம்மோடு இறை நெருக்கத்தில் உறைந்து இறை திருப்தியிலும் இறையன்பிலும் சதா நிலைத்து வாழும் அவுலியாக்களை இணைத்தலாகாது.

அவுலியாக்கள் மனித வர்க்கத்திலிருந்து வந்தவர்கள் என்ற வகையில் மனித உருவத் தோற்றத்தில் மனித வர்க்கத்தில் நாமும் அவர்களைப் போன்றவர்களே. ஆனால், அல்லாஹ்விடம் அவர்(களுக்கு-அவுலியாக்)களுக்கு இருக்கும் கண்ணியம், உயர்வு போன்ற உயர்ச்சித் தன்மைகள் சாதாரணமான மனிதர் எவருக்கும் இல்லாதவைகளாகும்.

நம்மைப் போன்று சாதாரணமான மனிதர்களே அவுலியாக்கள் என ஓலமிடுவோர்கள் திட்டமாக அறிவு மட்டமானவர்களாகவும், சிந்தனை பூர்வமாகச் சிந்திக்கத் தெரியாதவர்களாகவும் இருப்பார்கள் என்பது துலம்பரமானது. விரிந்த அறிவோடும் பரந்த நோக்கோடும் குறுகிய மனோ நிலைகளைக் களைந்தவர்களாகவும் நடுநிலைச் சிந்தனையோடும் அவுலியாக்களைப் பற்றி ஆராய்ந்து கொள்ளும் எவரும் அவுலியாக்களின் மேன்மைகளை நிராகரிக்கத் துணியமாட்டார்கள். மற்றும் எம்மைப் போன்றவர்கள் அவர்கள் என்றும் கூறிக் கொள்ளவும் மாட்டார்கள்.

அல்லாஹ்வின் அவுலியாக்களின் அழகுகூறும் அரிய வாழ்வு பற்றிய அறிவும் நேர்மையான சிந்தனைகளும், ஒருவகையான அனுபவபூர்வமான உள்ளுணர்வு அறிவோடும் அவுலியாக்களைப் பற்றி ஆராயும் நெஞ்சங் களுக்குத்தான் அவுலியாக்களின் பேரின்ப நிலை வெளிச்சமாகும். மாறாக பிடிவாதத்துடன் நோக்குவோர்கள் உண்மைகளை அறிந்து கொள்ளப் போவதில்லை என்பது ஒரு வகை யாதார்த்தமாகும்.

## 10. இறை நேசர்கள் இறப்பதில்லை

அவுலியாக்கள் தங்களின் மரணத்தின் பின்னரும் இவ்வுலகில் உயிருடன் வாழ்ந்த காலத்தில் இருந்த நிலையில்தான் இருக்கின்றார்களா? அவர்களின் மூலம் நாம் பிரயோசனங்கள் பெற்றுக் கொள்ளலாமா? போன்ற வினாக்கள் இன்று விடை தேடிக் கொண்டிருக்கின்றன. ஆகவே இது பற்றி உண்மை நிலை என்ன? என்று நாம் அறிந்து கொள்வதாயின் இது பற்றி விரிவான தேடல் முயற்சியில் இறங்கும் போதுதான் கண்டறியலாம். இதன் மூலமே அவுலியாக்கள் பற்றிய தவறான கருத்துக்களிலிருந்து விடுபட்டுக் கொள்ளலாம்.

அவுலியாக்களின் அகமியங்களைப் பற்றி ஓரளவு - அடிப்படைத் தெளிவுகளைப் பெற்றிருப்போர்கள்தான் அவுலியாக்களின் அருட்களில் தங்களை இணைத்து இன்பம் எய்திடலாம். இதற்கு மாற்றமானவர்கள் திட்டமாக ஈருலகிலும் இழிவான வாழ்வைப் பெறுவார்களென்பது திண்ணமான ஒன்றேயாகும்.

“அல்லாஹ்வுடைய அவுலியாக்கள் நிச்சயமாக மரணிப்பதில்லை. ஆனால், ஓர் இல்லத்திலிருந்து இன்னொரு இல்லத்திற்குச் செல்கிறார்கள்.” (ஆதாரம்: தஃப்ஸீர் கபீர்-இமாம் பக்ருத்தீன் ராஜீ (ரஹ்) பாகம்03, அர்பயீன் ஹதீஸ்-இமாம் கஸ்ஸாலி (ரஹ்)

இந்த இடத்தில் சிலரின் வாதம் இப்படியும் இருக்கின்றது. அதாவது, “அவுலியாக்கள் மட்டும் அல்ல, உலகில் மரணிக்கும் எல்லோரும்தான் அல்லாஹ்விடம் உயிருடன் இருக்கின்றனர். ஆயின் அவுலியாக்களுக்கு மட்டுமான ஒன்றல்ல இந்த நிலை. எனின், அவுலியாக்கள் உயிருடன் இருக்கின்றனர்” என வேறுபடுத்திக் கூறுவது சரியல்ல” என்கின்றனர்.

இந்த வாதம் - கருத்து சரியானதல்ல. ஏனெனில் அவ்வாறு எல்லோரும் மரணித்ததன் பின்னர் உயிருடன் வாழ்வதில் சந்தேகமில்லை. இந்நிலையில் வேறுபாடுகள் இல்லையாயின், ஷஹீதானவர்கள் அல்லாஹ்விடம் உயிருடன் இருக்கின்றனரென குர்ஆன் சுட்டுவதும் நபிமார்களின் உடலைக் கூட மண் தீண்டாதென ஹதீஸ்கள் வேறுபடுத்திக் கூறுவதும் அவசியமற்றதாகிவிடும்.

குறிப்பிட்ட பகுதியினர்களை குறிப்பாக்கி இஸ்லாமிய மூலாதாரங்கள் கோடிட்டுக் காட்டுவதிலிருந்து, “மரணத்தின் பின்னர் உயிர்வாழும் தன்மையில் வேறுபாடுகள் உண்டு” என்பதை எளிதாக விளங்கிக் கொள்ள முடியும். அதுமட்டுமன்றி, இதுவிடயத்தில் அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தினர்களின் வாதம் கூற்றுக்களே மிகச் சரியானதென்பதற்குப் பின்வரும் இஸ்லாமிய மூலாதாரங்களின் முன்வைப்புக்கள் வலுவான ஆதாரமாக அமைவதையும் அவதானிக்கலாம்.

உண்மையில் அவுலியாக்கள் மரணிப்பதில்லை. எனினும் மனிதர்களுடைய வெளிரங்கமான பார்வைகளை விட்டும் மறைகின்றார்கள் தவிர வேறில்லை. அவர்களை(யும்-அவுலியாக்களை)யும் (உலக-இம்மையின் நடப்பியல்களுக்கு ஏற்ப) மரணித்தவர்களென்று காட்டுவதற்காகும். அல்லாமல் வேறில்லை. யதார்த்தத்தில் மரணித்தவர்களல்ல. “இறப்பு என்பது அழிவுக்குரியதன்று, சில படித்தரங்களைக் கொண்ட ஜடதத்துவ மாறுதலாகும்.” “அதாவது ஒரு நிலையிலிருந்து மறு நிலைக்கு முன்னேறிச் செல்வதாகும். என்ற பொதுவான ஒரு கருத்தும் இவ்விடத்தில் நாம் மனங் கொள்ளத்தக்கதாகும்.

“நபிமார்களுடைய உடல்களை (மண்) திண்பதை அல்லாஹ் நிச்சயமாக பூமிக்கு ஹராமாக்கி (தடுத்து) விட்டான்” என நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் நவின்றார்கள். (அறிவிப்பவர்: அவ்ஸ் (ரழி) ஆதாரம்: அபூதாவூத் நஸாஈ, தாரமீ, இப்னுமாஜா, பைஹகீ)

இக்கருத்தை வலியுறுத்திக் கூறுவதில் பின்வரும் அருள் மறை வசனங்களும் பங்கு பெறுகின்றதென்பதை விதாண்டாவாதங்களுக்கு அப்பால், விவேகத்துடன் நோக்கின் விளக்கம் பெறுவது கடினமான ஒன்றல்ல.

“அல்லாஹ்வுடைய பாதையில் (தன்மனோவிச்சையைத் துறந்து அவ்விறைவனுக்கு இணக்கமானதை விரும்பும் மனோ வலிமையுடன்) மரணித்தவர்களை மரணித்தவர்கள் என்று (நீங்கள்) கூறாதீர்கள். எனினும் அவர்கள் உயிர் உள்ளவர்கள். ஆனால் நீங்கள் (அவர்களின் நிலையை) உணர்ந்து கொள்ளமாட்டீர்கள்” (குர்ஆன் 2:154)

"அல்லாஹ்வுடைய பாதையில் (தன் மனோவிச்சையை அடக்கித் தன் நப்ஸுடன் போராடி வெற்றிகண்டு) மரணித்தவர்களை மரணித்தவர்களென்று நினைக்கவும் வேண்டாம். ஆனால், அவர்கள் உயிருள்ளவர்கள். அல்லாஹ்விடமிருந்து உணவு கொடுக்கப்படுகின்றார்கள். ஆனந்தமாக இருக்கின்றார்கள்." (குர்ஆன் 3:169)

## 11. நப்ஸுப் போராட்டம் ஜிஹாத் ஆகுமா?

இது போன்ற உயர் அந்தஸ்து, மனதுடன் போராடி வெற்றி கண்ட இறைநேசச் செல்வர்களுக்கும் கிடைக்கலாம். (குர்ஆன் 2:154ஆம்) வசனத்தில் ஷுஹதாக் களை மட்டும் அல்லாஹ் குறிப்பிட்டு இருப்பது அவர்களுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

"அல்லாஹ்வின் பாதையில் உயிர் நீத்தவர்கள் உயிருடன் இருப்பதை நீங்கள் உணரமாட்டீர்கள்" என அல்லாஹ் இங்கே கூறுகின்றான். அதாவது அவர்கள் உயிரோடு இருப்பதை நம் புலன்களால் உணர முடியாது. அறிவால் சிந்தித்து அறியலாம்." (ஆதாரம் : தஃப்ஸீர் ஜவாஹிருள் குர்ஆன்-பாகம் 01)

"அல்லாஹ்வின் பாதையில் மரணித்தோர்கள் உயிரோடு இருப்போரை விட மேலான தகுதியைப் பெற்றிருக்கின்றார்கள். உன்னதமாக வாழ்ந்தும் கொண்டுமிருக்கின்றார்கள். அது உங்கள் புறக்கண்களுக்குப் புலப்படாது. ஏனெனில் அது பற்றி நீங்கள் அறியமாட்டீர்கள் (-அறிவால் சிந்தித்து உணரலாம்) என்று அல்லாஹ் சுட்டிக்காட்டுகின்றான்." (ஆதாரம்: தஃப்ஸீர் காஸின்)

மேற்படி அருள்மறை வசனங்களில் "கத்லூ, ஷபீல்" எனும் இரு சொற்கள் இடம் பெற்றுள்ளன. இவ்விரு சொற்களும் யுத்தத்தில் மரணித்தவர்களையே சுட்டுமென்று கூறிவிடல் முடியாது. ஏனெனில் மொழியின் அடிப்படையிலிருந்து பெறுகின்ற கருத்துக்களிலிருந்தும் பகைவர்களுடன் போரிடுவதையும் நப்ஸுடன் புரிகின்ற யுத்தத்தையும் இணைத்து ஒப்பீட்டளவில் நபி (ஸல்) அவர்கள் "ஒன்றென்ற" கருத்தை வெளிப்படுத்தியிருப்பதில் இருந்தும் பெறக்கூடியதாக உள்ளது.

"கத்லூ" என்ற அரபுச் சொல்லிற்கு "மரணித்தல், வெட்டப்படுதல், கொல்லப்படுதல்" போன்ற கருத்துக்களும் "ஷபீல்" எனும் சொல்லிற்கு "வழிப்படுதல், யாத்திரை" போன்ற கருத்துக்களும் உண்டு. எனவே மொழியறிவின் அடிப்படையில் "ஜிஹாத் என்பது பகைவர்களுடன் போராடுவத மட்டுமல்ல" வென்பது துலம்பரமாகின்றது.

அல்லாஹ்வின் அவுலியாக்கள் என்பவர்கள் அ(வ்விறை)வனளவில் மிடுதல் - நெருக்கம் பெற்றவர்களாகும். அப்படியானால் அல்லாஹ் காட்டியருளிய செவ்வை நெறியில் வழிபிறழாது தங்கள் நப்ஸை வழிபடச் செய்தவர்களாகவே இருப்பார்கள் என்பது திண்ணமாகும். இப்பண்புள்ளவர்களையே "இறைநேசச் செல்வர்கள்" என இஸ்லாம் அறிமுகஞ்செய்கின்றது.

ஆகவே மேற்காட்டிய அருள்மறை வசனங்கள் அவுலியாக்களையும்

உள்ளடக்கும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வசனங்கள் இறங்கிய காரணங்களை மாத்திரம் கருத்திற் கொண்டு, பகைவர்களுடன் ஏற்படும் போரில் மரணித்தவர்களை மட்டுமே தொட்டுச் செல்லும் என வாதஞ் செய்யத் துணியலாம்.

இவ்வாறு வாதிட்டால் அது அவர்களின் சிந்தனைத் தடுமாற்றத்தையும், விரிவான விளக்கம் இல்லாமையையுமே ஒப்புவிக்கும் என்பது மிகையான கூற்றல்ல. உண்மையில் இவ்வசனங்களின் கருத்தில் அவுலியாக்களும் அடக்கம் பெறுவார்களென்பதை பின்வரும் ஆதாரங்கள் ஆணித்தரமாக அறைகின்றன.

“நீங்கள் ஜிஹாது செய்யுங்கள்” (குர்ஆன் 5:35) என்ற வாக்கியத்திலுள்ள ஜிஹாத் இரண்டு வகை. புறத்திலுள்ள பகைவர்களை எதிர்த்து யுத்தஞ் செய்வது ஒரு வகை. அகத்திலுள்ள பகைவர்களாகிய மிருக உணர்ச்சிகளை எதிர்த்து யுத்தம் செய்வது மற்றொரு வகை.” (ஆதாரம் : தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத் பாகம் 02)

“யார் எங்களுடைய வழியில் ஜிஹாத் செய்கிறார்களோ நிச்சயமாக நாம் அவர்களுக்கு எங்களுடைய பல வழிகளைக் காட்டிக் கொடுப்போம்” (குர்ஆன் 29:69) இந்த ஆயத்து புனிதப் போர் கடமையாக்கப்படுவதற்கு முன்னால் மக்காவில் இறங்கிய வசனம். எனவே “இதில் ஜிஹாத் செய்வது என்பது நப்ஸுடன் ஜிஹாத் செய்வதாகும்” என அதிகமான குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறியிருக்கிறார்கள்.

“நப்ஸுடன் ஜிஹாத் செய்வதென்றால் மனோ இச்சைக்கு மாற்றம் செய்வதாகும்” என ஹஸனுல் பஸரி (ரஹ்) அவர்கள் கூறியிருக்கிறார்கள் (ஆதாரம்: ஹாஷியத்துஸ்ஸாவி பாகம் 03)

ஜிஹாத் என்பது பல வகைப்படும். அவற்றின் கோணங்களில் பின்வரும் நான்கு வழிமுறைமைகளும் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. அவையாவன, (1) ஜிஹாதுன் நப்ஸ் (நப்ஸுடன் செய்யும் ஜிஹாத்) (2) ஜிஹாதுஸ் ஷைத்தான் (ஷைத்தானுடன் செய்யும் ஜிஹாத்) (3) ஜிஹாதுல் குப்பார் (காபிர்களுடன் செய்யும் ஜிஹாத்) (4) ஜிஹாதுல் முனாபிக்கீன் (நயவஞ்சகர்களுடன் செய்யும் ஜிஹாத்) என்பனவாகும்.

“நபியே! நீங்கள் நிராகரிப்பாளர்களோடும், முனாபிக்குகளோடும் ஜிஹாத் செய்யுங்கள்...” (குர்ஆன் 66:9) எதிரிகளை அழிப்பதே அதன் இலக்கன்று. எதிர்ப்பை அழிப்பதையே ஜிஹாதின் இலக்கு என்பதுவும் இங்கு தெளிவாகின்றது. இந்த வகையில் உள்ளேயும், வெளியேயும் காணப்படும் எதிரிகளோடு முழுமையான சக்திகளையும் பிரயோகித்துப் போராடலே ஜிஹாத் என்பது தெளிவாகின்றது.

“அல்லாஹ்வின் நல்லடியார்களான அவுலியாக்கள் தங்களின் உலகார்ந்த இச்சை எல்லாம் அடக்கி ஒடுக்கி, வல்லமை பொருந்திய அல்லாஹ்வின் பேரின்பம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அல்லும், பகலும் நப்ஸுடன் (ஜிஹாது) யுத்தம் புரிந்து அ(வ்விறை)வனது அருளே தஞ்சம் எனக் கிடந்ததாலும் அவர்களுக்கும் ஷுஹதாக்களின் அந்தஸ்து கொடுக்கப்படும்.” (ஆதாரம்: தஃப்ஸீருல் கபீர் - இமாம் பக்ரூத்தீன் ராஜீ (ரஹ்)

“முஷ்ரிக்குகளுடன் யுத்தஞ் செய்து வெட்டப்பட்டு ஷஹிதானா(லும்-மரணித்தா)லும் சரி, தம்முடைய நப்ஸுடன் ஆத்மார்த்தப் போர் செய்து அதை வெட்டி வீழ்த்தினாலும் சரி இவையிரண்டும் பீஸபீல் (தான்-அல்லாஹ்வின் பாதை)தான்.” என இமாம் முஹ்யித்தீன் இப்னு அறபி(ரஹ்) கூறுகின்றார்கள்.

முன்னர் கண்ட அருள் மறை வசனங்கள் தொடர்பில் கருத்துக்களை முன்வைக்கும் போதே மேற்கண்டவாறு பேரறிஞர் முஹ்யித்தீன் இப்னு அறபி (ரழி) அவர்கள் தெரிவித்தார்கள். இக்கருத்தை ஒட்டிய பின்வரும் தப்ஸீர்களின் ஆசிரியர்களும் தங்கள் கருத்தை வெளிப்படுத்துகின்றனர். தப்ஸீர்களான “ரூஹுல் பயான், அறாயிஸுல் பயான், ஹுஸைன், அஸீஸீ” போன்றவைகளாகும்.

“அல்லாஹ்விற்காக அ(வ்விறை)வனது பாதையில் சதாவும் மார்க்கச் சேவை செய்து மரித்தோருக்கும் இதேயே பலன் உண்டு... திரிகரண சுத்தியுடன் உலக ஆதாயம் எதனையும் எதிர்பார்க்காமல் அல்லாஹ்வின் திருவுளப் பொருத்தத்தை நாடி, அ(வ்விறை)வனுக்காகத் தொண்டு செய்து மரித்தோரையே இக்கருத்து குறிப்பிடுகின்றது.” (ஆதாரம்: தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன்-ஸூரத்து பகரா)

மேற்காட்டிய இறைமறை 2:154, 3:169 வசனங்கள் இரண்டினதும் கருத்துக்களில் அல்லாஹ்வின் அவுலியாக்களும் அடக்கம் பெறுவார்கள் என்பதை பின்வரும் நபிமொழிகள் மிகத் தெளிவாகச் சுட்டுவதாகக் கொள்ளமுடியும்.

“தபூக் யுத்தம் வெற்றி பெற்று ஜெயப் பேரிகையுடன் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களும், ஸஹாபாக்களும் மதீனா நகருக்குள் நுழைந்த போது, ஹசிறிய போரிலிருந்து பெரிய போரளவில் மீண்டுள்ளோம்” என்று கூறினார்கள். உடனே ஸஹாபாக்கள், ஹயாரஸூலல்லாஹ்! இப்போதுதான் அல்லாஹ்வின் பாதை(யிலிருந்து-யுத்தத்தி)லிருந்து திரும்பினோம். இதனை விட பெரிய அல்லாஹ்வின் பாதையாது’ என்று வினாவ, நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹநமது நப்ஸுடன் போராடுவதுதான் (அல்லாஹ்வின் பாதையில் )பெரிய போராட்டம் - யுத்தம்” என்று விடை பகர்ந்தார்கள்.” (ஆதாரம்: பைஹகீ)

“அல்லாஹ்விற்கு வழிப்பட்டுத் தன்னுடைய நப்ஸுடன் போர் புரிபவர் எவரோ அவரே வீரர்.” (ஆதாரம்: மிஷ்காத்)

“உண்மையாகவே ஒரு மனிதன் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து மனிதர்களில் மிகச் சிறந்தோர் எவர் என்று கேட்டார்.(அதற்கவர்கள்) தமது ஆன்மா (நப்ஸு) வையும், பணம் (பொருள்) காசுகளையும் (பீஸபீலில்லாஹ்) அல்லாஹ்வின் வழியிலே (செலவு செய்வதற்காகப்) போர் புரிபவன் என்றார்கள்.” (அறிவிப்பவர்: அபூ ஸயீயிதுல் குத்ரிய்யி (ரழி) ஆதாரம்: முஸ்லிம்)

“யார் அல்லாஹ்வுக்கு கீழ் படிவதில் தன் மனத்தோடு போராடுகின்றாரோ அவரே இறை வழியில் போராடுபவர்...” (அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) ஆதாரம் : திர்மிதி, நஸாஈ)

“போர் என்பது சண்டையிடுவது மட்டுமல்ல. எல்லா வகையான தியாகங்களையும் அல்லாஹ்விற்காகச் செய்வதற்குச்சித்தமாக இருக்க

வேண்டுமென்பதாகும். அல்லாஹ்வின் விரோதிகளுடன் போரிட்டு அ(வ்விறை)வனால் வழங்கப்பட்ட மார்க்கத்தை காப்பாற்றுவதாக இருந்தாலும் சரி, அல்லது தனது கொடிய விரோதிகளான மனத்துடனும், ஷைத்தானுடனும் போரிட்டு மனத் தெளிவு பெறுவதாயினும் சரி இரண்டும் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவதாகவே ஆகும்." (ஆதாரம்: தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன்-ஸூரத்துல் மாயிதா)

## 12. ஆறு மாதங்களாகியும் அழியாத உடல்

ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் தன் தந்தையைப் பற்றி அறிவிக்கின்றார்கள். "உஹது யுத்தத்தின் போது என் தந்தை என்னை அழைத்து, ஹஉஹது யுத்தத்தில் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் தோழர்களில் வெட்டப்படுபவர்(களில்-ஷஹிது) களில் முதன்மையானவர்களில் நானும் வெட்ட(ப்- ஷகிது ஆக்க)ப் படுவதாக எண்ணுகிறேன். ஆகையால் நீ என்மீதுள்ள கடன்களை நிறைவேற்றி விடு. நீ உன் சகோதரிகளிடம் நல்லதைக் கூறு' என்று கூறினார்கள்.

மறு நாள் உஹது யுத்தத்தில் என் தந்தை முதன்மையாக வெட்டப்பட்ட வர்களில் இருந்தார். அவரை மற்ற(ஷகிது) ஒருவருடன் சேர்த்து அடக்கஞ் செய்துவிட்டேன். மற்றவருடன் என் தந்தையை அடக்கம் செய்தது என் மனதுக்கு நல்லதாகப் படவில்லை. ஆகையால் ஆறுமாதங்களுக்குப் பின் கப்ரைத் தோண்டி என்தந்தையை வெளியாக்கினேன். என்தந்தையின் உடல் (ஆறு மாதங்களுக்கு முன்) அடக்கஞ் செய்த போது இருந்தது போன்று (எவ்வித மாற்றமுமின்றி) இருந்தது... என் தந்தையைத் தனியாக அடக்கஞ்செய்தேன்." (ஆதாரம்: புகாரீ)

## 13. நாற்பத்தியாறு வருடங்களாகியும் அழியாத உடல்

"நபித்தோழர்களான அப்துல்லாஹ் பின் அம்ரு (ரழி), அம்ரு பின் ஜமூஹ் (ரழி) ஆகிய இருவரும் அன்ஸாரி(கள்-மதீனாவாசி)கள் ஆவர். நீரோடைக்கருகில் இருந்த இவ்விருவரின் கப்ருகளை-அடக்கஸ்தலங்களை வெள்ளம் அரித்துவிட்டது. இருவரின் உடல்களையும் வேறொரு இடத்தில் அடக்கம் செய்வதற்காக கப்ரைத் தோண்டிய போது, சிறிதும் சிதையாமல் உடல்கள் அப்படியே இருந்தன.

இருவரில் ஒருவருக்கு காயம் ஏற்பட்டு, அக்காயத்தின் மீது தன்கையை வைத்த நிலையில் அவர் உயிர் நீத்திருந்தார். அவ்வாறே அடக்கமும் செய்யப் பட்டிருந்தார். இப்போது மீண்டும் கப்ரைத் தோண்டிய போது, அந்தக் கையை எடுத்துவிட்ட போதும், காயத்தின் மீதே திரும்பவும் அவர் கையை வைத்துக் கொண்டார். அடக்கம் செய்யப்பட்டதற்கும் தோண்டி எடுக்கப்பட்டதற்கும் இடையே நாற்பத்தியாறு ஆண்டுகள் கழிந்திருந்தன." (ஆதாரம்: முஅத்தா)

## 14. மரணத்தின் பின்னரும் சிலரின் உடல் அழியாது

அல்லாஹ்வின் நல்லடியார்களின் உடல்கள் அவர்களின் மரணத்தின்

பின்னரும் அழியாது கப்ரில் இருக்குமென்பதற்கும், கப்ருக்கு புறம்பாகவும் மரணத்தின் பின்னர் உடல் கெட்டுவிடாதும், சிதைந்து விடாதும் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கும் போதிய ஆதாரங்கள் உண்டு. அவற்றின் சிறிய பகுதியை இவ்விடத்தில் எடுத்து நோக்குவோம்.

"அல்லது ஒரு கிராமத்தின் பக்கம் நடந்து சென்றவரை (நீர் காணவில்லையா?..) அவரை (உஜைரை) அல்லாஹ் நூறாண்டு காலம் மரணிக்கச் செய்தான். பின்னர் அவரை (உயிர் கொடுத்து) எழுப்பினான்....." (குர்ஆன் 2:259)

"நாம் அவர்(சுலைமான் நபி)மீது மரணத்தை விதியாக்கிய பொழுது, அவருடைய மரணத்தைப் பற்றி (அவர் சாய்ந்திருந்த) அவருடைய தடியை அரித்துவிட்ட கறையானைத் தவிர (வேறெதுவும்) அவர்களுக்கு அறிவிக்கவில்லை. (குர்ஆன் 34:14)

"மூஸா நபி தம் கப்ரை விட்டு வெளியே வந்து சிவந்த மண்மேட்டுக்கருகில் நின்று தொழுது கொண்டிருந்தனர்" (ஆதாரம் : நஸாஈ, முஸ்லிம்)

"அவுலியாக்கள் மரணமாகி மண்ணோடு மண்ணாகி விடுவதில்லை. உடல்களும் சிதைவதில்லை. உயிரோடு இருந்தது போல நிர்ணயத்திற்குப் பிறகும் கப்ரில் (பர்ஜகில்) அப்படியே உடல் கோர்வைக் குலையாதிருப்பார்கள். அவர்களுடைய உடல்களை மண் தின்னாது அல்லாஹ் ஹராமாக்கி விடுகின்றான்." (ஆதாரம் : மிர்ஆத்துல் முஷாஹிதீன்)

"உமர் (ரழி) அவர்களது ஆட்சிக்காலத்தில் துஸ்தர் கோட்டை பிடிபட்டது. அங்கு ஹுர்முஜானுடைய இல்லத்தில் தானியால் (அலை) அவர்களது உடல் அழியாமல் வைக்கப்பட்டிருந்த பெட்டகம் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த உடலில் உள்ள நரம்புகள் எல்லாம் இரத்த ஓட்டமுள்ளதாய் இருந்ததுடன் அந்த சங்கையான சடலம் பல நூற்றாண்டுகளாக எவ்வித பேதமுமின்றி அப்படியே இருந்தது."
(ஆதாரம் அல்பிதாயா வன்னிஹாயா பாகம் 02)

"குத்புஷ் ஷஹீர், ஷைகு முஹம்மது இப்னு சுலைமானுல் ஜஸூலிஷ் ஷாதுலீ (றஹ்) அவர்கள் ஹிஜ்ரி 870இல் மரணித்து, சூயஸ் பட்டணத்தில் அடக்கப்பட்டார்கள். 77 வருடங்களுக்குப் பிறகு ஹிஜ்ரி 947 இல் அவர்களது கப்ரு தோண்டப்பட்டது. அவர்களது உடல் (கபன்) அடக்கம் செய்யப்பட்ட சமயம் எவ்வாறு இருந்ததோ அவ்வாறே உறுப்பில் எத்தகைய சேதமும் மாறுபாடுமின்றி கபன் துணியில் கூட மண் ஒட்டாமல் இருந்தது அந்தத் திரேகம் கஸ்தூரி வாடையுடன் கமழ்ந்துகொண்டிருந்ததை கண்னுற்ற திரளான ஜனங்கள் பேராட்சரியப்பட்டு மயங்கி நின்றனர்.

மேலே குறிப்பிட்ட சம்பவத்தின் போது அக்கூட்டத்தில் சிலர் சோதிப்பதற்கென்றே வசீகரத்துடன் ஜோதிப் பிரகாசமாக இலங்கிக் கொண்டிருந்த அந்த வலியுல்லாஹ் அவர்களுடைய முகத்தில் விரலை வைத்து அமுத்திப் பார்த்தனர் விரல் பட்ட இடத்தைச் சூழ்ந்து செந்நிறமாக இரத்தத்தின் அறிகுறி காணப்பட்டது. விரலை எடுத்தும் அந்த உதிரக் கட்டு உடலில் பரவி மறைந்தது. பின்னர் அவர்களது உடலை ஆபிரிக்காவிலுள்ள மொரக்கோவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டது (வழிகாட்டும் வலிமார்கள்)

“அல்லாஹ்வின் பாதையில் ஃபனாவைக் கொண்டு ஜிஹாதே அக்பர் செய்பவர்களில் நின்றும் அல்லாஹ்வின் ஜலால் என்னும் வாளைக் கொண்டு வெட்டப்பட்டு அல்லாஹ்விலேயே அழிபவர்களை மரணித்தவர்கள் என்று நினைக்கக்கூடாது. ஏனெனில், அவர்களது வெளித்தோற்றத்தின் தன்மைகள் அழிந்து போனாலும் அவர்களை உண்டாக்கியவனின் உஜூதைக் கொண்டு அவர்கள் ஹயாத்தாக இருக்கிறார்கள்.” (ஆதாரம்: தாவீலதுன் னஜ்மிய்யா - இமாம் கஸ்ஸாலி (ரஹ்)

“வலிமார்கள் தங்களின் நினைவை ஒடுக்கி இறைவனில் அழிந்து விடுவதால் அவர்களை மரணித்தவர்களென்று கூறவேண்டாம்” (ஆதாரம் : மஷ்னவி ஷரீப் - மௌலானா ரூமி (ரஹ்)

ஆகவே அவுலியாக்கள் இம்மையை விட்டு மறைவதற்கு முன்னர் உயிருடன் இருந்தார்களே அதனைவிட சிறப்பாகவும், மாற்றமான முறையிலும் பல விஷேடத் தன்மையுடனும் அல்லாஹ்விடம் உயிரோடு இருக்கின்றனர் என்பது மிகத் தெளிவான சங்கதியாகும். அதுமட்டுமன்றி அவுலியாக்கள் இவ்வகிலத்தை விட்டு மறைந்ததும் உயிரற்றுப் போய் விடுகின்றார்கள் என்று நினைப்பது, கூறுவது கூடாதென்பது அல்குர்ஆனின் அறப் போதனையாகும்.

ஆதலால், நாமும் அ(வ்விறை)வனது இறைநேசச் செல்வர்களை மரணித்தவர்களென்று கூறாதிருப்பதுதான் ஏற்றமானதும், மிகச் சரியானதுமாகும். இதுவே அஹ்லுஸ் சுன்னத் வல் ஜமாஅத்தினர்களின் அடிப்படைக் கொள்கையுமாகும். இதற்கு மாறாகச் சிந்திப்போர்கள் ஈடேற்றத்திற்குரிய வழியிலிருந்து பிறழ்ந்து விட்டவர்கள் என்பது வெள்ளிடை மலையானது.

## 15. ஹலால் தெளிவாகக் கூறப்படல் வேண்டுமா?

இத்தகைய அற்புதங்களும், ஆற்றல்களும் நிறைந்த மகான்களான இறைநேசச் செல்வர்களிடம் உதவி தேடலாமா? என்று நாம் ஆராய்வதற்கு முன்னர் இருவிடயங்கள் குறித்து அடிப்படைத் தெளிவுகள் பெற வேண்டியுள்ளது. அதாவது “ஓர் இஸ்லாமியன் குறித்ததொரு விடயத்தை கடைப்பிடிப்பதற்கு அந்த விடயம் தொடர்பில் இஸ்லாமியச் சட்டம் - ஆகுமென்று (ஹலால் என்று) இடம் பெற்றிருக்கின்றதா? என்று பார்க்க வேண்டுமா? “ என்பது பற்றிய அடிப்படைத் தெளிவு இன்றியமையாதது.

உண்மையில் “ஒரு விடயத்தை கடைப்பிடித்துச் செயற்படுவதாயின் அந்த விடயத்தில் தடை ஹராம் ஆகாதது என்று சட்டம் வந்துள்ளதா? என்று பார்க்க வேண்டுமே தவிர ஹலால் - ஆகுமா? என சட்டம் வந்திருக்கின்றதா என்று பார்க்க வேண்டியதில்லை.” ஏனெனில் “தடைவிதிக்கப் படாதவைகள் எல்லாம் செய்யத் தகுமானதே!” இதனைப் பின்வரும் சான்றுகள் தெளிவாகச் சுட்டுவதாகக் கொள்ள முடியும்.

“அடிப்படையில் அனைத்துப் பொருள்களும், மனித நடவடிக்கைகளும் பொதுவாக - எல்லாம் ஆகுமானவையே” இது ஹலால், ஹராம் சம்பந்தமாக

இஸ்லாமிய சட்டத்தின் முதல் அடிப்படை விதியாகும். ஹராம் - ஆகாதவை எனச் சுட்டிக் காட்டத் தெளிவான குர்ஆன் சட்ட வசனங்கள், நபி மொழிகள் இல்லையாயின், அவ்வாறு கூறப்படாதவைகள் பொதுவாக ஹலால் - ஆகுமானதென்றே கொள்ளப்படும். ஆயின், ஹலால் - ஆகுமானதென்பது தெளிவாகச் சுட்டிக் காட்டத் தேவையில்லை." இது விடயமாக இஸ்லாமிய மூலாதாரங்களில் நிறையச் சான்றுகள் குவிந்துள்ளன. அவற்றிலிருந்து எமது சிந்தனைக்கு ஓரிரு ஆதாரங்களைப் பார்ப்போம்.

"உங்களுக்கு ஹராமாக்கியவற்றை அ(வ்விறை)வன் உங்களுக்கு விவரித்துக் கூறியுள்ளான்." (குர்ஆன் 6:119) இம்மறை வசனத்தின் படி, "பொருள்கள், செயற்பாடுகள்" என்ற பாகுபாடு இல்லாது, அனைத்தையும் உள்ளடக்கிய தென்பது அஹ்லுஸ் சுன்னத் வல் ஜமாஅத்தினர்களின் கொள்கையாகும்.

"அ(வ்விறை)வன் எதுவும் பேசாது விட்டு விட்டவை அ(வ்விறை)வன் உங்களுக்கு அனுமதித்தவைகளாகும்." (அறிவிப்பவர்: ஸல்மானுல் பாரிஸி (ரழி) ஆதாரம்: திர்மிதி, இப்னுமாஜா)

"உங்கள் மீது கொண்ட அருளால் சிலவற்றைப் பற்றிப் பேசாது விட்டுள்ளான். அவற்றைத் தேடித் திரியாதீர்கள்"(ஆதாரம்: தாரகுத்னீ)

"அல்லாஹ் தனது வேதநூலில் ஆகும்(ஹலால்) எனக் கூறியவை கூடுமானதாகும். அ(வ்விறை)வன் தடுத்தவை கூடாதவை (யாகும்-ஹராமா)கும். அ(வ்விறை)வன் மௌனம் சாதித்தவை அருளாகும். அல்லாஹ் அளித்துள்ள அ(வ்விறை)வனது அருளை ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் அல்லாஹ் எதனையும் மறக்கக்கூடியவனல்ல." எனக்கூறிவிட்டு, "உமதுரட்சகன் மறக்கக்கூடியவனல்ல" என்ற குர்ஆன் வசனத்தை நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஓதிக்காட்டினார்கள். (ஆதாரம் : ஹாகிம்)

மேற்படி ஆதாரங்களில் பொருட்களென்றோ செயற்பாடுகளென்றோ வேறுபடுத்தப்படவில்லை. அதேநேரம் இவற்றில் எதுவானாலும் ஹராம்- விலக்கப்பட்டவைகள் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட வேண்டியது தவிர, ஹலால்-ஆகுமாக்கப்பட்டவைகள் அல்லவென்பது மிகத் தெளிவாக்கப் பட்டடுள்ளது. இதுவோர் அடிப்படைச் சட்டமாகும்.

"..அல்லாஹ் தடை செய்த எந்த ஒன்றையும் விட்டும் உங்களை நான் தடுக்காமல் இருக்கவில்லை" என நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்:பைஹகி)

"பழைய மதக் கண்ணோட்டம் என்னவெனில் ஆகுமாக்கப்பட்ட பொருள்களைத் தவிர மற்றப் பொருள்கள் அனைத்தும் ஹராம்" என்பதாகும். குர்ஆனோ இதற்கு முற்றிலும் மாறாக "ஹராம் (தடுக்கப்பட்டது) என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளவை தவிர மற்றவை அனைத்தும் ஹலால் ஆகும் என்று விதி வகுத்துவிட்டது." (ஆதாரம் : திருக்குர்ஆன் - மௌலானா அபுல் அஃலா மௌதூதி)

ஆகவே, ஹராமென்று வரையறுக்கப்படாத எதுவும் நாம் செய்வதற்கும் அனுபவிப்பதற்கும் உரித்துடையவை என்பது போன்றுதான் நபி (ஸல்) அவர்கள் தனது வாழ்நாளில் செய்யாத எந்தச் செயலும் நமக்கு செய்யக்கூடாது

என்று அர்த்தம் ஆகாது. ஏனெனில் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு செயலைச் செய்யாது விட்டதற்கு பல காரணங்கள் இருக்கலாம்.
ஆதலால் நபி (ஸல்) அவர்கள் தன் வாழ்நாளில் செய்யாது விட்ட எந்தச் செயல்களுக்காகவும் வேண்டி தடுக்கப்பட்டதாகாது. மாறாக அச்செயற்பாடுகள் கூடாது என்பதற்கான ஆதாரத்தை முன்னிறுத்தி ஹராம் என்று கூறலாம். இதற்கு மாறாக செய்யவில்லை என்கின்ற ஒரே ஒரு காரணத்தின் அடிப்படையில் ஒரு செயலை தடுத்துவிடல் முறையன்றும் அது மார்க்கமன்றும்.

அல்லாஹ்வின் நல்லடியார்களான அவுலியாக்களிடம் அல்லது அவர்கள் ஊடாக உதவி தேடுவது நேர்ச்சை வைப்பது ஹராம் -விலக்கப்பட்டவை என்றால், கூடாதென்பவர்கள்தான் ஹராம் என்பதை நிரூபிக்க வேண்டுமே தவிர ஹலால்-கூடும் என்போர்களல்ல வென்பது வெள்ளிடை மலையானது.

# 16. சுயமாக இயங்குபவன் அல்லாஹ் மாத்திரமே!

எனவே வஸீலாத் தேடுவதின் தெளிவான சட்டங்களைப் புரிந்து கொள்வதாயின் மேற்படிய ஹலால் ஹராம் பற்றிய முதலாவது அடிப்படைத் தெளிவைப் பெற்றிருப்பது மிக முக்கியமான ஒன்றாகும்.

ஓர் உண்மையான விசுவாசியின் ஈமானி(ல்-விசுவாசத்தி)ல் "லா பாயிலா இல்லல்லாஹ்-காரியங்களைச் செய்யத் தகுமானவன் அல்லாஹ் ஒருவனே" என்ற நம்பிக்கை இருக்குமே தவிர அதற்கு மாறானதாக இருக்கமுடியாது. இவ்வாறு இல்லாது வேறொரு நம்பிக்கை இருந்தால் அது விசுவாசத்திற்குப் புறம்பானதாகவே அமையும்.

அல்லாஹ்வைத் தவிர மற்ற எவற்றுக்கும், எவர்களுக்கும் எதையும் சுயமாகச் செய்திடச் சக்தியில்லை. ஆனால் அல்லாஹ் தனது சக்தியை இரவலாக படைப்புகளுக்கு வழங்கியதினால்தான் ஏனைய தொழிற்பாடுகள் நிகழ்வதன் இரகசியமாகும். இந்த இரவல் வழங்கப்பட்ட தன்மைகள் அல்லாஹ்விடம் இருக்கும் தன்மைக்கு நிகராகவோ, ஒத்ததாகவோ அல்லவென்பதும் வெளிப்படையானது.

மாறாக குறிப்பிட்டளவிலேயே அல்லாஹ் தனது சக்தியிலிருந்து வழங்கு கின்றான். இது எதைப் போல் எனில், "நெருப்பில் இடப்பட்ட இரும்பு நெருப்பாக மாறுவது" போன்றதே. நெருப்பு இரும்பின் தன்மையைப் பெறாது. இரும்பு நெருப்பின் தன்மையைப் பெற்று குறிப்பிட்ட நேரம் நெருப்பாக இருப்பதைப் போல என்பதே இதுவிடயத்தில் இஸ்லாமிய அகீதாவின் - அஹ்லுஸ் சுன்னத் வல் ஜமாஅத்தினர்களின் கொள்கையும், நிலைப்பாடு மாகும்.

முஸ்லிம்கள் தங்களின் விசுவாசப் பிரமாணங்களில் "நன்மைகளும் தீமைகளும் அல்லாஹ்வின் பக்கமிருந்தே நிகழ்கின்றன." என்றுதான் ஏற்றுள்ளனர். இத்தகைய நம்பிக்கையுடையவர்களின் வாழ்வில் சந்திக்கும் சம்பவங்கள் யாவும் அல்லாஹ்வே சம்பவிக்கச் செய்கின்றான் என்றே அர்த்தப்படும்.

## 17. முஸ்லிம்கள் மீது தவறிய எண்ணம் கொள்ளலாமா?

உண்மையில் முஸ்லிம்களின் நம்பிக்கையில் அதுவும் அல்லாஹ் தொடர்பானவற்றில் சந்தேக எண்ணம் கொள்வது நல்லதல்ல. இதனைப் பின்வரும் மறை வசனம் தெட்டத் தெளிவாகச் சுட்டுகின்றது.

"அல்லாஹ் அல்லாதவைகளை அ(வ்விறை)வனுக்கு இணையாக வைத்துக் கொண்டு அவர்களை அல்லாஹ்வை நேசிப்பதற்கொப்ப நேசிப்போரும் மனிதர்களில் இருக்கின்றார்கள். ஆனால், நன்னம்பிக்கை கொண்டவர்(கள்-விசுவாசி)கள் அல்லாஹ்வை நேசிப்பதில் உறுதியான நிலை உள்ளவர்கள்..." (குர்ஆன் 2:165)

"அல்லாஹ் ஒருவன், அ(வ்விறை)வனே சம்பூரண சக்தி வாய்ந்தவன் என விசுவாசங் கொண்டவர்களோ அல்லாஹ்வை நேசிப்பதில் மிகவும் கடினமானவர்கள். அல்லாஹ் மீது கொண்டுள்ள இவர்களது நம்பிக்கையும் நேசமும் என்றும் அழிவதில்லை." (ஆதாரம்: தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன்-ஸூறத்துல்பகரா)

அல்லாஹ் மீதான திருப்தி மற்றெல்லோரின் திருப்தியைக் காட்டிலும் முதன்மை பெற்றிருக்க வேண்டும் என்பதும் அல்லாஹ்வுடைய நேசத்திற்காக வேண்டி அர்ப்பணிக்கும் இதயம் வேறெதற்கும் அர்பணித்து விடாத வகையில் உறுதி பூண்ட இதயமே விசுவாசியுடையது என்பதை சித்தரிப்பதே ஈமானின் முக்கிய பகுதியாகும்.

ஆகவே விசுவாசிகள் அல்லாஹ்வை நேசித்து நம்பிக்கைகளை வைக்கும் அளவில் யார் மீதும், எதன் மீதும் நேசம் நம்பிக்கை வைப்பதில்லை என்பதை மேற்படி அருள் மறை வசனத்தில் நன்கு தெளிவூட்டப்பட்டுள்ளது. விசுவாசிகளைப் பற்றித் தவறான எண்ணம் வைப்பது உகந்த செயல் அல்ல என்பது தெளிவான பின்னரும் வரட்டுப் பிடிவாதத்தில் நிலை கொள்வதென்பது விவேகமான செயலாகாது.

## 18. அல்லாஹ்வின் உதவிகள் நேரிடையாக உதயமாவதில்லை!

சகல காரண, காரியங்களையும் அல்லாஹ்வே சம்பவிக்கின்றான் என்றால், அ(வ்விறை)வன் நேரிடையாகத் தோன்றிச் சம்பவிக்கின்றான் என்று கருத்துக் கொள்ளலாகாது. மாறாக ஏதோ ஒரு வழியில்-ஊடகத்தின் மூலமாகவே அல்லாஹ் நாடுகின்றான். என்பதே கருத்தாகும். அதற்காக வேண்டி அல்லாஹ் நாடுவதற்கு ஊடகத்தின் பால் தேவையுடையவன் என்று அர்த்தப்படுத்திவிடல் ஆகாது.

நாம் வாழும் இந்த உலகத்தினை அல்லாஹ் காரண காரிய உலகமாக சிருஷ்டித்துள்ளான். அதனடிப்படையில் சில விதிமுறைகளையும் வகுத்துள்ளான். அதனோர் அங்கமாக பின்வரும் அமைப்பினையும் பார்க்க வேண்டும் அதற்கு முரணாகவோ மாற்று சிந்தனையை முன்னிறுத்தி நோக்கினால் யதார்த்த நிலை பிழைத்துவிடும் அபாயத்தையும் இவ்விடத்தில் உறுதியாக விளங்கி நம்ப வேண்டும்.

நடைமுறையில் - நிர்வாக ஒழுங்கமைப்பில் இப்படி அ(வ்விறை)வனது செயல்களின் வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் தலங்களை அல்லாஹ் அமைத்துள்ளான். இந்த வகையில் அவுலியாக்களும் ஒரு வழியாக - ஓர் ஊடகமாக அமைந்திருக்கின்றார்கள். ஆயின், அல்லாஹ்வின் அருள்கள் வெளியாகும் வழியாக - தலமாக அவுலியாக்கள் மிளிர்கின்றார்கள்.

நமது நேர்மையான தேட்டங்களுக்கு அல்லாஹ்வின் நாட்டம் கிட்டுமென்பது தான் ஓர் உண்மை விசுவாசியின் நம்பிக்கையாக இருக்கமுடியும். இத்தகைய வலுவான விசுவாசமுள்ளவர்கள் அவுலியாக்கள் மூலம்-அவுலியாக்களிடம் உதவி தேடுவது ஷிர்க்காகவோ, பாவமான காரியமாகவோ அமையாதென்பது உறுதியான சங்கதியாகும்.

## 19. ஷிர்க் என்றால் என்ன?

“ஷிர்க்” என்பது, “அல்லாஹ் அல்லாத ஒன்றை அல்லாஹ்விற்கு நிகராக்குவது” ஆகும். அதாவது, “அல்லாஹ்வைப் போல் தாத்திலும், ஸிபத்திலும் யாரளவிலும் தேவையற்று தன்னிலைக்குத்தானே ஆதாரமான இன்னொன்றும் இருப்பதாக நம்புவதாகும்.” இந்த எண்ணம் - நம்பிக்கையே ஷிர்க்காகும். ஷிர்க் பற்றிய வரைவிலக்கணத்தில் இதுவல்லாத கருத்துடையோர்களும் உண்டு. எனினும் அஹ்லுஸ் சுன்னத் வல் ஜமாஅத் அறிஞர்கள் “ஷிர்க் மன நம்பிக்கையினால் மாத்திரமே ஏற்படக்கூடியது” எனும் கருத்தையே கொண்டுள்ளனர்.

“சுயமாகவே இயங்குகின்ற அல்லாஹ்வுடைய செயலைப் போல்-நிகராக இன்னாருடைய அல்லது இன்ன செயல் இருக்கின்றது” என்ற நம்பிக்கை எவரிடம் ஏறபடுகின்றதோ அவர்களிடமே ஷிர்க் ஏற்படுகின்றது. இந்த அடிப்படையில் குறித்த அவுலியாக்கள் தான் எமது நியாயமான தேட்டங்களைச் சுயமாகவே நிறைவேற்றி வைக்கின்றனர்” என்ற நம்பிக்கையே ஷிர்க்காகும். - இணைவைத்தலாகும்.

செயல்கள் நிகழ்வற்கு முன்னர் அது பற்றிய எண்ணம் தோன்றிவிடுகின்றது. எண்ணத்தின் வழியிலேயே செயல்கள் பயணிக்கின்றன. செயல்கள் சரியானதா? என்பதைக் கூட எண்ணமே தீர்மானிக்கின்றது. ஆகவே ஷிர்க் என்பது எண்ணம் சார்ந்தது என்ற கருத்து அறிவு ரீதியானதும், சத்தியத் தீர்வாகவும் அமைகின்றன. இதனை நாம் நமது நினைவில் நன்கு பதிர்ந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

“யாரையும் எந்தப் பொருளையும் அல்லாஹ்வுக்கு இணையாக நிகராக சமமாக வணங்குவதோ, நினைப்பதோ கூடாது. ஏகத்துவ இறைக் கொள்கையை போதிப்பதே திருக்குர்ஆன் அருளப்பட்டதன் முக்கிய நோக்கமாகும். தன்னைப் படைத்து பரிபாலிக்கும் இரட்சகனும் அகிலத்தின் ஏக அதிபதியுமாகிய அல்லாஹ்வுக்கு அவனால் படைக்கப்பட்ட வேறு ஒருவரை அல்லது வேறொரு பொருளைச் சமமாகக் கருதுவதும் வணங்குவதும் கொடிய பாவமாகும். நன்றி கொன்ற செயலாகும். சிறிய பாவங்களை முழுமையாக மன்னித்து விட்டாலும் இணைவைப்பதை விட்டும் அல்லாஹ் மன்னிக்கவே மாட்டான். இது

அல்லாஹ்வின் உறுதியான கட்டளையாகும்." (ஆதாரம் :தஃப்ஸீர் ஜவாஹிருள் குர்ஆன் பாகம் 05)

"ஷிர்க் எனும் அரபுப் பதத்திற்கு பங்கு சேர்த்தல் என்பது அர்த்தமாகும். (கூட்டிணைத்தல்) அவ்வாறாயின் அல்லாஹ்வுக்கு ஒப்பாக ஒன்றை குறிப்பிடுவதோ அல்லது அல்லாஹ்வுக்கு கீழ் இரண்டாவது ஒரு தெய்வம் உண்டு என்று நம்புவதைத்தான் ஷிர்க் என அழைக்கப்படும்." (ஆதாரம் : தஃப்ஸீர் பத்ஹுர் ரஹ்மான்)

"அல்லாஹ்வுடைய தாத்தை (தாத் சொரூபத்தை) போன்று அல்லது ஸிபத் (இலட்சனத்)தை போன்று வேறொரு பொருள் இருக்கிறது என்று (மனத்தால்) நிர்ணயம் கொள்வதற்குத் தான் ஷிர்க் என்று (அஹ்லுஸ் சுன்னத் வல் ஜமாஅத்தினர்) கொள்கின்றனர்" (ஆதாரம்: யாரஸுலல்லாஹ் என அழைக்கலாமா? - தமிழில் மௌலவி எஸ்.எம்.எச்.முஹம்மது அலி ஸைபுத்தீன் ஸூபி, (ரஹ்மானி, பாகவி)

"அவுலியாக்கள் அல்லாஹ் அளவில் தங்களை ஃபனாவாக்கிவிட்ட காரணத்தால் அல்லாஹ்வைக் கொண்டே அவர்கள் தரிபட்டுள்ளனர். அல்லாஹ்வின் உத்தரவு கொண்டே மனிதர்களுடைய நாட்ட தேட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்கின்றார்கள். எனவே செய்து முடிப்பவன் அல்லாஹ்வே!" (ஆதாரம்: ஹிதாயத்துல் அனாம் இலாஜியாரத்தில் அவுலியா இல் கிராம் - மௌலவி முஹம்மது பாக்கர்)

"நிச்சயமாக நீங்கள் இணைவைக்கக்கூடியவர்களாக மாறிவிடுவீர்கள் என்று நான் பயப்படவில்லை" என நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள். (அறிவிப்பவர்: உக்பா பின் ஆமிர் (ரழி) ஆதாரம் : புகாரீ, முஸ்லிம்)

மேற்படிய ஹதீஸ் நம்மை நோக்கியே பேசுகின்றது. அதாவது நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் உம்மத்தில் அவர்களை முழுமையாகவும், இஸ்லாத்தை தமது மார்க்கமாகவும் ஏற்றுக் கொண்ட முஸ்லிம்கள் ஷிர்க்கான விடயத்தில் விரைவில் வீழ்ந்துவிடக்கூடியவர்கள் அல்ல என்பதை இந்த ஹதீஸ் வெட்ட வெளிச்சமாக்கி வைக்கின்றது. ஆகவே இந்த அடிப்படையோடும் இது விடயத்தை நோக்க வேண்டிய தேவையை நாம் புறக்கணித்துவிட முடியாது.

"அல்லாஹ்வின் பரிசுத்தமான தாத்தை அவனுக்குரிய தாத் பண்புகளில் வேறு ஒருவரை கூட்டாக்காமல் பரிசுத்தப்படுத்துவது தௌஹீதின் பொருளாகும். அதாவது அல்லாஹ்வைப் போன்று வேறு ஒருவரை அல்லாஹ் என்று நம்பாதிருத்தல், அல்லாஹ்வின் தாத்திக்கு இருக்கும் தகுதியை வேறு ஒருவரின் தாத்திற்கும் இருப்பதாக நம்புவது அல்லாஹ்வின் தாத்தில் ஷிர்க் வைப்பதாக அமையும். இந்த நிலைக்கு எந்த முஸ்லிமும் இருக்கமாட்டான் என்பது தெளிவானது.

உலகில் காணப்படும் அனைத்துப் படைப்புக்களும் அல்லாஹ்வினால் சிருஷ்டிக்கப்பட்டவைகள் இதில் நபிமார்களோ, இறைநேசர்களோ விதிவிலக்கல்ல பொதுவாக படைப்பு என்ற வட்டத்துக்குள் வந்துவிட்டால் அவை எதுவானாலும் சரி சுயமாகத் தோன்றியவை அல்லவென்பதும் அவற்றின் சக்திகள் எல்லையுடையனவாகவும் குறித்த காலத்தோடு

இவ்வுலகைவிட்டு அழியக்கூடியதாகவும், இன்னொன்றின் தயவில் நம்பி வாழும் இயல்பைக் கொண்டிருப்பதும் மிகவும் வெளிப்படையானது.

ஆனால் படைப்புகளிடம் காணப்படும் இந்நான்கு கூறுகளுக்கும் புறம்பான நேர் எதிரான தன்மைகளைக் கொண்டவனாகவே அல்லாஹ் இருக்கின்றான். அவன் சுயமானவன் எல்லைகள் இல்லாதவன் அழிவற்றவன் யாருடைய தேவையையும் நம்பியிருப்பவன் அல்லாதவன். ஆகவே அ(வ்விறை)வனோடு யாரையும் பங்கீடாக்கிக் கொள்வதோ அவனது இறைமையில் இன்னொரு வரின் கூட்டு இருப்பதோ இம்மியளவும் சாத்தியமில்லாத ஒன்றாகும். இதனை நன்கு விளங்கியவர்களாகவே முஸ்லிம்கள் இருப்பார்கள். இதனால் தான் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது உம்மத்திலுள்ள முஸ்லிம்கள் இணைவைப்பவர்களாக மாறிவிடுவார்கள் என்ற பயம் இல்லை என்ற நம்பிக்கையை தெரிவித்ததன் பின்னணியாகும்.

அவுலியாக்கள் என்போர்கள் அல்லாஹ்வின் அடியார்களென்றும், அ(வ்விறை) வனது அனுமதி கொண்டு இறையருள்களை வெளிக்கொணர்கின்றனர் என்ற நம்பிக்கையே ஓர் உண்மை விசுவாசியின் விசுவாசமாகும். இந்த நம்பிக்கைகளுடன் கூடிய விசுவாசிகள் அல்லாஹ்வின் அவுலியாக்களிடம் உதவி தேடிக் கொள்வதினால் ஷிர்க் எனும் பாவம் விளைந்து விடாது. இதற்கு மாறான நம்பிக்கைகளுடன் இருப்போர்கள் அல்லாஹ்வின் நேயர்களிடம் அல்லது அவர்கள் ஊடாக உதவி தேடுவதன் மூலமே ஷிர்க் ஏற்படும் சந்தர்ப்பம் இருக்கின்றதெனலாம்.

இன்னொரு விடயத்தை நன்கு விளங்குவது அவசியமாகும். ஷிர்க் என்னும் பாவச் சுமை தவிர்ந்த அனைத்துப் பாவங்களையும் அல்லாஹ் விரும்பும் முஸ்லிம்களுக்கு மன்னிப்பு வழங்குகின்றான். அவுலியாக்களிடம் அல்லது அவர்கள் ஊடாக உதவி தேடுதலில் மட்டுமல்ல, எமது எல்லாச் செயல்களிலும், நடவடிக்கைகளிலும் ஷிர்க் ஏற்படச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றது. உதாரணமாக நோயை மருந்தோ, மருத்துவரோ சுயமாக சுகப்படுத்துகிறது, சுகப்படுத்துகின்றனர். என்ற நம்பிக்கைகளே ஷிர்க்காகும். எனவே, ஷிர்க்-இணைவைத்தல் எனும் பாவச் சுமையினுள் செயல்கள் நுழைந்து கொள்வதற்கு அடிப்படையாக இருப்பது எண்ணமேயாகும். இதனை இஸ்லாமிய மூலாதாரங்கள் நன்கு விளங்கிக் கொள்ளும் வகையில் தெளிவு படுத்துவதை அவதானிக்கலாம்.

அவுலியாக்களிடம் அல்லது அவர்களின் பொருட்டால்தான் உதவிகள் தேட வேண்டும். என்கின்ற கட்டாயப் பணிப்பு இஸ்லாத்தில் இல்லை. அதேநேரம் விரும்புவோர்கள் அல்லாஹ்வின் நல்லடியார்களான இறைநேசச் செல்வர்களிடம் அல்லது அவர்கள் ஊடாக உதவிகள்' தேடிக் கொள்வது தவறானதுமல்ல. ஏனெனில், இந்நடை முறைமை தடுக்கப்பட்டதென்று இஸ்லாமிய மூலாதாரங்கள் எடுத்துக் கூறவில்லை. ஆகையால் அவர்களிடம் அல்லது அவர்கள் மூலமாக உதவிகள் தேடுவது ஷிர்க் என்றோ, பாவமான செயல் என்றோ கூறிவிடும் உரிமை எம்மில் யாருக்குமில்லை.

படைப்புக்கள் படைப்பிற்களின் பால் தேவையுடையவை என்பதற்கு இஸ்லாத்தின் ஆற்றுப்படுத்தலிலிருந்து நிறையச் சான்றுகளை தரிசிக்கலாம். ஆயினும் எமதிந்த நோக்கிற்கு ஒரு சில சான்றுகளை மட்டும் எடுத்து நோக்குவதன் மூலம் போதுமாக்கிக் கொள்வோம்.

## 20. சுலைமான் நபி (அலை)யும், துல்கர்னைனும் தவறியவர்களா?

“(நபி சுலைமான் தம் அவையோரிடம்) “பிரமுகர்களே! கீழ்ப்படிந்தவர்களாக என்னிடம் அவர்கள் வருவதற்கு முன், உங்களில் யார் அவளுடைய சிம்மாசனத்தை என்னிடம் கொண்டு வருபவர்?” என்று கேட்டார். (அப்பொழுது) ஜின்களிலிருந்து இஃப்ரீத் (என்ற சக்திவாய்ந்த ஒரு ஜின்னு); “உங்களுடைய இடத்திலிருந்து நீங்கள் எழுந்திருப்பதற்கு முன், அதனை உங்களிடம் நான் கொண்டுவருகிறேன்...” (அல்குர்ஆன் 27:38,39)

“...என் இறைவன் எனக்கு எதில் (வசதிகள்) அளித்திருக்கின்றானோ அது (நீங்கள் கொடுக்க இருப்பதை விட) மேலானது. ஆகவே, (உங்கள்உடல்) பலம் கொண்டு எனக்கு நீங்கள் உதவி செய்யுங்கள் நான் உங்களுக்கும் அவர்களுக்குமிடையே ஓர் உறுதியான தடுப்பை ஏற்படுத்தி விடுகிறேன் என்று கூறினார்.” (குர்ஆன் 18:95)

அல்லாஹ்வைத் தவிர வேறுயாரிடமும் எவ்விதமான உதவிகளும் கோருவது கூடாதென்றால், இங்கு நபி சுலைமான் (அலை) அவர்களும், துல்கர்னைன் அவர்களும் தவறிழைத்தவர்களாகவே பொருள்படும். (நாஊது பில்லாஹி மின்ஹா) அப்படியல்லாது இப்படி உதவிகள் கேட்டுக் கொண்டதைக் குர்ஆன் எடுத்துக் காட்டியிருப்பதுடன், இச்செயல் பற்றி இஸ்லாமிய மூலாதாரங்களான குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஃ, கியாஸ் ஆகியவற்றில் தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகள் எனக் கூறப்படாமல் இருப்பதிலிருந்து இச்செயல்கள் நமக்கு முன்மாதிரியானது என்பதற்குப் போதுமான சான்றாகும்.

## 21. அற்புதங்கள் நிகழும் இடங்களில் துஆக் கேட்கலாமா?

“இயற்கைக்கு மாற்றமாக நிகழும் நிகழ்ச்சிகளுக்குத்தான் அற்புதம்” என்று கூறப்படும். இதனை வேறு வார்த்தையில் கூறுவதாயின் “வழக்கத்திற்கு மாற்றமாக நிகழும் சம்பவங்களே” அற்புதமாகும். இவ்வாறு அற்புதங்கள் நிகழும் இடத்திலிருந்து இறைஞ்சுகின்றபோது அது உடன் அங்கீகரிக்கப்படுகின்றது. என்பதற்கு பின்வரும் சம்பவம் ஒரு சான்றாக அமைகின்றது. அதுவும் அருள்மறையே இதுபற்றி குறிப்பிடுவதினால் சந்தேகமின்றி ஏற்க வேண்டியுள்ளது.

ஆனால், குதர்க்கம் புரிவதை இலக்காகக் கொண்டோர்கள், “அற்புதங்கள் நிகழும் இடம் துஆக் கேட்க உகந்த இடம் என்றால்,” முஸ்லிம் அல்லாதவர்களிடமும் அற்புதங்கள் நிகழ்கின்றதோ அத்தகைய இடத்திலும் துஆக் கேட்கலாமென்றுதானே அர்த்தப்படும் எனக் கூறி, எம்மைத் தவறான வழியில் வழிநடாத்துகின்றனர். மேற்படி கூற்றுடையவர்கள் எனக்கூறி அற்புதங்கள் நிகழும் இடம் துஆக் கேட்பதற்கு உகந்த இடம் என்ற கருத்து வலுவற்றது என வாதிக்கின்றனர்.

இவர்களின் மேற்படி கூற்று உண்மைக்குப் புறம்பானதாகும் ஏனெனில் அற்புதங்கள் முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்தும் நிகழ முடியும் என்பதையும், அது முஸ்லிம்களிடமிருந்து நிகழ்வதற்கு ஒப்பானதல்ல என்பதையும், இக்கட்டுரையின் முற்பகுதியில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. மேலும்,

“முஸ்லிம்களுக்கான முன்மாதிரிகள் என்பது முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்து பெற முடியாது” என்பது ஓர் அடிப்படைச் சட்டமாக-கருத்தாக இஸ்லாம் முன்வைத்துள்ளது.

ஏனெனில், முஸ்லிம் அல்லாதவர்களின் வணக்க வழிபாடுகளும், நம்பிக்கைகளும் வேறுபாடு கொண்டவை. ஆனால், வணக்க வழிபாடுகள், நம்பிக்கைகள் இங்கு முஸ்லிம்களிலிருந்து.முஸ்லிம்களுக்கான முன்மாதிரியைப் பற்றி எழுதி வரும் போது, முஸ்லிம் அல்லாதவர்களை வைத்து கருத்துக் குழப்பங்களை ஏற்படுத்த வேண்டிதுமில்லை, நாம் குழம்ப வேண்டியதுமில்லை. மேலும் முஃஜிஸா நபிமார்களிடமிருந்தும் கராமத் அவுலியாக்களிடமிருந்தும் ஏற்படுபவை. காபிர்கள் சாதாரண முஃமினின் அந்தஸ்த்திற்கும் உரியவர்களல்லர் என்பதையும் விளங்க வேண்டும்.

“...ஜக்கரிய்யா நுழையும் பொழுதெல்லாம் அவளி(டம்-மர்யமி)டம் ஏதாவதொரு உணவு இருப்பதை(க்-காண)ப் பெற்று, ஹமர்யமே! எங்கிருந்து இது கிட்டிற்று?’ என்று அவர் கேட்டார். இது அல்லாஹ்விடமிருந்து (கிடைக்கின்றது). நிச்சயமாக அல்லாஹ் தான் நாடியவருக்கு கணக்கற்று உணவளிப்பான்’ என்று (பதில்) கூறுவாள். அவ்விடத்தில் ஜக்கரிய்யா தமது இரட்சகனை அழைத்து, ஹஎன் இரட்சகா! உன்னிடமிருந்து மனம் பொருந்திய சந்ததியை எனக்களிப்பாயாக! திட்டமாக நீ பிரார்த்தனையை நன்கு செவியுறுகிறவன்!’ என்று வேண்டினார்.” (அல்குர்ஆன் 3:37,38)

மர்யம் (அலை) அவர்களுக்கு கனிவர்க்கங்கள் முதலிய உணவுப் பதார்த்தங்கள் வந்ததும், வெயிற் காலங்களில் கிடைக்கக்கூடிய கனிகள் மழை காலத்திலும் மழைக்காலத்தில் கிடைக்கக்கூடிய கனிகள் கோடை காலத்திலும் கிடைத்தது அற்புத வகையைச் சேர்ந்ததாகும்.

எனவேதான் நபி ஜக்கரிய்யா (அலை) அவர்கள் தனது வயோதிபக் காலத்திலும் நம்பிக்கைகளுடன் தனது இல்லறத்தின் ஆதாரமான குழந்தைச் செல்வத்திற்காகத் துஆச் செய்கின்றார்கள். அல்லாஹ்வும் அந்தத் துஆவை அங்கீகரித்து சந்ததியை அருளியதாகவும் குர்ஆனே நமக்கு எடுத்துரைக்கின்றது.

நபிமார்களின் செயல்கள் அர்த்தம் நிறைந்தவையாகவும் இஸ்லாமிய மூலாதாரங்களுக்கு முரண்பாடற்றவையாகவுமே இருக்குமென்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இதனடிப்படையில் நபி ஜக்கரிய்யா (அலை) அவர்களின் மேற்படி செயல் செவ்வையானதுடன் அற்புதங்கள் நிகழும் இடங்களில் கேட்கும் பிரார்த்தனைகள் உடன் அங்கீகரிக்கப்படுகின்றதென்ற அடிப்படையிலும் நபி ஜக்கரிய்யா (அலை) அவர்கள் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்கள் என்பது தெட்டத் தெளிவாக நாமுணர்ந்து கொள்ளக்கூடியதாகும்.

அதுமட்டுமன்றி இந்நிகழ்வை அல்லாஹ்வே நமக்குச் சொல்லிக் காட்டுவதினால் இச் செயலை நாமும் பின்பற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துவதே இலக்கென்றும் நாம் கொள்ளலாம். பின்வரும் இரண்டு ஹதீஸ்களையும் இதுவிடயத்தில் வைத்து நோக்கினால் அற்புதங்கள் நிகழும் இடங்களில் கேட்கப்படும் துஆக்ளுக்கென்று தனி சக்தியை அல்லாஹ் வாரிவழங்குகின்றான் என்பது மிகவும் ஆணித்தரமான ஓர் அம்சமாக நாம் ஏற்றுக் கொள்வதிலிருந்து விடுபடுவதற்கான ஏதுக்கள் எதுவுமில்லை.

"நீங்கள் சேவல்கள் கூவுகின்ற சப்தத்தைக் கேட்டால் இறைவனிடம் அவனது அருளைக் கேளுங்கள். ஏனெனில் அவை வானவரைப் பார்த்திருக்கின்றன" என அபூஹுறைரா (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள். (ஆதாரம்: புகாரீ)

நபிமார்களில் ஒருவர் தமது சமூக மக்களுக்காக வேண்டி மழைக்காகப் பிரார்த்திக்க வெளியே வந்தார். அப்போது ஒரு எறும்பு தனது காலை வானத்தின் பக்கமாக உயர்த்திக் கொண்டிருந்தது. அதுபோது அல்லாஹ் அந்த எறும்புக்காக உமது பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கூறினான் என்பதாக நபி (ஸல்) அவர்கள் எடுத்துரைத்தார்கள். (ஆதாரம் : தராகுத்னீ பாகம் 02)

## 22. நபிமார்கள் பாவித்த உடைகளிலும் அருளுண்டு!

மேலும், நபிமார்கள் பாவித்த உடைகளில் கூட பரக்கத்துக்களும், அற்புதங்களும் நிறைந்துள்ளன என்பதற்கு பின்வரும் அல்குர்ஆன் வசனம் மிகவும் வலுவான ஆதாரமாகக் கொள்ள முடியும்.

"என்னுடைய இந்தச் சட்டையை நீங்கள் எடுத்துக் கொண்டு சென்று என் தந்தையாரின் முகத்தில் போடுங்கள் அவருக்கு கண் பார்வை வந்துவிடும்..." (அல்குர்ஆன் 12:93)

மேற்படி அருள் மறை வசனத்திற்குப் பலவிதமான பொருள்களுண்டு. அவற்றில் நமது இந்த வஸீலாத் தேடுவது கூடுமென்ற ஆய்விற்கும் சான்றுடையதாக அமைந்துள்ளது. எனின் அற்புதங்கள் வெளியாகும் தலங்களில் கேட்கப்படும் நீதியான - நியாயமான துஆக்கள் பயனுடையவைகளாக அமைவதோடு, நபிமார்கள் பாவித்த உடைகளிலும் அவர்களிடமும் அருள்களும் பரக்கத்துக்களும் நிறையவுண்டு என்பதை மிகத் தெளிவாக்குகின்றது.

இவ்விடத்தில் குதர்க்கவாதிகளின் குறுக்கீடு பின்வருமாறு அமைந்துள்ளன. அதாவது "மேற் சுட்டிக்காட்டிய சம்பவங்கள் யாவும் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்திற்கு முந்திய நபிமார்களுடையதாகும். ஆதலால், இஸ்லாம் முழுமைப்படுத்தப்படாத காலத்தின் செயல்கள் அவைகளாகும். நபியுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய காலத்தில் இவ்வாறான செயல்கள் இல்லை என்பதுடன் இத்தகைய பண்புகளை இல்லாதொழிப்பதே நபி முஹம்மது (ஸல்) அவர்களின நபித்துவத்தின் தோற்றமாகும்." என்பதாகும்.

உண்மையில் இவ்வாறு வெட்டி வாதிடுவதற்கு முற்படுவோர்களுக்கு தக்க பதில்களை இஸ்லாமிய மூலாதாரங்கள் முன்வைக்கத் தவறவில்லை. அத்தகைய ஆதாரங்கள் அநேகம் உள. இருப்பினும் நமதிந்த தேடுதல் முயற்சிக்கு ஒரு சில ஆதாரங்களைப் பார்ப்போம். போதுமென்ற மனமும், உண்மையைக் கண்டு அதிலேயே நிலை கொள்ள வேண்டும் என்ற ஆர்வமுடையோர்களுக்கு இது போதுமானதாகவே இருக்குமென்பது உறுதியான சங்கதியாகும்.

"நான் உம்முஸ்ஸல்மா (ரழி) அவர்களிடம் சென்றேன். அப்பொழுது நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் திருமுடிகளில் மருதாணி தேய்த்த திருமுடியொன்றினை எடுத்துக் காட்டினார்கள்." (அறிவிப்பவர் : உதுமான் இப்னு அப்துல்லாஹ் ஆதாரம்: புகாரீ)

"உம்முஸ்ஸல்மா (ரழி) அவர்களிடம் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் திருமுடியொன்று இருந்தது. மக்கள் அதன் மூலம் நோயிலிருந்து சுகம் பெறுகின்றனர். சில நேரங்களில் தண்ணீர் பாத்திரத்தில் அத்திரு முடியை அமுக்கி எடுத்து அந்நீரைப் பருகுவர்." (ஆதாரம்:புகாரீ-ஓரக் குறிப்பு)

நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் மகளாரை நாங்கள் குளிப்பாட்டிக் கொண்டிருந்த போது நபி (ஸல்) அவர்கள் வந்து, "நீங்கள் மூன்று அல்லது ஐந்து தடவைகள் அல்லது அதனை விட அதிகமாக குளிப்பாட்டுங்கள். நீரையும், சீயக்காயும் போட்டு நீர் ஊற்றிவிட்டு இறுதியில் கற்பூரத்தை வையுங்கள். எல்லாம் முடிந்துவிட்டால் எனக்குத் தகவல் கொடுங்கள்" என்று கூறினர். அனைத்தும் முடிந்த போது நபி (ஸல்) அவர்களை அழைத்தோம். "நபி (ஸல்) அவர்கள் தமது வேட்டியைத் தந்து அதனை அன்னாருக்கு (மகளுக்கு) ஞாபகச் சின்னமாக அணிவித்து விடுங்கள்" என்று கூறினார்கள். (அறிவிப்பவர்:உம்மு அதிய்யா (ரழி) ஆதாரம் : முஸ்லிம்)

"அஸ்மா (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள் "இதோ அல்லாஹ்வுடைய தூதரின் போர்வை" என்று கூறி ஓரத்தில் ஜரிகை வேலைப்பாடமைந்த பாரசீகத் துணியாலான போர்வையை (மேலங்கியை)க் கொண்டு வந்(தார்கள்-காண்பித்)தார்கள். அதன் கைகள் ஜரிகை வேலைப்பாடால் கரை கட்டப்பட்டிருந்தன. "இது அல்லாஹ்வுடைய தூதரின் மேலங்கி, ஆயிஷா (ரழி) அவர்கள் மரணிக்கும் வரை இது அவரிடமே இருந்தது. அவர் மரணித்ததும் என்னிடம் வந்தது. இறைத்தூதர் இதனை அணிந்து வந்தார்கள். நாங்கள் இதனை நோயாளருக்காகக் கழுவி அதனா(ல்-நீரா)ல் நோயைக் குணப்படுத்தி வந்தோம்." என்று கூறினார்கள்." (ஆதாரம்:முஸ்லிம்)

(இந்த ஹதீஸ் மூலம்) "அல்லாஹ்வை நெருங்கிய நல்லடியார்களைக் கொண்டு மட்டுமன்றி, அவர்களுடைய உடைமைகள், அவர்களைச் சார்ந்த நல்லவைகள் மூலமாகவும் பரக்கத்தைத் தேடிக்கொள்ளலாம். அது ஆகுமாக்கப்பட்டதே என்பதற்கு இது ஐயத்திற்கு இடமின்றி சான்றாக அமைந்துள்ளது." (ஆதாரம்: ஷரஹ் முஸ்லிம்)

"இந்த ஹதீஸின் மூலம் ஸாலிஹீன்களின் உடைகளைக் கொண்டும் ஞாபகச் சின்னங்களைக் கொண்டும் பரக்கத் பெற ஆதாரமிருக்கிறது. (ஆதாரம் : ஷரஹ் முஸ்லிம்)

## 23. நபியுல்லாஹ் (ஸல்) அவர்களும் ஸியாரத் செய்தலும்

"நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹதில் ஸஹீதான தோழர்களின் மண்ணறைகளுக்கு ஒரு முறை (அவர்களின் மரணத்திற்கு முன் - நோய்வாய்ப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னதாகச்) சென்றார்கள். எட்டு ஆண்டுகளுக்குப் பின்பு அவர்களுக்காக அங்கு சென்று துஆச் செய்தார்கள்." (அறிவிப்பவர் : உக்பா பின் ஆமீர் (ரழி) ஆதாரம் : புகாரீ, முஸ்லிம்)

"நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரழி) அவர்களுடன் இரவில் தங்கும் ஒவ்வொரு இரவின் கடைசிப் பகுதியில் (ஜன்னத்துல்) பகீஃ மண்ணறைக்குப் புறப்பட்டுச் செல்வார்கள்." (அறிவிப்பவர் : ஆயிஷா (ரழி) ஆதாரம் : முஸ்லிம்)

இவ்விரு ஹதீஸ்களும் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸியாரத் உள்ள இடத்துக்கு சென்றிருப்பதை உறுதிப்படுத்தும் அதேவேளை இன்னொரு உண்மையையும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. அதாவது கப்ரு வாசிகளுக்கு அடுத்தவர்கள் கேட்கும் துஆவின் மூலமும் அமல்களினூடாகவும் நன்மைகள் கிடைக்கப் பெறுகின்றன என்பதாகும்.

நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸியாரத் செய்வதனை ஆரம்பத்தில் தடுத்திருந்ததையும் பின்னர் இச்செயற்பாட்டினை தனது நடைமுறையில் கொண்டு வந்து செயற்படுத்திக் காட்டிவிட்டு எம்மையும் அவ்வாறு ஈடுபடுமாறு அறிவுறுத்துவதை பின்வரும் நபி மொழி நமக்கு மிகவும் தெளிவாக அறிவுறுத்துகின்றது.

“நான் (ஆரம்பத்தில்) கப்ருகளை ஸியாரத் செய்வதை உங்களுக்குத் தடுத்திருந்தேன். (இப்பொழுது அத்தடையில்லை) ஆகவே, கப்ருகளை நீங்கள் ஸியாரத் செய்யுங்கள்” என நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்” (அறிவிப்பவர் புரைதா (ரழி) ஆதாரம் : முஸ்லிம்)

ஸியாரத் என்பது இஸ்லாத்தின் வழிபாட்டு முறைமையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நடைமுறையாகும். ஸியாரத் வழிபாடு ஷிர்க் என விமர்சிப்போரும், தடுப்போரும் இஸ்லாம் சரிகண்டதும் நடைமுறைப்படுத்துமாறு ஆணை பிறப்பித்த விடயத்தில் தன்னிச்சையாக தடுத்தலைப் பிரயோகித்ததாக அமைகின்றது. இது மாபெரும் தவறான செயலாகும். ஸியாரத் வழிபாட்டு முறைமை - இபாதத் எவ்வாறு பேணப்படுகின்றன என்பதை கீழ்வரும் கூற்று தெளிவாக்கி வைக்கின்றது.

“ஸியாரத் மூன்று வகைப்படும். அவை, (1) நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் அடக்கவிடத்தை தரிசித்தல், (2) நபிமார்கள், வலிமார்கள் பெரியோர்கள் ஆகியோரின் அடக்கவிடங்களைத் தரிசித்தல், (3) உற்றார் உறவினர் ஏனையோர் ஆகியவர்களின் அடக்கவிடங்களை தரிசித்தல் ஆகியவையாகும்.” (ஆதாரம் : இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் பாகம் 04)

## 24. அமல்களைக் கொண்டு வஸீலா தேடுதல்

“நீங்கள் பொறுமை மற்றும் தொழுகையின் மூலம் (இறைவனிடம்) உதவி தேடுங்கள்...” (குர்ஆன் 2:45)

“நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் பொறுமையின் மூலமும், தொழுகையின் மூலமும் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள். திண்ணமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான் (குர்ஆன் 2:153)

மேற்காணும் அல்லாஹ்வின் வசனங்கள் அமல்களைக் கொண்டு உதவி தேடுவதை அனுமதிக்கின்றது. ஒருவரிடமிருந்து வெளிப்படும் அமல்களைக் கொண்டு வஸீலா தேடமுடியுமானால், அச்செயலைச் செய்தவர் மிகவும் உறுதியானவராகவும் இறை நெருக்கத்தை அண்மியவராகவும் இருப்பார் என்பது வெளிப்படையானது. ஏனெனில் அமலையும் அமல் செய்பவரையும் படைத்தவன் அல்லாஹ் என்பதைக் குர்ஆன் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றது.

"உங்களையும், நீங்கள் புரியும் ஒன்றையும் படைத்தவன் அல்லாஹ்தான்." (குர்ஆன் 23:96)

"நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் தனக்கு முன் வாழ்ந்த மூன்று பேர் ஒரு குகையில் அடைபட்ட போது அம்மூவரும் தாம் செய்த நல்லமல்களை முன்னுறுத்தி அல்லாஹ்விடம் பிரார்த்தித்து மூடப்பட் குகைவாயில் திறந்து வழிவிட்ட பிரசித்த வரலாற்றை அறிவித்திருப்பதாக புகாரீயில் குறிப்பிடப்படுகின்றது. இது அமல்கள் மூலம் வஸீலா தேடமுடியுமென்பதை மேலும் வலியுறுத்துகின்றது.

ஒருவரின் அமல் உறுதியானதாகவும் உண்மையானதாகவும் இறைத் திருப்திக்குரியதாகவும் இருக்கும் பட்சத்தில் அந்த அமலைப் புரிந்தவரும் உயர் இயல்பையே கொண்டிருப்பார். ஆகவே அமலைக் கொண்டு வஸீலா தேடுவது ஆகுமெனில் ஆளைக் கொண்டு வஸீலா தேடுவதும் கூடுமென்றே அர்த்தப்படும்

## 25. ஆளைக் கொண்டு உதவி தேடுதல்

ஆளைக் கொண்டு உதவி தேடுவதற்கு பல்வேறு ஆதாரங்கள் இருந்தாலும் அவற்றிலிருந்து ஒரு சிலவற்ற எடுத்து நோக்குவோம்.

"கண்பார்வையிழந்த ஒரு ஸஹாபி நபியுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, தமக்காப் பிரார்த்தித்து தமது பார்வை மீட்டிக் கிடைக்க அல்லாஹ்வை வேண்டும்படி கேட்டுக்கொண்டார். இதனைச் செவியுற்ற நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த ஸஹாபியை நோக்கி, "நீர் விரும்பினால் கொஞ்சம் பொறுமையுடன் இருந்திருக்கலாம். இல்லாவிட்டால் நீர் நினைப்பது போல் நான் பிரார்த்திக்கிறேன்" என்றார்கள். இதைக் கேட்ட அந்தச் ஸஹாபி "பிரார்த்தியுங்கள்" என்றார். உடனே நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தச் ஸஹாபியிடம் வுழுச் செய்து இரண்டு ரக்அத்துத் தொழுது கீழ் வருவதைப் போல் சொல்ல வேண்டும் என்று பணித்தார்கள். "இறைவா! அருள்மிக்க உன் நபியைக் கொண்டு பிரார்த்திக்கிறேன். முஹம்மதே! ரஸூலுல்லாஹ்வே! உம்மைக் கொண்டு நான் என் இரட்சகனின் பக்கம் எனது இந்த தேவையை (கண்பார்வை திருப்புதலை) நிறைவேற்றுவதற்காக முன்னோக்குகிறேன். இறைவா! என் விஷயத்தில் நபியின் சிபாரிசை ஏற்றுக் கொள்வாயாக!" என்று சொல்லிக் கொடுத்தார்கள்." (ஆதாரம் : திர்மிதி, நஸாஈ)

"ஆதம் (அலை) அவர்களுக்கு மறதி ஒன்று நிகழ்ந்த போது, அவர்கள் இறைவா! முஹம்மத் (ஸல்) அவர்களின் பொருட்டால் என்னை மன்னிப்பாயாக! எனப் பிரார்த்திக்க, அதற்கு அல்லாஹ் நான் இன்னும் அவரை வெளிப்படுத்தவே இல்லை. அப்படியிருக்க உமக்கு அவரை எப்படித் தெரியுமென்று கேட்டான். அதற்கு அவர்கள் இறைவா! நீ உனது முபாரக்கான குத்ரத்தைக் கொண்டு என்னைப் படைத்து அதன் பின் ரூஹை ஊதினாய், அப்போது நான் எனது தலையை உயர்த்திப் பார்த்த போது அர் ஷுடைய தூண்களில் "லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மது ரஸூலுல்லாஹ்" என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டேன்.

அப்போது உனது பெயருடன் இன்னொருவரின் பெயரும் இணைந்திருக்கு

மாயின் அவர் உனக்கு பிரியமானவராகத்தான் இருப்பார் என்பதை தெரிந்து கொண்டேன் என்று சொல்ல, அதற்கு அல்லாஹ் ஆதமே! நீர் உண்மை சொன்னீர். கண்டிப்பாக அவர் எனக்கு பிரியமானவரே - அவர் பொருட்டால் என்னிடம் கேளும். உனக்கு மன்னிப்புத் தருகிறேன். அத்துடன் அந்த முஹம்மத் இல்லையென்றால் உம்மைப் படைத்திருக்க மாட்டேன் என்றும் கூறினான்" என்பதாக நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் நவின்றார்கள். (அறிவிப்பவர் : உமர் (ரழி) ஆதாரம் : அல் முஸ்தத்ரக், தப்ரானி, மிஷ்ஹாத்)

"உமர் (ரழி) அவர்கள் பஞ்சம் ஏற்பட்டால் அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் அவர்களைக் கொண்டு வஸீலாத் தேடுமுகமாக, யா அல்லாஹ்! நாம் உனது நபியின் சிறிய தந்தையின் பொருட்டால் கேட்கின்றோம் எனவே மழையைப் பொழியச் செய்வாயாக என கேட்போராய் இருந்தார்கள். மழையும் பொழிந்தது." (அறிவிப்பவர் அனஸ் (ரழி) ஆதாரம் : புகாரீ)

மக்கள் நீரில்லாப் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருந்தார்கள். முஆவியா (ரழி) அவர்களும் திமஷ்க் நாட்டுமக்களும் மழை தேடிப் பிரார்த்திப்பதற்காக வெளியானார்கள். முஆவியா (ரழி) மிம்பரில் உட்கார்ந்த போது யஜீத் பின் அஸ்வத் அல் ஜாஷிய்யு (ரழி) அவர்களை எங்கே? எனக் கேட்டார்கள். இவர்களைத் தேடிச்சென்றனர் சிலர். தன்னை தேடப்படும் செய்தி எட்டிய யஜீத் (ரழி) அவர்கள் ஓடோடிச் சபைக்கு வந்ததும். முஆவியா (ரழி) அவர்களின் ஏவல் பிரகாரம் மிம்பரில் ஏறி அவர்களின் பாதத்தடியில் உட்கார்ந்து கொண்டார்கள். யா அல்லாஹ்! நாம் இன்று சிறந்த ஒரு மனிதரின் சிபாரிசை முன்வைக்கின்றோம். யா அல்லாஹ்! உன்னிடம் யஜீத் பின் அல் அஸ்வத் பின் அல் ஜுராஷியின் பொருட்டால் மழையைத் தருமாறு கேட்கின்றோம் என்றனர். முஆவியா (ரழி) அவர்கள். யஜீத் அவர்களை நோக்கி கையை உயர்த்தி கேளுங்கள் எனக்கூற யஜீத் (ரழி) அவர்கள் கையை உயர்தினார்கள். வீற்றிருந்தோர்கள் எல்லோரும் கரங்களை உயர்த்தி துஆக் கேட்டார்கள். திடீரென மேற்குப் பக்கமாக முகில் கூட்டம் தென்பட்டு பெரும் இடிமுழக்கத்துடன் மழை பொழிந்தது. கடைசியில் கூடியிருந்தோர் வீடுகளைச் சென்றடைவதே கஷ்டமாகிவிட்டது. (அறிவிப்பவர் சுலைம் பின் ஆமிர் கபாயிரீ (ரழி) ஆதாரம்: அத்தபகாத்)

அபூ மஸ்வூத் (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள். "ஒரு முறை எனதடிமை ஒருவரை நான் அடித்துக் கொண்டிருந்தேன். அவர் வலி தாங்கமாட்டாமல் அல்லாஹ்வைக் கொண்டு பாதுகாவல் தேடினார். பின்னும் அடித்தேன் பிறகு நபியவர்களைக் கொண்டு பாதுகாப்புத் தேடினார். நான் அடிப்பதை நிறுத்திவிட்டேன். பிறகு நபியவர்கள் சொன்னார்கள், "அல்லாஹ்வின் மீது சத்தியம், நிச்சயமாக நீர் உமது அடிமை பேரில் எவ்வளவு மிகைத்தவராக இருக்கின்றீரோ, அதனை விட அல்லாஹ் மிகைத்தவனாக இருக்கின்றான். இதனைக் கேட்ட நாயகத் தோழர் அவ்வடிமையை விடுதலை செய்துவிட்டார். (ஆதாரம் :முஸ்லிம்)

"...தன்னைக் கொண்டு உதவி நாடியது பாதுகாவல் தேடியது ஷிர்க் என்றோ ஷரிஅத்துக்கு மாற்றமான செய்கை என்றோ நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவ்வடிமையைக் கண்டிக்காததால் நபியவர்களைக் கொண்டு இறைவனிடம் பாதுகாப்புத் தேடுவது மார்க்கச்சட்ட வரம்புக்கு உட்பட்ட செய்கையே ஆகும்." (ஆதாரம் : வஸீலா என்றால் என்ன? மௌலவி ஹாபீஸ் எப்.எம்.அஹ்மது இப்றாஹீம் (காதிரி, ரப்பானி)

இவைகள் அறிவுடையோர்களுக்குப் போதுமான சான்றுகளாகும். விஷயத்தைப் புரிந்து கொள்ளவேண்டும் என்ற மனோநிலையும், உண்மைகளை விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற நேர்மையும் உடையவர்களுக்குச் சில ஆதாரங்களே போதுமானது. இதற்கு நேர்மாற்றமான மனோ நிலையுடையோர்களும் அறிவின்றித் "தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்" என விவாதிப்போர் களுக்கும் எவ்வளவு தான் ஆதாரங்களை குவித்த போதிலும் நம்பப் போவதுமில்லை, உண்மைகளை உணரப்போவதுமில்லை. இதுவொரு யதார்த்தமான நிலையாகும்.

## 26. மரணித்த பின்னரும் உதவி தேடல்

"ஒரு முறை மதீனாவாசிகள் கடுமையான பஞ்சத்தால் பாதிப்படைந்தபோது, அவர்கள் அன்னை ஆயிஷா (ரழி) அவர்களிடம் வந்து முறையிடவே, அதற்கு அன்னையவர்கள் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் ரௌழா ஷரீபுக்குச் சென்று வானத்திற்கும் ரௌழாவுக்கும் திரையில்லாத அளவுக்கு ஒருவழியை (துளையை) ஏற்படுத்துங்கள் என்று சொன்னார்கள். அவர்களும் அவ்வாறே செய்ய, அவர்களின் தேவைக்கேற்ற மழை பொழிந்தது. இதனால் அவ்வருடத்திற்கு ஆமுல் ஃபத்க் என்று பெயரிடப்பட்டது." (ஆதாரம் : ஸுனன் தாரமீ பாகம் 1)

" உமர் (ரழி) அவர்களின் காலத்தில் ஒருமுறை பஞ்சம் ஏற்பட்டது. அப்போது (பிலால் பின் ஹாரித் அல் முஸ்னி என்னும்) தோழர் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் தர்பாரில் ஆஜராகி, யாரஸூலல்லாஹ்! உங்களின் உம்மத்துக்கள் பாதிப்புக்குள்ளாகிக் கொண்டுள்ளனர்.ஆதலால் அவர்களுக்கு மழையைத்' தாருங்கள் என்று முறையிட்டார்." (ஆதாரம்: அல் இஸ்தீஆப் பாகம் 02)

"கருமங்கள் உங்களை இயலாமையில் ஆக்குமாயின் கப்ரையுடையவர்களை (குத்புமார்கள், அவுத்தாதுகள், அப்தால்கள் போன்றவர்களை)ப் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். அந்தக் கப்ருகளை ஸியாரத்தும் செய்யுங்கள்" என்ற ஹதீஸை இமாம் தைலமி (ரஹ்) அவர்கள் முஸ்னதுல் பிர்தௌசில் தெரிவிக்கின்றார்கள்." (ஆதாரம் : குஸூல் ஹகாயிகி பீ ஹதீதிகைரில் கலாயிக் - இமாம் மனாவீ (றஹ்))

"வலிமார்கள், நபிமார்கள், ஸாலிஹீன்கள், உலமாக்கள் போன்றோர்களிடம் உதவிதேடுவது (ஷரிஅத்தில்) ஆகுமானதே! அவர்கள் உயிருடன் இருக்கும் போது உதவி செய்ய முடியுமாகஇருப்பது போல் அவர்கள் மௌத்தான பின்பும் உதவி செய்திட சக்தி உண்டு. நபிமார்களின் முஃஜிஸாத்துக்கள் வலிமார்களின் கராமத்துக்களாகும்." (ஆதாரம் : பதாவா றமலி)

"உதவியின் அடித்தளம் எல்லாம் வல்ல அல்லாஹ்வே என்றும், நல்லடியார்கள் உதவி வெளியாகும் வெறும் தலமாகவே இருக்கின்றனர் என்பதும் ஒரு முஃமினின் அடிப்படை நம்பிக்கையாகும். உலகில் உயிருள்ளவர் மரணித்தவர் எவரும் சுயமாக உதவி செய்யும் ஆற்றல் அற்றவராகவே இருக்கின்றனர். அதனால் அல்லாஹ் கொடுத்த ஆற்றலின் மூலம் உதவி செய்வதில் உயிருள்ளவர், மரணித்தவர் என்ற பேதம் கிடையாது.

எனவே தான் அல்லாஹ்வின் நெருங்கிய வலிமார்களிடம் உதவி தேடுவதனை

ஷரிஅத் அங்கீகரித்துள்ளது. இதனைப் புரியாத சிலர் காபிர்கள் சிலைகளிடம் வேண்டுகின்ற பிரார்த்தனையை வலிமார்கள் விடயத்தில் சமப்படுத்தி வாதிக்கின்றனர். இது ஷரிஅத்துக்கு முற்றிலும் முரணான வாதமாகும். இவ்வாறு வாதிப்பது வழிகெட்ட கவாரிஜிகளின் வாதமாகும்." (ஆதாரம் புஷ்ரா இதழ் 04 மே,ஜுன் 2006)

"எந்த மனிதர் உயிரோடு இருக்கையில் அவரைக் கொண்டு பலன்பெறுவோமோ, அவ்வாறே அவரது கப்ரை ஸியாரத்து செய்வது கொண்டு பலன் பெறுவதும் கூடும்." (ஆதாரம் : இஹ்யா உலூமுத்தீன் - இமாம் கஸ்ஸாலி)

# 27. வஸீலாவின் மூன்று வழிமுறைமைகள்

வஸீலாத் தேடலில் நம்மவர்கள் மூன்று வழிமுறைமைகளைக் கடைப்பிடிக் கின்றனர். இவ் வழிமுறைமைகள் பற்றி இஸ்லாமிய மூலாதாரங்கள் என்ன கூறுகின்றன என்பதை நாம் நோக்குவது இன்றியமையாத ஒன்றாகும். ஏனெனில் வஸீலாத் தேடல் வழி கெட்டவை என்போர்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகும். முதலில் வஸீலாத் தேடலில் பின்பற்றப்படும் மூன்று வழிமுறைமைகள் யாதெனப் பார்ப்போம்.

(1) நம்மிடம் உயிர்வாழ்ந்துவரும் குறித்தவொரு வலியின் - நல்லடியாரின் பொருட்டால் - ஊடாக அல்லாஹ்விடம் உதவி தேடுதலை மேற்கொள்ளல். (2) குறித்தவொரு வலியின் - நல்லடியாரிடம் நேரடியாக உதவி கேட்பதன் மூலம் அல்லாஹ்விடம் உதவி தேடலை மேற்கொள்ளல். (3) மேற்படி இரு வழிமுறைகளிலும் இவ்வுலகில் - நம்மிடையே உயிர் வாழாத அவுலியாக்கள் - நல்லடியார்கள் மூலம் அல்லாஹ்விடம் உதவி தேடுதலை மேற்கொள்ளல்.

இம்மூன்று வழிமுறைமைகளிலும் "ஆளைக் கொண்டு அல்லாஹ்விடம் உதவி தேடுதலை" இஸ்லாம் முற்றாகத் தடை செய்துள்ளதென்ற கருத்துடையவர்களும், இவ்வுலகில்-நம்மிடையே "சம காலத்தில் உயிர் வாழும்" அவுலியாக்கள் - நல்லடியார்கள் மூலம் அல்லாஹ்விடம் உதவி தேடலாம் என்போர்களும், "இவ்வுலகை விட்டு மறைந்த அவுலியாக்கள் - நல்லடியார்கள் மூலம் மாத்திரம்" வஸீலாத் தேடுவது கூடாதென்போர்களும் எம்மிடையே உள்ளனர்.

இவ்வுலகில் - நம்மிடையே உயிர் வாழ்வோர்கள், உயிரற்று மண்ணறையில் வாழ்வோர்கள் என்ற பாகுபாடு அல்லாஹ்வின் நேசர்களைப் பொறுத்தவரை இல்லை என்றே கூறவேண்டும். ஏனெனில், தெளிவாகவும், ஆணித்தரமாகவும் இஸ்லாமிய மூலாதாரங்களான குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஃ, கியாஸ் மூலம் "இறை நேசச் செல்வர்கள் மரணிப்பதில்லை" என்பதை இக்கட்டுரையின் முற்பகுதியில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இவ்வுலகில் வாழ்வோர்கள், வாழாதவர்கள் என்ற வேறுபாட்டிற்கு அப்பால் எல்லா அவுலியாக்களும் - நல்லடியார்களும் அல்லாஹ்விடம் உயிருள்ளவர்களாகவே இருக்கின்றனர் - இருப்பார்கள் என்பது சந்தேகங்களுக்குப் புறம்பாக நிரூபிக்கப்பட்ட நிதர்சனமான ஒரு விடயமாகும். ஆகவே, "அல்லாஹ்விடம் அவுலியாக்கள் உயிரற்று, உயிரோடு என்ற

பாதுபாட்டிற்குட்பட்டு இருக்கின்றனர்" என்ற கருத்து வெறுமையானதென்பது துலம்பரமானவை. எல்லா அவுலியாக்களும் - நல்லடியார்களும் ஏகனிடம் உயிரோடுதான் உள்ளனர் என்பதே மெய்மையான நிலையாகும்.

இனி, எஞ்சுகின்ற வினாக்களான அவுலியாக்களிடம் அல்லது அவர்களின் பொருட்டால் அல்லாஹ்விடம் உதவி தேடலாமா? என்பதாகும். இவ்விரு வழிமுறைமைகளின் மூலம்அவுலியாக்களிடம் உதவி தேடிக் கொள்ளலாம் என்பதே அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தினர்களின் முடிந்த முடிவாகும். இத் தீர்மானத்திற்கான ஆதாரங்கள் அநேகம் உள்ளன, அவற்றிலிருந்து சிலவற்றை நோக்குவோம்.

# 28.

நேரடியாக அல்லாஹ்வின் அவுலியாக்களிடம் உதவி தேடினாலும் யதார்த்தத்தில் அல்லாஹ்விடம் உதவி தேடியதாகவே அமையும். ஏனெனில், "காரியங்கள் யாவற்றையும் செய்பவன்" அல்லாஹ் என்ற அடிப்படையினாலும், விசுவாசிகளின் நம்பிக்கைகளில், "நாடுவது அல்லாஹ் என்றும், அந்த நாட்டத்தின்வெளிப்பாட்டுவழியே - தலமே அவுலியாக்கள்" என்று உறுதி கொண்டிருப்பதினாலுமாகும்.

அதாவது, "செயலைச் செயலுடையவன் அளவில் சேர்க்காது, செயலை அது வெளியாகும் வழியளவில் சேர்த்தலாகும்." இப்படிச் சேர்ப்பதற்கு "நிஸ்பத்து மஜாஸி-இரவல் சேர்மானம்" என்றும், செயலைச் செயலுடையவன் அளவில் சேர்ப்பதற்கு "நிஸ்பத்து ஹக்கீக் - யதார்த்தமான சேர்மானம்" என்றும் கூறப்படும். இதனை உறுதிப்படுத்தும் குர்ஆன் வசனங்கள் நிறையவுள்ளன. அவற்றிலிருந்து ஒரு சிலவற்றை இவ்விடத்தில் நோக்குவது மிகப் பொருத்தமுடையனவாகும்.

"(பத்ரு போரில் எதிரிகளாகிய) அவர்களை நீங்கள் வெட்டவில்லை எனினும் அல்லாஹ் அவர்களை வெட்டினான். (மண்ணை அவர்களின் மீது) நீர் எறிந்த போது (அதை நபியே!) நீர் எறியவில்லை. எனினும் அல்லாஹ்தான் எறிந்தான்..." (அல்குர்ஆன் 8:17)

"அ(வ்விறை)வன் (தான்) உயிரூட்டுகின்றான் இன்னும் (அவ்விறைவனே) மரிக்கச் செய்கிறான் இன்னும் அ(வ்விறை)வனிடமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்." (அல்குர்ஆன்10:56)

"...உங்களில் ஒருவருக்கு மரணம் வந்துவிட்டால், நம்முடைய (மலக்குகளான) தூதர்கள் அவரை மரிக்கச் செய்கின்றனர்..." (அல்குர்ஆன் 6:61)

இது விடயத்தில் நமது நடைமுறை வாழ்விலிருந்து உதாரணத்தைப் பார்ப்போம். "நஸீர் எனும் செல்வந்தர் பலவீடுகளைக் கட்டுவித்து ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்துள்ளார். "எனக் கொள்வோம். இவ்விடத்திற்கு வரும் புதிய மனிதர் ஒருவர் இப்படி வினாவுகிறார் எனவும் கொள்வோம். "இந்த வீடுகளைக் கட்டியவர் யார்?" என்று. அதற்குப்பதிலாக "நஸீர் எனும் சீமான்" எனப் பதிலிருக்கப்படுவதாகவும் கொள்வோம். உண்மையில் இந்தப் பதில் "இரவல் சேர்மானம்" கொடுத்துக் கூறப்படுவதாகும்.

யதார்த்தச் சேர்மானத்தின் அடிப்படையில் பதில் கூறுவதாயின் அவ் வீடுகளைக் கட்டிய கொத்தனின் நாமத்தையே குறித்துரைக்க வேண்டும். எனவே, இதில் யாரைச் சுட்டிக்காட்டினாலும் சரியான பதிலாகவே அமையும். இதற்கு மேலும் வலு சேர்ப்பது போல் பின்வரும் அருள் மறை வசனம் - சம்பவம் அமைகின்றன. சுருங்கக் கூறின் கொத்தன் கட்டினார் யதார்த்தச் சேர்மானம். சீமான் கட்டினார் இரவல் சேர்மானம்.

## 29. இரவல் சேர்மானத்திற்கு குர்ஆனே ஆதாரம்.

“லி அஹபலகி குல்மான் ஸகிய்யான் - நான் உனக்கு பிள்ளைதர வந்துள்ளேன்.” (அல்குர்ஆன் 19:19)

மர்யம் (அலை) அவர்களிடம் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்ததாகக் குர்ஆன் குறிப்பிடுகின்றது. மேற்படி வசனத்தின் அரபுச் சொற்களுக்கு, நேரடியான அர்த்தம் மேற்படியதாகவே அமையும். இதனை நாம் மேலோட்டமாகப் பார்க்கின்ற போது பல்வேறு கேள்விகள், கருத்துக்கள் எழுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

குறிப்பாக “நபி ஈஸா (அலை) அவர்களின் தந்தை ஜிப்ரீல் (அலை) அவர்களா? என்ற வினாவை முன்வைக்கும். (நஊது பில்லாஹி மின்ஹா) நிச்சயமாக இவ்வர்த்தம் எந்த அடிப்படையிலும் இந்த வசனத்திற்கு இல்லை. அப்படியானால் இவ்வசனத்தின் சரியான கருத்துத்தான் என்ன? என்று ஆராய்வோமானால் பின்வருமாறு இவ்வசனத்தின் பொருள் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

“அல்லாஹ் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலம் அல்லது அவர்கள் ஊடாகக் குழந்தைச் செல்வம் பற்றிய நற்செய்தியை மர்யம் (அலை) அவர்களிடம் வெளிப்படுத்தினான்.” என்பதாகும். ஜிப்ரீல் (அலை) அவர்கள் “நான் உனக்குப் பிள்ளைதர வந்துள்ளேன்” எனக் கூறிய போதிலும் யதார்த்தத்தில், “அல்லாஹ்வே அக்குழந்தையைத் தனது சக்தி - குத்ரத் எனும் பண்பு மூலம் அருளுகின்றான்.” என்பது தெளிவானது.

இவ்விடத்தில் நாம் கூர்ந்து நோக்க வேண்டியது எதுவென்றால், அல்லாஹ்வின் அருள்கள், அற்புதங்கள், வல்லமைகள் போன்ற வெளிப்பாடுகளில் ஒன்றை மேற்படி வசனத்தில் அல்லாஹ் சொல்லிக் காட்டுகின்றான். அதேநேரம் அந்தச் செயலைச் செயலுடையவன் பால் சேர்த்து அதாவது யதார்த்தச் சேர்மானமாகத் தனது செயல் எனக்கூறாது, அந்த அருள் வெளிப்பாடு வெளியாகிய வழியை - தலமான ஜிப்ரீல் (அலை) அவர்கள்பால்சேர்த்து - இரவல் சேர்மானத்தைக் கொடுத்துக் கூறுகின்றான்.

இஃது போன்று தான் அல்லாஹ்வின் அவுலியாக்களிடம் - நல்லடியார்களிடம் நாம் நேரடியாக உதவி தேடினாலும் அது அல்லாஹ்விடம் தேடியதாகவே அமையும். இரவல் சேர்மானமே இங்கு பயன்படுத்தப்படுகின்றது. என்பதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும். ஏனெனில், “எமதெந்த வேண்டுகோள்களையும், எந்தக் காரியங்களையும் நிறைவேற்றித் தருபவன் அல்லாஹ்வேயன்றி வேறில்லை.”

ஆனால், "அல்லாஹ்வின் அருள்கள், செயல்கள் வெளிப்படும் வழிகளில் - தலங்களில் அவுலியாக்களும் ஒரு பாதையாக இருக்கின்றனர்." என்ற விசுவாசப் பிரமாணமே ஒரு விசுவாசியிடம் இருக்க முடியும் - இருக்க வேண்டும். இத்தகைய வலுவான நம்பிக்கையுடையோர்களிடையே, அவர்களின் தௌஹீத் நம்பிக்கைகளுக்கோ, தவக்கல் தன்மைகளுக்கோ எதிரான பண்புகள் ஏற்பட்டு விட முடியாததென்பது உறுதியான சங்கதியாகும்.

அல்லாஹ் ஒவ்வொரு காரியங்களையும், ஒவ்வொன்றின் மூலமே செய்கின்றான். அதற்கென்றே அவற்றினைப் படைத்து நியமித்துள்ளான். இதனைப் பல்வேறு சம்பவங்களும் எமக்குத் தெளிவாக விளக்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அவுலியாக்களிடம்-நல்லடியார்களிடம் அல்லது அவர்களின் பொருட்டால் உதவி தேடிக் கொள்வதென்பது யதார்த்தத்தில் அல்லாஹ்விடம் உதவி கோரியதாகவே அமையும் என்பதை மேற்படி ஆதாரங்கள் தெட்டத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன.

## 30. வஸீலாத் தேடலை வலியுறுத்தும் மேலும் சில ஆதாரங்கள்

அல்லாஹ்வின் அவுலியாக்களிடம் - நல்லடியார்களிடம் அல்லது அவர்கள் ஊடாக அல்லாஹ்விடம் உதவி தேடிக் கொள்ளலாமென்பது பற்றி நிறையச் சான்றுகள் இஸ்லாமிய மூலாதாரங்களில் குவிந்துள்ளன. அவற்றிலிருந்து சிலவற்றை ஞாபகங்களுக்காக இரை மீட்டிக் கொள்வோம். படிப்பினை களையும் கற்றுக் கொள்வோம்.

"என்னுடைய ரஹ்மத்து (டைய-அருளு)டைய கூட்டத்தார் (அவுலியாக்) களிடத்தில் உங்களுடைய தேவைகளைத் தேடிப் பெற்றுக் கொள்ளுங்கள்" (ஆதாரங்கள் : ஸுனன் குப்றா, பைஹகீ (ரஹ்), முஃஜம் அஸ்வத் - தப்றானீ (ரஹ்) ஷரஹுஜாமிஉஸ்ஸகீர் - இமாம் மானவீ (ரஹ்), ஷரஹு ஐனுல் இல்மி - இமாம் முல்லா அலிகாரி (ரஹ்)

"நிச்சயமாக அல்லாஹ்வுடைய அடியார்களிற் சிலர் இருக்கின்றனர். (அவர்கள்) ஜனங்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கென்றே அ(வ்விறை)வன் அவர்களைச் சொந்தப்படுத்தி வைத்திருக்கின்றான். தங்களுடைய தேவைகளைப் பூர்த்தியாக்கிக் கொள்வதற்காக மக்கள் அவர்களை அண்டுவார்கள்...." (அறிவிப்பவர் : இப்னு உமர் (ரழி) ஆதாரம் : தப்ரானி, அல்ஜாயியுஸ் ஸகீர் - முதலாம் பாகம்.)

"கருமங்களில் திகைப்படைந்து விடுவீர்களேயானால் கப்றுறுகளை உடையவர்(களை - அவுலியாக்)களைக் கொண்டு உதவி தேடிக் கொள்ளுங்கள்." என ஏந்தல் நபி (ஸல்) அவர்கள் எடுத்துரைத்தார்கள். (அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னுமஸ்ஊது (ரழி) ஆதாரம் : தஸ்ரீஸுல் அவ்தத் தர்ஜுமா ஷரஹு பர்ஜக்கி")

## சில சந்தேகங்களும் விளக்கங்களும்

அவுலியா என்று குறிப்பிடப்படுபவர் (உதாரணமாக முஹ்யத்தீன் அப்துல் காதிர் ஜீலானி) அல்லாஹ்வின் நேசர்கள்தான் என்பதற்கு என்ன ஆதாரம்

என்று சிலர் கேள்விகேட்பதுண்டு. அவர்களுக்கான பதிலை பின்வருமாறும் தெரிவிக்க முடியும்.

குறித்த அவுலியா வாழ்ந்த சமகாலத்தில் வாழ்ந்த மக்களினால் இறைநேசர் என அவரை அடையாளம் கண்ட நிலையில்தான் அம்மக்கள் அவரை வேறுபடுத்தி அடக்கியதும் ஸியாரம் கட்டியதுமாகும். அக்காலத்தில் வாழ்ந்த பலர்களின் மரணங்களை சந்தித்த நிலையில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரை மட்டுமே அம்மக்கள் அவுலியாவாக நிர்ணயித்திருப்பதை இது காட்டுகின்றது. அவ்வாறாயின் சம கால மக்களினால் அவுலியா என முதலில் அடையாளம் காட்டப்பட்ட அவர்களை, அடுத்து வந்த மக்களும் அவர்களையடுத்து வந்த மக்களும் என்ற அடிப்படையில் குறித்த அவுலியாவின் அடையாளம், மக்களுக்கு சொல்லப்பட்டும், உறுதிப்படுத்தப் பட்டும் அவர்களின் வரலாறு வந்திருக்கின்றது.

இந்த உண்மையினை நாம் இன்று நேரடியாகவே அவதானிக்கலாம். எம்மத்தியில் வாழும் எத்தனை பேர்கள் மரணித்தாலும் அவர்களில் யாரையும் நாம் அவர்களின் மரணத்திற்கு முன்பும் சரி பின்பும் சரி அவுலியாவாக அடையாளப்படுத்த துணியவில்லை. இது போன்றே நமக்கு முந்தி வாழ்ந்த மக்களும் வாழ்ந்திருப்பார்கள். ஏனெனில் நமது இஸ்லாமியப் பேணுதலைப் பார்க்கிலும் நமது முன்னோர்கள் இஸ்லாத்தின் மீது அதிக பற்றுடையவர்களாக திகழ்ந்தார்கள் என்பது நிஜமான வரலாறு. ஆயின் அவர்கள் பிழையாக அடையாளம் காட்ட முனைந்திருக்க மாட்டார்கள். இஸ்லாத்தின் வாழ்வு முறையில் சறுக்கல் நிலையுடைய நம்மால் கூட பலரை அவுலியா என சித்தரிக்க பயப்படுகின்றோம். உண்மையில் அல்லாஹ் தனது இறைநேசர்களை மக்களுக்கு அடையாளப்படுத்த விரும்புகின்ற போது அதற்கான வழியையும் திறந்து விடுவான். ஏனெனில் விலாயத்தை பகிரங்கப் படுத்துவதும் அவனது நாட்டத்திற்குட்பட்டது.

தாய் தந்தையர் தமது பிள்ளைகள் மீது அளவுகடந்த அன்பைச் செலுத்துவதுமுண்டு. பிள்ளைகள் தமது பெற்றோர்கள் மீது வரம்பு மீறிய விருப்புக் கொள்வதுமுண்டு. கணவன், மனைவி, நண்பர் என்ற பல உறவுகளுக்கிடையில் எல்லை மீறிய நேசம், பாசம், காதல் என்ற உணர்வு மேலீடுகள் ஏற்படுவதுண்டு. அப்படியிருந்தும் இவ்வாறான எண்ணத்தின் வெளிப்பாடாக யாரையும் நாம் அவுலியாக்களாக ஆக்கிப்பார்க்கவில்லை. இந்த நிலை தான் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் உம்மத்துக்களன முஸ்லிம்களிடம் இருந்து வருகின்றது.

ஆகவே ஆதாரமின்றி, அவுலியாக்கள் என இஸ்லாம் வரையறுத்துக் காட்டும் பண்புடையவர்கள் அல்லாதவர்களை அவுலியா என உயர்த்திப் பேசமாட்டார்கள். எனது 45 வயதுகாலப்பகுதியில் எனதூரில் சுமார் 10000 பேர்களின் மரணங்களை சந்தித்தும் அறிந்தும் வைத்துள்ளேன். அப்படியிருந்தும் ஒரேயொருவரான அல்வாஹித் மௌலானா அவர்களை மட்டுமே இறைநேசராக மதிக்கப்பட்டு ஸியாரம் கட்டப்பட்டுள்ளது. உண்மையில் அவர்களின் வாழ்வு முறைமையும் அவர்களின் இயல்புகளும் இஸ்லாம் வரையறுத்துக் காட்டும் இறைநேசர்களின் பண்புக்குள் அடைக்கலம் பெற்றிருந்ததை ஊரே அறியும். எனில் வெறுமனே எழும் நேசத்தினால் யாரும் யாரையும் இறை நேசர் என பிரகடனம் செய்யும் மனோநிலைக்குள் முஸ்லிம்கள் இல்லை என்பதுவே உண்மை நிலையாகும்.

மரணித்தவர்கள் எப்படி உயிரோடு இருப்பவர்களுக்கு உதவ முடியும் என்றதோர் மலைப்பான கேள்வியை மிகுந்த இறுமாப்புடன் எழுப்பும் சிலரையும் நாம் இன்று காணக்கூடியதாகவுள்ளன. அவர்களுக்கான பதில் இதோ! நபி மூஸா (அலை) அவர்கள் தமது மரணத்தின் பின்னர் தமது கப்ரைவிட்டு வெளியே வந்து தொழுததும் மிஃராஜில் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு 50 நேரத் தொழுகை வழங்கப்பட்டதை ஐந்து நேரத் தொழுகையாக குறைக்கும் வரை ஆலோசனை தெரிவித்ததும் மரணித்தவர்களினால் உயிரோடு இருப்பவர்களுக்கு உதவ முடியும் என்பதற்கு மிகவும் பலமான ஓர் ஆதாரமாகும். அதுமட்டுமன்றி மரணித்ததன் பின்னர் நல்லடியார்களினால் பூமி, பூமிக்கு வெளியே, சுவர்க்கம், வானம் என்றெல்லாம் சஞ்சாரம் செய்யவும் முடியும் என்பதற்கும் இது போதிய ஆதாரமாகும்.

மரணித்தவர்களிடம் உதவிதேடுதல் கூடாது என்பவர்களிடம் ஒரு ஷிர்க்கான கருத்து இருப்பதை அவதானிக்கலாம். அதாவது உயிரோடு இருப்பவர்கள் சுயமாக அடுத்தவர்களுக்கு உதவுகின்றனர். ஆனால் மரணித்தவர்களினால் இந்த சுயமான உதவுதல் இயலாது என்கின்ற கருத்தில் தான் இப்படி சந்தேகம் எழுப்புகின்றனர். உண்மையில் உயிரோடு இருப்வர்களானாலும் சரி மரணித்தவர்களானாலும் சரி சுயமாக இயங்குபவர்கள் எவரும் கிடையாது. இயங்கவைப்பவன் அல்லாஹ். அவனால் இயலாதது எதுவுமே இல்லை. ஆகவே இந்த பேதமையின் அடிப்படையை முன்னிறுத்தி இவ்வாறு கேள்வி எழுப்புவதில் எவ்வித அர்த்தங்களும் இல்லை.

## 32. அவுலியாக்களிடம் நேர்ச்சை வைக்கலாமா?

மேற்படி ஆதாரங்கள் யாவும் அல்லாஹ்வின் தோழர்களான அவுலியாக்களிடம் - நல்லடியார்களிடம், அல்லது அவர்களின் பொருட்டால் உதவி தேடலாமென்பதை ஐயங்களுக்கு அப்பால் தெளிவாக வலியுறுத்துகின்றன. சத்தியத்தை அறிந்து அதன் வழியில் வாழவேண்டும் என்ற எண்ணமுடையோர்களுக்கு இவ்வாதாரங்கள் போதுமான நிறைவை வழங்குமென்பதில் சந்தேகமில்லை.

இக்கட்டுரையாக்கத்தின் இலக்குகளில் மற்றொரு பகுதியான அல்லாஹ்வின் அவுலியாக்களின் பெயரில் நேர்ச்சைகள் வைக்கலாமா? என்பது பற்றிய கண்ணோட்டத்தின் பக்கம் நமது சிந்தனைகளைச் செலுத்தி உண்மைகளைக் கண்டறிந்து கடைப்பிடித்து வாழ திடசங்கற்பங்களை பூணுவதற்கு நாம் ஒவ்வொருவர்களும் ஆயத்தமாக இருக்கவேண்டிய காலகட்டத்தில் இருந்து கொண்டிருக்கின்றோம்.

ஏனெனில், “நேர்ச்சை”எனும் அம்சத்தில் எம்மவர்களிடையே ஒரே கருத்து நிலவவில்லை. மாறாக பல்வேறு தோணங்களில் கருத்துக்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது வோர் ஆரோக்கியமற்ற சூழலினை நம்மத்தியில் தோற்றுவித்துள்ளன. பிளவுகளையும், கோஷ்டிப்பிரிவுகளையும், அது தொடர்பில் நாம் தரிஷித்துக் கொண்டிருக்கின்றோம். அவற்றினையும் உண்மையாக நேர்ச்சை வைத்தலில் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டிய கருத்துக்கள் எதுவென்பதையும் பார்ப்போம்.

நேர்ச்சை எனும் அமல் - வணக்கம் இஸ்லாத்தின் வரலாற்றில் நீண்ட

பாரம்பரியத்திற்குட்பட்ட ஒன்றாகும். அதேநேரம் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களிடமும் இந்த நேர்ச்சை முறைமை இருந்து வந்திருக்கின்றது. பொதுவாக நேர்ச்சை எனும் செயற்பாடு மிகவும் தொன்மையானது என்பதற்கு பின்வரும் நிகழ்வுகள் தக்க சான்றுகளாகும்.

"தமக்கு மகப்பேறு ஏற்படின் அம்மகனை இறைவனுக்கு பலி கொடுப்பதாக நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் நேர்ந்து கொண்டதும் அதன்படி இஸ்மாயில் (அலை) அவர்கள் பிறந்து வயதேறப் பெற்றதும் இந்த நேர்த்தியை அவர்களுக்கு அல்லாஹ் கனவின் மூலம் நினைவுறுத்தியதும் அதனை நிறைவேற்ற அவர்கள் முன்வந்ததும், பின்னர் இறையருளால் இஸ்மாயில் (அலை) அவர்களின் உயிர் காப்பாற்றப்பட்டதும் பிரசித்த வரலாறாகும்.

தமக்கு பத்து ஆண்மக்களை இறைவன் நல்கின் அவர்களில் ஒருவரை இறைவனுக்கு பலியிடுவதாக அப்துல் முத்தலிப் நேர்ந்து கொண்டதும் அதன்படி நபி (ஸல்) அவர்களின் தந்தை அப்துல்லாஹ்வை பலியிடச் சென்றபோது, மக்கள் அனைவரும் அவரை அவ்விதம் செய்யவேண்டாம் என்று தடுத்ததன் பேரில், அம்பினால் குறிபார்த்து அவருக்கு பதிலாக 100 ஒட்டகைகளை அறுத்துப் பலியிட்டதும் வரலாறு தரும் சான்றாகும்.

தமக்கு ஒரு மகவு பிறப்பின் அதனை இறை பணியில் ஈடுபடுத்துவதாக ஹன்னா நேர்ந்து கொண்டவண்ணம் ஒரு பெண் மகவு பிறந்ததும், அதற்கு "ஊழியம் புரிபவள்" என்று பொருள்படும் மர்யம் எனும் பெயரிட்டு பைத்துல் முஹத்தஸ் பள்ளியின் ஊழியத்திற்காக அற்பணித்தாள் ஹன்னா.

இஸ்லாத்தை தழுவதற்கு முன் உமர் (ரழி) அவர்கள் கஃபாவில் இஃதிகாஃப் இருப்பதாக நேர்ந்து கொண்டுள்ளார்கள். பத்ரு போருக்கு பழிவாங்கும் வரையில் தான் கூந்தல் முடிவதில்லை என்றும், தன் கணவனை அணுகுவதில்லை என்றும் அபூ சுப்யானின் மனைவி ஹிந்த் பிரதிக்ஞை செய்தாள். தம் நோய் நீங்கப் பெறின் தாம் ஒட்டகத்தின் இறைச்சியையும் அதன் பாலையும் அருந்துவதில்லை என நபி யஃகூப் (அலை) அவர்கள் நேர்ந்து கொண்டனர்." (ஆதாரம் : இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் பாகம் 03)

"நேர்ச்சை எனும் அமல் அல்லாஹ்வுக்குரியது. ஆயின் அவுலியாக்களின் பெயரில் நேர்ச்சை வைத்தல் ஆகாது னி விலக்கப்பட்டதாகும்" என்பது ஒரு பகுதியினர்களின் கருத்தாகும். இவ்வரிசையில் இப்னு தைமிய்யா, முஹம்மது இப்னு அப்துல் வஹாப் போன்றோர்களின் இருப்பு குறிப்பிடத்தக்கது.

நேர்சை மட்டுமல்ல, எந்த அமல்களானாலும் அது அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தானதாகும். எனின் இதுவொரு பொதுப்படையான சட்ட விதியாகும். இதனை நேர்ச்சை விடயத்திற்கு மட்டுமே பொருத்தமுடையதாக்க முனைவது விவேகமற்ற முயற்சியாகும்.

## 33. நேர்ச்சைகள் இரு வகைப்படும்

"...நேர்ச்சையிலிருந்து எதனை நீங்கள் நேர்ச்சை செய்தாலும் நிச்சயமாக அதனை அல்லாஹ் அறிவான்..." (குர்ஆன் 2:270) இந்த அருள் மறை

வசனத்தின் மூலம், "மனிதர்கள் எந்த நோக்கத்தில் நேர்ச்சை வைத்தாலும் அதனை அல்லாஹ் நன்கறிகின்றான்" என்பதைச் சொல்வதன் மூலம், "தீய எண்ணத்தில் நேர்ச்சை வைத்தலாகாது" என்பதை உணர்த்துகின்றது. நல்லுணர்ச்சி பெறும் நெஞ்சங்களுக்கு இது மறைவன்று.

"...தமது நேர்ச்சைகளை நிறைவேற்றட்டும்!" (குர்ஆன் 22:29)

"அவர்கள்தாம் (தங்கள்) நேர்ச்சைகளை நிறைவேற்றி வந்தவர்கள். (கியாம)நாளை அவர்கள் அஞ்சி வந்தார்கள்" (குர்ஆன் 76:7)

நேர்ச்சையை நிறைவேற்றுவது நல்லடியார்களினதும் சுவர்க்கத்துக்கு இட்டுச் செல்லக் கூடியதும் என்பதை இவ்வசனங்கள் எடுத்துக் காட்டுகின்றது. ஆகவே தான் அஹ்லுல் சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கைப்படி நேர்ச்சை எனும் அமல் அல்லாஹ்வினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வழிமுறையாகும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொதுவாக "நத்ர்" எனும் அரபுச் சொல்லுக்கு நேர்ச்சை என தமிழில் பொருள் கொள்ளலாம் இதன் வரையறையாகப் பின்வரும் கருத்தை ஏற்கலாம். "நத்ர்" - நேர்ச்சை என்பது ஏதாவது ஒரு நோக்கம் (நல்லெண்ணம்) நிறைவேறுவதற்காத் தன் மீது கடமையில்லாத ஒரு செயலை அல்லது ஒரு காரியத்தை தன் மீது விதித்துக் கொள்வதாகும்." என அர்த்தப்படும். அல்லாஹ்வின் தோழர்களின் நாமத்தால் நேர்ச்சை வைக்கலாம் என்பது இஸ்லாத்தின் தெளிவான கோட்பாடாகும். நேர்ச்சை தடுக்கப்பட்டிருப்ப தெல்லாம் தீய எண்ணத்தில் வேண்டுதலை மேற்கொள்வதையும், மற்றவர்களுக்கு கேடு ஏற்பட விண்ணப்பிப்பதையுமே.

நேர்ச்சையில் ஆகுமான - அனுமதிக்கப்பட்ட ஒரு பகுதியும் உண்டு. இது இரு வகையில் நாம் மேற்கொள்ள வழி விடுவதை இஸ்லாமிய அடிப்படைச் சட்ட மூலாதாரங்களான குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஃ, கியாஸ் என்பன மிக துலம்பரமாக முன்வைக்கின்றது. இதன் விபரங்களில் சிலதை நாம் நோக்குவோம்.

அனுமதிக்கப்பட்ட நேர்ச்சை இருவகைப்படும். அதாவது "அல்லாஹ்வின் பெயரால்" வைக்கும் நேர்ச்சைக்கு "ஹகீகியா" என்றும், "அவுலியாக்களின் நாமத்தால்" அல்லாஹ்விடம் வைக்கும் நேர்ச்சைக்கு "புரூஇயி" என்றும் கூறப்படும். "ஹகீகியா" வகையைச் சேர்ந்த நேர்ச்சைகள் பின்வரும் தன்மைகளைக் கொண்டிருக்கும். நோன்பு, தொழுகை, ஸதக்கா போன்ற ஓர் அமலை அல்லாஹ்வுக்குச் செய்வதாக தன்மீது கடயைாக்கிக் கொண்டு செய்யும் இபாதத்திற(கள்-வணக்கங்)கள் அல்லாஹ்வின் பெயரில் மேற்கொள்ளும் நேர்ச்சையாகும்.

அவுலியாக்களுக்கு நேர்ச்சை வைப்பதென்பது, "குர்ஆனை ஓதி ஹதியாச் செய்வது, விருந்தளிப்பது" போன்ற ஒரு நல்லமலைச் செய்து அதன் தவாபை உரியவர்களுக்கு ஹதியாச் செய்வது. இதற்குத்தான் "புரூஇயி" என அரபியில் கூறப்படும். எனவே, அவுலியாக்களின் - நல்லடியார்களின் பெயரில் வைக்கும் நேர்ச்சை என்பதும். அல்லாஹ்வின் பெயரில் வைக்கும் நேர்ச்சை என்பதும் ஒன்றல்ல ஒரே தன்மைகளைக் கொண்டதுமில்லை. இவ்விரு வழிமுறைமைகளும் வெவ்வேறு அடிப்படைகளைக் கொண்டதுமாகும்.

# 34. அனுமதிக்கப்பட்ட நேர்ச்சையும், அதன் வழிமுறைமைகளும

நமது மக்கள் நேர்ச்சையை முன்னிறுத்தும் போது நிபந்தனையோடும், நிபந்தனையற்றும் செயல்படுத்துகின்றனர். நிபந்தனையோடு செய்யும் நேர்ச்சை என்பது "நீ இந்தக் காரியத்தை எனக்கு நிறைவேற்றித் தந்தால் நான் உனக்கு இதனைச் செய்கின்றேன்" என்று கூறுவதை, எண்ணுவதை குறிக்கும். நிபந்தனையின்றி செய்யும் நேர்ச்சை என்பது "எந்தக் காரியத்தையும் முன்வைக்காமல் அல்லாஹ்வுக்காக ஓர் அமலை மேற்கொள்வதாக" எண்ணுவது, கூறுவதாகும்.

இவ்விரு முறைகளையும் இஸ்லாம் அனுமதித்திருக்கின்றது. நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்விரு முறைகளிலான நேர்ச்சையை மறுக்காது விட்டிருப்பதே இச்செயற்பாடுகள் ஆகுமானவை என்பதற்கு போதுமான ஆதாரமாகும். இதனை பின்வரும் இரு ஹதீஸ்கள் தெளிவாக்கி வைக்கின்றன.

"ஒரு மனிதர் நபியுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் ரஸூலே! அல்லாஹ் உங்களுக்கு மக்காவை வெற்றியாக்கித் தந்தால் பைத்துல் முகத்தஸில் நான் தொழுவதாக நேர்ச்சை வைத்துள்ளேன் என்று கூறினார். அதற்கு நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் அங்கு தொழு என்றார்கள்" (அறிவிப்பவர் : ஜாபிர் (ரழி) ஆதாரம் அஹ்மத்)

"நான் இப்னு உமர் (ரழி) அவர்களோடு இருந்தேன். அப்போது அவர்களிடம் ஒரு மனிதர் வந்து நான் உயிரோடு இருக்கும் காலமெல்லாம் ஒவ்வொரு செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் நோன்பு நோற்பதாக நேர்ச்சை செய்துள்ளேன். அல்லாஹ் நேர்ச்சையை நிறைவேற்றுமாறு ஏவுகின்றான்... என்று அவர்கள் கூறினார்கள்" (அறிவிப்பவர் : ஸியாத் பின் ஸுபைர் ஆதாரம்: புகாரீ)

இந்த ஹதீஸை நபி (ஸல்) அவர்கள் கூறவில்லை. என்றாலும் நபி (ஸல்) அவர்கள் இந்த முறையைத் தடுத்திருந்தால் உமர் (ரழி) இதற்கு அனுமதி அளித்திருக்க மாட்டார்கள். நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் தடுக்கவில்லை என்பதனால்தான் உமர் (ரழி) அவர்கள் இதனை அங்கீகரித்துள்ளார்கள். இது உமர் (ரழி) அவர்கள் தவறான எதனையும் அனுமதிக்கமாட்டார்கள் என்ற கருத்தையும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

"மக்கா வெற்றி நாளன்று ஒருவர் எழுந்து நின்று நாயகமே! நிச்சயமாக, அல்லாஹ் தங்களுக்கு மக்காவை வெற்றி கொள்ள வைப்பானாயின் நான் பைத்துல் முஹத்தஸில் இரண்டு ரக்அத் அல்லாஹ்வுக்காக தொழுவதாக நேர்ச்சை செய்திருக்கிறேன் என்று கூறினார். அதற்கு நபியுல்லாஹ் (ஸல்), அவர்கள் ஹஇங்கேயே தொழுதுவிடும்' என்று கூறினார். மீண்டும் அவர் இதனை அவர்களிடம் கூறினார். அப்பொழுது அவர்கள் இங்கேயே தொழுதுவிடும், என்று கூறினார். மீண்டும் அவர் இதனை அவர்களிடம் கூறினார். எனவே, நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஉம் விருப்பப்படி செய்யும்' என்று கூறினார்." (அறிவிப்பவர் ஜாபி (ரழி) ஆதாரம் : அபூதாவூத்)

"ஒரு பெண் நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது அல்லாஹ் தனக்கு நலன் நல்கினால் நிச்சயமாக, தான் பைத்துல் முஹத்தஸ் சென்று தொழுவதாக

நேர்ந்துகொண்டாள்" (அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரழி) ஆதாரம் :முஸ்லிம்) "நாயகமே! நிச்சயமாக நான் தங்களின் தலையில் தஃப்பஃபு அடிக்க நேர்ச்சை செய்துள்ளேன்" என்று ஒரு பெண் கூறினாள். (அதற்கு) அவர்கள் "உம்முடைய நேர்ச்சையை நிறைவேற்றிவிடும்" என்று கூறினார்கள்" (அறிவிபபவர் : அம்ருப்னு ஷுஐப் ஆதாரம் : அபூதாவூத்)

அலி (ரழி) அவர்கள் பாத்திமா (ரழி) அவர்களிடம் வந்தபோது பாத்திமா (ரழி) அவர்கள் தீனார் காசைக் கொடுத்து இன்ன எஹுதியிடம் சென்று மாவு வாங்கிவரும்படியாகச் சொன்னார்கள். அலி (ரழி) அவர்கள் அவ்வாறே அந்த எஹுதியிடம் சென்று தினாரைக் கொடுத்து மாவை வாங்கினார்கள். "தாம் நபியெனக் கூறுகின்றார்களே அவர்களது மருகரா நீங்கள்?" என வினாவினார் அந்த எஹுதி. ஹஆம்' என்றார்கள் அலி (ரழி). பணத்தைத் தாங்கள் திரும்பப் பெற்றுச் செல்லுங்கள் அந்த நபியவர்களுக்கு மாவை நேர்ச்சையாக எடுத்துச் செல்லுங்கள்" என்பதாக அந்த எஹுதி தெரிவித்தார். (அறிவிப்பவர் : ஸஹலு புனு ஸஃது (ரழி) ஆதாரம் : அபூதாவூத்)

"ஸஹாபி ஒருவர் பவானா என்ற இடத்தில் ஒட்டகம் ஒன்றை அறுப்பதற்கு நேர்ச்சை செய்திருந்தார். அந்த ஸஹாபி நபியுல்லாஹ் (ஸல்) அவர்களிடத்தில் வந்து இவ்விஷயத்தைக் கூறினார்கள். "அவ்விடத்தில் முஷ்ரிக்களுடைய விக்கிரகம் ஏதாவது உண்டா?" என்று நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் கேட்க, "அங்கு அப்படிக்கிடையாது" என்றார். "காபிர்களுடைய திருவிழா ஏதாவது நடைபெறுவதுண்டா என்று?" வினவியதற்கு "அவ்விதம் இல்லை" என்றார் "அப்படியானால் உம்முடைய நேர்ச்சையை நிறைவேற்றும்" என நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் அனுமதியளித்தார்கள்." (ஆதாரம் : அபூதாவூத்)

"எவரொருவர் எந்த வஸ்த்துவை எந்த இடத்திற்கு நேர்ச்சை செய்கின்றாரோ அதை அதே இடத்திற்கு நிறைவேற்றிக் கொடுக்க வேண்டியது வாஜிபு (கடமையாகும்)." (ஆதாரம்: மிர்காத் ஷரஹு மிஷ்காத் - இமாம் முல்லா அலிகாரி (ரஹ்))

மேற்கண்ட தெளிவான சான்றுகளின் அடிப்படையில் அவுலியாக்களின் - நல்லடியார்களின் பெயரில் நேர்ச்சை செய்து அல்லாஹ்விடம் உதவி தேடிக் கொள்வது இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஷிர்க்கானதோ விலக்கப்பட்டதோ அல்ல. மாறாக அனுமதிக்கப்பட்ட செயல்களில் ஒன்றாகுமென்பது மிகத் தெளிவானது. எனவே அல்லாஹ்வின் அவுலியாக்களிடம் - நல்லடியார்களிடம் நேரடியாகவோ, அல்லது அவர்களின் பொருட்டாலோ அல்லாஹ்விடம் உதவி தேடிக் கொள்ளலாமென்பது தெட்டத் தெளிவாகி விடுகின்ற ஒன்றாகவே உள்ளன.

அதுமட்டுமன்றி இவ்விடயம் தௌஹீதிற்குப் புறம்பான ஷிர்க்கானதுமல்ல. இவ்வாறு மிகத் தெளிவாக்கப்பட்ட பின்னரும் பிளவுபட்டுப் போவது ஈடேற்ற வழியை விட்டு, வழிநடாத்தும் என்பதையும் நாம் மறந்துவிடல் ஆகாது. அஹ்லுஸ் சுன்னத் வல் ஜமாஅத்தினர்களின் கொள்கையைப் பின்பற்றி வாழ்வோமாக! அல்லாஹ்வின் தோழர்களின் மூலம் வெளிப்படும் அல்லாஹ்வின் நல்லருள்களிலும் நாம் பங்காளிகளாக மாறுவோமாக!

"எண்ணங்களுக்கு ஏற்பவே செயல்களாகும்." (ஆதாரம் : புகாரீ)

**அனைத்தையும் மிக அறிந்தவன் அல்லாஹ் ஒருவனே!**

# தகவல் மூலம்


1) அல்குர்ஆன் (தர்ஜமா)
2) அஃபா
3) அகமியம் பொங்கும் அஃலஃபல் அலிஃ
4) அடியார்களை ஆதரிக்கும் ஞானம்
5) அத்தக்ரீப்
6) அத்தபகாத்
7) அபூதாவூத்
8) அர்பயீன் ஹதீஸ்
9) அல் இஸ்தீஆப்
10) அல் முஹத்தப்
11) அல் அஹ்காமுஸ் தல்தானியா
12) அல் பிதாயா வன்னிஹாயா (பாகம் 2)
13) அல் மிஸ்பாஹ் (மாதப் பத்திரிகை 6/3/1992)
14) அஷ் ஷிபா
15) இப்னுமாஜா
16) இருவழிக்கு ஒருவழித் தேர்தல் (பத்வா)
17) இறைநேசச் செல்வர்களும் ஷைத்தானின் தோழர்களும்
18) இன்ஸானுல் காமில்
19) இஸ்லாமியக் கொள்கை மணிக் கோவை
20) இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் (பாகம் 1, 2, 3, 4)
21) இஸ்லாமின் இறைக் கோட்பாடு
22) இஸ்லம் கூறும் அடிப்படைக் கொள்கைகள்
23) இஜ்மால்
24) கப்றுகளும் ஸியாரத்தும்
25) கன்ஸுல் உம்மால் (பாகம் 2)
26) கஷ்புல் கும்மா
27) கஸீதத்துல் புர்தாஹ் மூலமும் உரையும்
28) கிதாபுஷ் ஷிபா (பாகம் 1)
29) குணங்குடி மஸ்தான் சாஹிபு பாடல்கள்
30) குஸுல் ஹகாயிகி பீ ஹதீதிகைரில் கலாயிக்
31) குர்ஆன் தர்ஜமா
32) சத்தியத்தின் மார்க்கம்
33) சத்திய முழக்கம் - முனாழரா II
34) சுனன் குப்றா
35) சுன்ன் தைலமி (பாகம் 3)
36) செம்மல் நபியைக் காணச் செல்வோம்!
37) தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன் ஸுரத்துல் பகரா
38) தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன் ஸுரத்துல் மாயிதா
39) தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன் அம்ம ஜுஸ்உ
40) தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன் ஹாமீம், காலபமா ஜுஸ்உகள்
41) தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன் ஸுரத்து மாயிதா முதல் ஸுரத்து ஹூது வரை
42) தஃப்ஸீர் அன்வாறுல் குர்ஆன் ஸுரத்து அன்பியா
43) தஃப்ஸீர் ஆயத்து அந்நூர்

44) தஃப்ஸீர் கபீர்
45) தஃப்ஸீர் காஸின்
46) தஃப்ஸீர் பத்ஹுர்ரஹ்மான்
47) தஃப்ஸீர் பைலாவீ
48) தஃப்ஸீர் மதாரிக்குல் தன்ஸீல்
49) தஃப்ஸீர் ராஜி
50) தஃப்ஸீர் ரூஹுல் மஆனி
51) தஃப்ஸீர் ஜவாஹிருள் குர்ஆன் (பாகம் 1, 2, 3, 4, 5)
52) தஃப்ஸீர் ஜலாலைன்
53) தஃப்ஸீர் ஸலீ
54) தஃப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத் (பாகம் 1, 2, 3, 6)
55) தப்ரானி
56) தபகாத் இப்னுஸஃத் (பாகம் 1)
57) தன்வீறுல் மிக்யாஸ்
58) தஹ்தீபுல்லுஙா
59) தஸ்ரீஹுல் அவ்தத் தர்ஜுமா ஷரஹுபாஜக்கி
60) தாரமீ
61) தராகுத்னி
62) தாரீகு மதீனத்தில் முனவ்வரா
63) தாவீலாத்துன்னஜ்மிய்யா
64) திர்மிதி
65) திருக்குர்ஆன் அத்தியாயம் 1 - 17
66) து ஹ்ஃபத்துல் ஆலி
67) தெளிவிலும் தெளிவு
68) நஸாஈ
69) நிஹாயத்துல் முஹ்தாஜ் ஷரஹுல் மின்ஹாஜ் (பாகம் 2)
70) நுஜ்ஹதுல் பஸாதீன்
71) நூர்
72) நூறுல் ஈமான்
73) நெருங்கிய தோழர்களும் நல்லுபதேசமும்
74) நேர்ச்சையும் சத்தியமும்
75) பத்ஹுர் ரப்பானீ
76) பத்ஹுர் ரஹ்மான் பீ தப்ஸீரில் குர்ஆன் (பாகம் 1)
77) பதாவா ஆலம் கீறி
78) பதாவா இப்னு தைமிய்யா 11
79) பதாவா ரம்லி
80) பதாவா ஹதீஸிய்யா
81) பிக்ஹுல் அக்பார்
82) பீஸபீல் ஒலியுல்லாஹ் அவர்கள் வரலாறு
83) புகாரீ
84) புர்தா ஷரீப்
85) புரவலர் போர்த்திய பொன்னாடை
86) புஷ்றா (இதழ் 4, மே - ஜுன் 2006)
87) பைஹகீ
88) மஆரிஃபுல் குர்ஆன்
89) மதாரிக்கில்

90) மதீனாவில் வாழும் மஹ்மூது நபியைத் தரிசிக்கச் செல்வது மகா பாவமா?
91) மஜ்மவுல் பஹ்ரைன் (பாகம் 7)
92) மஷ்னவீ ஷரீப்
93) மிர்ஆத்துல் முஷாஹிதீன்
94) மிர்காத் ஷரஹு மிஷ்காத்
95) மிஷ்காத்
96) முஃஜம் அஸ்வத்
97) முஅத்தா
98) முக்னியுல் லரீப் (பாகம் 1)
99) முஸ்லிம்
100) முஸ்தத்ரக்
101) முஸ்னத் அஹ்மத்
102) மெய்ஞ்ஞானப் பேரமுதம்
103) யாரஸுலுல்லாஹ் என அழைக்கலாமா?
104) ரியாளுஸ்ஸாலிஹீன் (பாகம் 2, 4)
105) ரூஹுல் பயான்
106) றிபாயியா
107) வலிமார்களின் அற்புதங்களில் வஹாபிகளுக்கு மறுப்புரை
108) வலிமார்
109) வழிகாட்டும் வலிமார்கள்
110) வஸீலாத் தேடல்களும் தெளிவான சட்டங்களும்
111) வஸீலா தேடுவது பற்றிய ஷரீஅத்தின் தீர்ப்பு
112) வஸீலா
113) வஸீலா என்றால் என்ன?
114) ஜவாஹிருஸ் ஸுலூக்கு
115) ஜம்வுல் ஜலாமிஃ ஷரஹுல் அகாயிது
116) ஜாமிவுஸ் ஸகீர்
117) ஜாமிஉல் கலீல்மினவ் அஹாதீஸின் நபவிய்யதிஸ் ஷரீபா
118) ஹாகிம்
119) ஹலால் ஹராம் சட்ட விதிகளும் உணவு, உடை வரையறைகளும்
120) ஹாஷியத்துஸ் ஸாவி (பாகம் 3)
121) ஹிதாயத்துல் அனாம் இலாஜியாரத்தில் அவுலியாஇல் கிராம்
122) ஹுஜ்ஜத்துல்லாஹி அலல் ஆலமீன்
123) ஷரஹ் அகீகத்துல் தஹாவி
124) ஷரஹு ஐனுல் இல்மி
125) ஷரஹு புஸுஸுல் ஹிகம்
126) ஷரஹ் முஸ்லிம்
127) ஷரஹு ஜாமிஉஸ்ஸகீர்
128) ஷரஹ் சிபா
129) ஷரீஆவின் பார்வையில் தஸவ்ஃப்
130) ஷுபுல் ஈமான்
131) ஸியாரத்தை நோக்கிப் பயணம்
132) ஸில்ஸிலாத்து அஹாதீஸ் ஸஹீஹா
133) ஸீரத்துன்னபவி
134) ஸுபிகள்

## நூலாசிரியரின் வெளிவந்த நூல்கள்

1. வலிமார்களும் வஸீலாத் தேடல்களும்.
   (இஸ்லாமிய ஆய்வு - 1988)

2. தெரிந்த விடைகளுக்கான கேள்விகள்.
   (அரசியல் - 1996)

3. தீவும் தீர்வுகளும்.
   (அரசியலும் வரலாறும் - 1998)

4. சிறுபான்மையினர் சில அவதானங்கள்.
   (அரசியலும் வரலாறும் - 2002)

5. முஸ்லிம் பூர்வீகம்
   (அரசியலும் வரலாறும் - 2006)

6. ஈமானியப் பேரொளிகள்.
   (இஸ்லாமிய ஆய்வு - ~~1988~~)
   2009

## விரைவில் வெளிவர இருப்பவை

1. வரலாற்றுப் பகிர்வில் இலங்கை முஸ்லிம்கள்.
   (வரலாறு)

2. தனித்துவ வரைபடத்தில் முஸ்லிம் தேசம்.
   (அரசியல்)

3. இஸ்லாத்தில் தஸவ்.்.ப்.
   (இஸ்லாமிய ஆய்வு)



**நமது** நாட்டின் தேசிய பத்திரிகைகளிலும், வாரப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைகளை மையப்படுத்தி எழுத்துருவாக்கம் செய்து வரும் 'ஹாதிபுல் ஹுதா' எம்.எம்.எம். நூறுல்ஹக் (JP) அவர்களின் ஆக்கங்கள் புறக்கணிக்க முடியாத வரலாற்றுப் பதிவேடுகளாகும்.

சமூக அரசியல் சார்ந்த பொருள்கோடலை தேவையான புள்ளிவிபரத் தரவுகளைக் கொண்டு இவர் முன்வைப்பதால் மற்றைய அரசியல் கட்டுரை ஆய்வாளர்களிலிருந்து பெரிதும் வேறுபடுவதுடன், இஸ்லாமிய ஆய்வுகளும், நியாய பூர்வமான தர்க்கரீதியான ஆதார எழுத்துக்களும் மற்றொரு உயர்வையும் அளித்து நம்மால் உவக்கப்படுமொருவராகத் திகழ்கின்றார்.

1988இல் வெளியான இவரது 'தீவும் தீர்வுகளும்' 2002இல் வெளியான 'சிறுபான்மையினர் சில அவதானங்கள்' 2006இல் வெளியான 'முஸ்லிம் பூர்வீகம்' என்ற அரசியல், சமூகம் சார்ந்த மூன்று நூல்களும் அறிவு ஜீவிகள் மற்றும் பல்கலைக்கழக மட்டங்களிலும், ஊடகத்துறையிலும் அதிகரித்த கவன ஈர்ப்புக்கு உட்பட்டதொன்றாகும்.

விமர்சன ரீதியான நியாயத் தன்மைகளை விரும்பாதவர்களுக்கிடையிலும் நூறுல் ஹக்கின் திடமானதும், தீர்க்கமானதுமுடைய எழுத்துக்கள் வரவேற்புக்குரியதாக இருப்பது இவரின் எழுத்தாளுமைக்கு இன்னொரு சான்றாகும்.

1983இல் 'அல்ஹுதா' காலாண்டிதழ், 1984இல் 'சோலை' கவிதை இதழ், 1988இல் 'வலிமார்களும் வஸீலாத் தேடல்களும்' போன்றவையும் மற்றும் 1993இல் 'இருபெருநாட்களின் சிறப்புமலர்', 1996இல் 'தெரிந்த விடைகளுக்கான கேள்விகள்', 1998இல் 'தீவும் தீர்வுகளும்', 2002இல் 'சிறுபான்மையினர் சில அவதானங்கள்', 2006இல் 'முஸ்லிம் பூர்வீகம்' ஆகிய ஆய்வு நூல்கள் இவரது சமய, இலக்கிய, அரசியல் துறைகளின் ஆரோக்கியமிக்க பங்களிப்புக்களாகும்.

Diploma in Mass Media வை பயின்ற இவர் பார்வை, உதயம், சங்கமம், இடி ஆகிய வாரப் பத்திரிகைகளில் உதவி ஆசிரியராகவும், முஸ்லிம் குரல் பத்திரிகையில் பிரதி ஆசிரியராகவும் கடமையாற்றியவருமாவார். அட்டாளைச்சேனையிலிருந்து வெளிவந்துகொண்டிருக்கும் எழுவான் பத்திரிகையில் பிரதி ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

எம்.எம்.எம். நூறுல்ஹக், மிஹ்லார், மருதூர் மெய்யொளி, எம்.என்.எச்., செஞ்சுடர், இலக்கணி, இனன், நபா, முஜாதலா, அபூமிஸ்பாஹுல் ஹக், அபூ பாத்திமா பர்வீன், சிறாஜுல் மில்லத் ஆகிய இயற்பெயர்களிலும், புனைப்பெயர்களிலும் இவர் எழுதி வருபவர்.

மர்ஹூம் அல்ஹாஜ் மௌலவி ஐ.எல். முஹம்மது முத்து [பஹ்ஜி] என்ற இவரது அருமைத் தந்தையார் மேற்கொண்டு வந்த சமூக, இலக்கிய, அரசியல், இஸ்லாமியப் பணிகள் நூறுல்ஹக்கிற்கு இயற்கைப் பின்னணியாக அமைந்திருப்பது, இவரது எழுத்துக்களை மேலும் செம்மைப்படுத்த உதவியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**ஏ.எம்.எம். ஜாபீர்** B.A., P.G.D. in Edu.
செயலாளர்,
'அபாபீல்கள்' கவிதா வட்டம்,
சாய்ந்தமருது-05
18-01-2009.

ISBN : 978-955-8105-02-3

**விலை : 200/=**